

கல்கி
KALKI
23.3.1969 40 காசு



பரிபூரண அழகு பராமரிப்பு—

எவ்வேளையிலும் எங்குமே

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் துணையுடன். கோல்ட் க்ரீமாக உபயோகியுங்கள்.

ஏனெனில், லாக்டோ-காலமைன் ஒரு உயர்ந்த கோல்ட் க்ரீம் போலவே, உங்கள் சருமத்தை சுத்திகரித்து, இயற்கையான ஈரத் தன்மையை அளிக்கிறது. சருமம் வறட்சியடையாமல், மிருதுவாக வும் மென்மையாகவும் இருக்க உதவுகிறது.

ஆனால்... இதுமட்டுமல்ல... காலமைன் மற்றும் விட்ச்ஹேஸல் சேர்ந்திருப்பதினால், லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை இதமாக பேணி அழகூட்டுகிறது... மேலும் இரவு, பகல்-எந்நேரத்திற்கும் உகந்த மேக்-அப் சாதனமான லாக்டோ-காலமைன் ஒப்பனையின் 'அடிப்படை' யாக விளங்குகிறது.

உங்கள் முக எழிலுக்கு உண்மையில் லாக்டோ-காலமைன் தவிர வேறு எதுவுமே வேண்டாம்.

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்
மாசில்லா அழகுக்கு!



க்ருக்ஸ் இன்டர்ஃப்ரான் லிமிடெட், பம்பாய்-25.

TAM



நுட்பமாகச் செய்யப்பட்ட 'கொலாப்ஸிபிள் ட்யூபுகள்' எவ்வளவு தேவையானாலும் தயாரிப்பாளர், பாக்கிங் துறையில் சிறந்த மெட்டல் பாக்ஸ் துணையை நாடுகின்றனர்



மக்கள் உபயோகிக்கும் பல விதப் பொருட்கள், மருந்து வகைகள், டாய்லெட் சாமான்கள், மடங்கக்கூடிய ட்யூப்களிலேயே அதிகமாக வருகின்றன. அத்தகைய பலதரப்பட்ட ட்யூப்களை — சின்னஞ்சிறு களிம்பு டப்பாக்கள் முதல் அசிடும் மை அடைக்கும் மிகப் பெரிய ட்யூப் வரை — மெட்டல் பாக்ஸ் தயாரிக்கிறது. அவை பலவித முகப்புகளும், உள் வண்ணப்பூச்சு முறைகளும் உள்ளவை. நாட்டின் எப்பகுதியிலும் அவை தாராளமாகக் கிடைக்கின்றன. அவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் தொழில் நுட்ப அறிவையும் மெட்டல் பாக்ஸ் மட்டுமே பெற்றுள்ளது.

மெட்டல் பாக்ஸ்-இந்தியாவின் மாபெரும் உலோக, காகித; பிளாஸ்டிக் பாக்கிங் சாதன தயாரிப்பாளர்கள். நாடு முழுவதும் விநியோக நிறுவனங்கள் உள. அவர் தம் ஆராய்ச்சியும், அநுபவமும் பாக்கிங் தொழிலின் முன்னேற்றத்துக்கு உதவுகின்றன. அவர்களின் புதிய பாக்கேஜுகள், உத்திகள், தொழில் துறைக்கும் தேசத்துக்கும் லாபகரமானவை. அவை வெளிநாடுகளில் இந்தியப் பொருள்களின் விற்பனைக்கு துணை புரிகின்றன. எனவே பெரிய, சிறிய உற்பத்தியாளர்கள் புதுமை பாக்கிங் சாதனங்கள் தயாரிக்க மெட்டல் பாக்ஸ் துணையை நாடுவதில் வியப்பொன்றுமில்லை.

MB மெட்டல் பாக்ஸ்

MB-4950

கல்கி


கீலக௵. பங்குனி௴ 10௨

1969 மார்ச் 23

பொருளடக்கம்

நரகமாகிவரும் நகரங்கள்	தலையங்கம்	— 5
ராஜாஜியின் கருத்துக்கள்	...	— 7
கவிஞர் அண்ணா	முதல் அமைச்சர் மு. கருணாநிதி	— 10
வேதமாதாவின் வித்தகப் புதல்வர்	...	— 12
கூலிக்காரன்	மீ. வி. சபரிராஜன்	— 15
பொன்னியின் செல்வன்	அமரர் கல்கி	— 18
மகாபாரதம்	ராஜாஜி	— 30
போடு ஷாவனீர் !	எஸ். வி. ஆர்.	— 34
செல்வம் புரியும் சேவகம்	அம்பி ஆசீர்வாதம்	— 36
007 பாஜு	குமரன் - விஜயா	— 38
நடிப்பு ஒரு நாடகமல்ல !	பாணன்	— 40
சிறுவர் விருந்து	வாண்டு மாமா	— 43
இளிஞ்சல் கோபுரம்	ஜெகசிற்பியன்	— 45
கண்ணாமூச்சி	முகுந்தன்	— 61
அன்பெனும் மருந்து	ரா. பா.	— 63
நக்ஷத்திரேய விஜயம்	எஸ். கிருஷ்ணமூர்த்தி	— 64
பெரியவர் சந்நிதியில்	உமாசந்திரன்	— 70
வட்டமேஜை	...	— 80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பரஸ்பர பிச்சை?
தில்லி
ராஜ்யங்கள்
மத்திய சர்க்கார்
வங்காள சர்க்கார்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 34

நரகமாகிவரும் நகரங்கள்

இந்தியாவில் உள்ள பெரிய துறைமுகப் பட்டணங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின் சிருஷ்டியாகும். அவை பெரிதாக வளர்ந்தன. மேலும் மேலும் பெரிதாக வளர்கின்றன. முன்பு ஏற்பட்ட ஒரு சரித்திர உண்மையைப் பிற்காலத்தில் மாற்றமுடியாது என்பதற்கு இந்தப் பெரும் துறைமுகப் பட்டணங்களே சான்று. அவற்றின் இடத்தில் வேறு பெரிய துறைமுக நகரங்கள் தோன்றி வளர அவை இடம் தருவதில்லை. இப்போது வேறு பெரிய துறைமுகங்களை ஏற்படுத்துவதற்குக் காலம் கடந்துவிட்டது. வர்த்தக ரீதியில் சிறந்ததாக ஒரு துறைமுகம் முக்கியத்துவம் பெறப் பல காரணங்கள் உண்டு. இத்தனையும் ஒரு புதிய துறைமுகத்துக்குச் சேரும்படியாக நம்மால் செய்ய முடியாது. எனவே பழைய துறைமுகங்களே வர்த்தக உலகத்தைத் தொடர்ந்து கவர்ந்து வருகின்றன. இப்படிப்பட்டவை கல்கத்தாவும், பம்பாயும், சென்னையும். இந்தப் பெரிய துறைமுகங்களின் முக்கியத்துவம் குறைவதற்குத் திட்டம் வகுப்பதையும் அவை அனுமதிக்கமாட்டா.

இதன் தவிர்க்க முடியாத விளைவாகத் தேசத்தின் எல்லாப் பெரிய ஆலைத் தொழில்களும் இந்த மாநகரங்களைச் சுற்றியே குழுமியுள்ளன. தாதுப் பொருள்களையும், சரக்குகளையும் ஏற்றுமதி இறக்குமதி செய்கிற துறைமுக வசதியைச் சார்ந்தே இந்தத் தொழிலகங்கள் வளர்கின்றன. உலகக் கடல் வாணிபம் போல் உள்நாட்டு ரயில்வேக்களும் இந்நகரங்களையே மையமாகக் கொண்டுள்ளன. எனவே கிராம மக்கள் தொழில் தேடி இந்நகரங்களுக்கே வந்து அடைபட நேருகிறது. புதிய தொழிலகங்களும் பழையவற்றை ஒட்டியே பெரும்பாலும் அமைய வேண்டியுள்ளது. இக்காரணங்களால், வீட்டு வசதி, குடிநீர் வசதி இவை குறைந்து பெரிய பிரச்னையாகிவிட்ட பின்பும் இம்மாநகரங்களில் மக்கட் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. உணவு தானியங்கள் நகரத்துக்கு வருவது பிரச்னையாகிவிட்ட பின்பும் இப்போக்கு மாறவில்லை. நகரில் எங்கு பார்த்தாலும் சேரிகள் தோன்றிவிட்டன. இவை நகரின் அழகைக் கெடுப்பது மட்டுமின்றி, மனிதாபிமான நோக்கில் அவமானகரமாக உள்ளன.

இவ்வாறு இந்தியாவில் ஒரு சில பெரிய நகரங்களுக்கு மக்கள் பெயர்வதை எவ்வாறேனும் தடுத்து, உள்நாட்டில் உள்ள சிறிய நகரங்களில் ஓரளவு சிறிய ஆலைகளை நிறுவி, அவற்றில் ஆங்காங்குள்ள கிராம மக்களை இழுத்துக் கொள்ளத் திட்டம் வகுத்தாக வேண்டும்.

விவசாய விளைச்சலைப் பெருக்கும் நல்ல இலட்சியத்துக்குப் பல வழிகள் உண்டு. நல்ல விதைகள் தருவது, உர வசதி அளிப்பது, பூச்சிகளை அழிப்பது, இயந்திர சாதனங்களை அதிகம் உபயோகிப்பது, என்றிப்படி. இவற்றில் உழவுத் தொழிலாளிகளுக்குப் பதில் இயந்திரங்களை உபயோகிப்பது உற்பத்தியில் லாபம் எடுக்க விரும்புவோருக்குப் பெரிய சபலமாகும். ஆனால் இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் அதிகமாகச் சென்றால், கிராமப்புறங்களில் வேலையின்மை அதிகமாகி நகரங்களுக்குப் பெயரும் மக்கள் தொகை மேலும் பெருகி, நகரங்களின் பிரச்னை படுமோசமாகும். மாநகர அமைப்பு முறை நிலை குலைந்தால் தேசத்துக்கு எத்தகைய உற்பாதமாகும் என்பதைக் கருத்தில் கொண்டே விவசாயத்தில் இயந்திர சாதனங்களைக் கைக்கொள்ள வேண்டும். நகரங்களில் ஜனத்தொகை பெருகுவதால் பொருளாதாரத்தில் மட்டுமின்றி, ஆரோக்கிய நிலையும் விபரீதமாகப் பாதிக்கப்படும். நகரங்களின் மக்கட் தொகை என்பது பல அம்சங்கள்கொண்ட ஒரு சிக்கலான பிரச்னை. இந்த அம்சங்களைத் தனித்தனியாகப் பிரித்து வைத்துத் தீர்வுகாண இயலாது. அனைத்தையும் ஒன்றாகத் தீர ஆராய்ந்து முழுவதற்குமாகத் தீர்வு காண வேண்டும். ரயில் மூலமும் சாலை மூலமும் உள்நாட்டில் விரைவில் போக்குவரத்து வசதி செய்து கொடுத்து, நாடெங்கிலும் சிறு தொழில் நகரங்களைப் பரவலாக அமைப்பதே தீர்வு என்பது என் கருத்து.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

என்ன சேதி?

பஞ்சாமிர்தத்துக்கு வரி

பஞ்சாமிர்தம் பழனியாண்டவருக்கு அபிஷேகம் செய்யப்படும் பொருள். அதை ஆண்டவன் பிரசாதமாக ஒரு தேக்கரண்டி அல்லது இரண்டு தேக்கரண்டி அளவுதான் ஒருவர் சாப்பிட முடியும். ஆகவே அதை உணவுப் பொருள் ஜாபிதாவில் சேர்த்து மத்திய சர்க்கார் வரி விதிப்பது முறையல்ல. மேலும் மதச்சார்பற்ற சர்க்கார் தெய்வப் பிரசாதமாகக் கருதப்படும் பொருளுக்கு வரி விதிக்காம லிருப்பது உசிதம். இதனால் கிடைக்கக்கூடிய வருமானத்தையும் கெட்ட பெயரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கெட்ட பெயர் தான் மிக அதிகமாக இருக்கும். அதனால் இவ்வரியைக் கைவிடுவதே மேல்.

வடமொழி வாடலாமா?

தாய் மொழிக்கும் ஆங்கிலத்துக்கும் மட்டுமே கல்வி முறையில் இடம் தருகிற இரு மொழித் திட்டத்தைத் தமிழக அரசாங்கத்தினர் அமுலாக்கிய பின் பள்ளிகளில் சம்ஸ்கிருத போதனை அடியோடு அகன்று விட்டதாகவே சொல்ல வேண்டும்.

பாரதப் பண்பு என்ன என்று அறியவும், ஆன்மிக உணர்வு பெறவும், இலக்கிய ரசானுபவம் பெறவும் சம்ஸ்கிருத ஞானம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. ஆனால் 'உள்ளதும் போச்சு' என்ற நிலையில் பிரிட்டிஷ் ஆட்சியில் சம்ஸ்கிருதக் கல்வி பெற்றிருந்த ஸ்தானமும் இன்று போய்விட்டது. இது மிகவும் விசனிக்க வேண்டிய நிலைமை.

விசனித்தால் போதாது. நிலைமையைச் சீர்திருத்த முயற்சி எடுக்க வேண்டும். குழந்தைகளின் நலனில் அக்கறையுள்ள பெற்றோர்களே முயற்சி எடுக்க வேண்டியவர்கள். இதை உணர்ந்து ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களின் தலைமையில் 'தமிழ்நாடு பெற்றோர் சங்கம்' அமைக்கப்பட்டிருப்பதை மனமார வரவேற்கிறோம்.

சம்ஸ்கிருதக் கல்விக்கு வசதி செய்து தர வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்துக்கு உணர்த்துவதற்காகச் சங்கப் பிரதிநிதிகளின் சம்மேளனம் மார்ச் 23ந் தேதி மயிலை சாஸ்திரி மன்றத்தில் நடைபெறவிருக்கிறது. சம்மேளனம் நல்ல முறையில் நடந்தேற வேண்டும் என்று வாழ்த்துகிறோம். அதன் முடிவுகளை அரசாங்கம் ஏற்க வேண்டும் எனவிரும்புகிறோம்.

தென் ஆப்பிரிக்காவில்....

அண்மையில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து 'இந்தியாவுக்கு வந்திருந்த திரு ஜி. என். நாயுடு வியப்பளிக்கும் சில விஷயங்களைத் தெரிவித்தார்.

தென் ஆப்பிரிக்காவில் நிற வேற்றுமை இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் பலர் மிகைப்படுத்துவதுபோல் அது ஒன்றும் பயங்கரமான அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை என்றார் அவர். தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் பகுதி என்றும், வெள்ளையர் அல்லாதார் பகுதி என்றும் உண்டு. வெள்ளையர் அல்லாதார் வெள்ளையர் பகுதியில் சொத்து வைத்துக் கொள்ள முடியாது. ஆனால் அப்படி ஏற்கனவே உள்ள சொத்தை அரசாங்கம் பறிமுதல் செய்வதில்லை; குறைந்த விலைக்கு விற்கப் பலவந்தப்படுத்துவதுமில்லை. குறிப்பிட்ட கால கெடுவுக்குள் சொத்தை விற்று விடவேண்டும் என்று மட்டுமே கூறுகிறது.

காந்தியத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்ட திரு நாயுடு நிற வேற்றுமையைச் சட்டென்று தென் ஆப்பிரிக்காவில் ஒழித்துவிட முடியாது என்றும், மனமாற்றத்துக்காகச் சாத்துவிக முறையில் நிதானமாகத்தான் போராட வேண்டும் என்றும் கருதுகிறார். இதற்கென்று ஆலோசனை கூறும் குழுவாகத் தென் ஆப்பிரிக்க இந்தியக் கழகம் இயங்கி வருகிறது என்றார்.

திரு ஜி. என். நாயுடு



அம்பிகைக்கு ஒரு கோடி!

கடந்த ஒரு மாத காலமாக, சென்னை டவுனில் தம்புசெட்டித் தெருவில் உள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் மிக உத்தமமான ஒரு காரியம் நடந்து வருகிறது. ஜகன்மாதாவுக்கு மிகவும் உகந்த லலிதா சகஸ்ரநாமத்தைக் கொண்டு கோடி அர்ச்சனை செய்யப்படுகிறது. ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு அவர்களுடைய அநுக்கிரகத்துடன் லோக க்ஷேமத்துக்காக நடக்கும் பணி இது. ஒரு சகஸ்ரநாம அர்ச்சனைக்கான கட்டணம் ரூ. 10. அர்ச்சனை புரிய விரும்புவோர், ஸ்ரீ எம். ஆர். நரசிம்மன், பாங்கர், 321, தம்பு செட்டித்தெரு, சென்னை—1 என்ற விலாசத்துக்குப் பொருள் அனுப்ப வேணும்.


நிபுணர் குழு

புதிதுப்புதிதாகச் சட்டங்கள், தினுசு தினுசாக வரிகள் என்று நாளொரு மேனியாக வளர்ந்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் நமக்கு அவ்வப்போது வரிகள் விஷயமாகவும் சட்ட நுணுக்கங்கள் சம்பந்தமாகவும் கிடைக்கக்கூடிய வரிச் சலுகைகள் பற்றியும் சந்தேகங்கள் எழுவது சகஜம். அத்தகையோருக்கு உதவுவதற்கென்றே சட்ட நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று உருவாகியிருக்கிறது சென்னையில். வரிகள், சட்டம், இன்ஷியூரன்ஸ் சம்பந்தமாக ஏதேனும் பிரச்னைகள் உள்ளவர்கள் தபால் தலையுடன் கூடிய தங்கள் விலாசமிட்ட உறை இணைத்துக் கடிதம் எழுதலாம்.

விலாசம்: Expert Services Bureau, 96, Mount Road, Madras-18.

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸர் ஹோமி மோடி அவர்களின் மரணம் நமது தேச சரித்திரத்தில் ஒரு சோக கட்டம். எல்லாவிதத்திலும் மகத்தான மனிதராக வாழ்ந்தவர் அவர். சுதந்திரக் கட்சியை ஸ்தாபிப்பதிலே அவர் பங்கு கொண்டது குறித்து அக்கட்சி பெருமிதம் உற்றிருந்தது. சுதந்திரக் கட்சியின் தன்னம்பிக்கைக்கு ஹோமி மோடியின் தீவிரமான ஆதரவும் ஒரு முக்கியமான காரணமா யிருந்தது.



தங்களது பணியின் சத்தியத் தன்மையில் நம்பிக்கை கொண்டவர்கள் யாருடைய மரணத்தைக் கண்டும் கலங்கலாகாது. மறைந்தவர் போக, மீதமுள்ளவர்கள் தங்களது ஈடுபாட்டை இரு மடங்காக்கிக் கொள்வதே இன்றைய தேவை.

★

அரசியல் சாஸனத்தின் 176வது பிரிவைப் படித்தால் பயனுண்டு. சட்டசபைக்கு கவர்னர் வழங்கும் உரையின் இலக்கணத்தை இப்பிரிவு கூறுகிறது:

> பொதுத் தேர்தல் முடிந்து சட்டசபையின் முதல் கூட்டம் நடக்கத் தொடங்கும்போதும், ஆண்டுதோறும் சட்டசபையின் முதல் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலும் கவர்னர் சட்டசபைக்கு (அல்லது மேல் சட்டசபை உள்ள ராஜ்யங்களில், கீழ் சட்டசபை மேல் சட்டசபை இரண்டும் ஒன்று கூடியுள்ள கூட்டத்துக்கு) உரை வழங்கி, **சபை கூட்டப்பட்டிருப்பதற்கான காரணங்களை** அதற்கு எடுத்துரைப்பார்.

ஸ்ரீ தர்மவீரா படிக்காமல் விட்டு இன்று சர்ச்சைக்குக் காரணமாகியுள்ள பாராக்கள் அனைத்தும் சட்டப்படி கவர்னரின் உரைக்குப் பொருந்தாதவை என்று இதிலிருந்து விளங்கும். கவர்னர் ஏற்கத் தகாத விஷயமாக இருந்ததோடு, சாஸன ஷரத்துப்படியும் உரைக்குத் தொடர்பற்ற விஷயங்களைக் கூறிய பாராக்களை கவர்னர் நீக்கியது மிகவும் சரியே.

★

திறமைசாலியான ஒருவர் தேர்தல் சூழலிலிருந்து விடுபட்டால் சுதந்திரமாகச் சிந்திக்கிறார்; தேச நலனை மனத்தில் கொண்டு சிந்திக்கிறார். திட்டக் கமிஷன் அங்கத்தினரான ஸ்ரீ ஆர். வேங்கடராமன் இதைத்தான் செய்து வருகிறார் என்று அவர் வெளியிடும் கருத்துக்களிலிருந்து தெரிகிறது.

முழு வடிவம் பெற்ற ஒரு பண்டத்தின் மீது மட்டுமே வரியும் தீர்வையும் விதிக்க வேண்டும் என்றும், அப்பண்டத்தில் உபயோகமாகின்ற தாதுப் பொருட்கள், அங்கங்கள் ஆகியவற்றின் மீது வரி விதிக்கக் கூடாது என்றும் ஸ்ரீ வேங்கடராமன் சமீபத்தில் கூறியிருக்கிறார். இதுபோல் பல சந்தர்ப்பங்களில் பல நல்ல அபிப்பிராயங்களை வெளியிட்டுவருகிறார்.

தில்லியிலும் சரி, ராஜ்யங்களிலும் சரி, தேச அபிவிருத்திக்காக அல்லாமல், வோட்டுப் பிடிப்பதற்காகவே திட்டங்கள் போடுவதாக ஆகிவருகிறது.

அபிவிருத்தி யடைந்த தேசங்களில், ஏழை மக்களை மேம்படுத்துவதற்காகப் போடப்படும் திட்டங்களின் தன்மை வேறு. அவ்வித அபிவிருத்தி காணாத நாடுகள் வகுக்க வேண்டிய திட்டங்களின் தன்மை வேறு. அபிவிருத்தி அடையாத நாடுகளில் இந்தியா முன் நிற்கிறது. இங்கு ஏழை மக்களை மேம்படுத்துவதற்காகப் போட வேண்டிய திட்டம் இப்போதுள்ள பாணியில் இருப்பதற்கில்லை.

சிறிய அளவில் உள்ள தனியார் தொழில்களுக்கே இங்கு அதிக கவனமும் ஆதரவும் தரப்பட வேண்டும். நம் நாட்டில் ராட்சத அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் ஊழல் நிருவாகத்தால் உதவாக்கரையாக வேண்டியதுதான்.

வோட்டுக்காகத் திட்டமிடுவதைத் தவிர்க்க வேண்டும். வோட்டுப் பெற்று அதிகாரத்தை நீடித்துக்கொள்கிற பசி இல்லாமல், விவேகமாகச் சிந்திப்பதே தம் கடமை என்று கருதுவோரையே திட்டங்களின் இயக்குனர்களாக்க வேண்டும்.

★

ஆந்திரத்தில் கம்மாக்களுக்கும் ரெட்டிகளுக்கும் இடையே உள்ள போட்டி யாவரும் அறிந்ததே. ஆனால் தெலிங்கானாவில் அதிக சுயாதிபத்தியம் கோரி நடக்கிற கிளர்ச்சி இந்த வகுப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டதே என்று எண்ணினால் தவறாகும். அல்லது, 'ஒரு பின்தங்கிய பகுதியை முன்னேற்றும் பிரச்னையே இது; தெலிங்கானாவில் அபிவிருத்தி கண்டுவிட்டால் கிளர்ச்சி முடிந்துவிடும்' என்றெண்ணுவதும் சரியல்ல. கம்யூனிஸ்டுகளின் நாச வேலை வேகமாகப் பரவி

வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு அந்தக் கோணத்திலேயே தெலிங்கானாவைப் பார்க்க வேண்டும். ருஷ்ய பாணியிலிருந்து தனிப்பட்ட ஆசியபாணி கம்யூனிஸத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தேசமெங்கும் நாசவேலை செய்யவும், கிளர்ச்சி புரியவும் தங்களைப் பயிறுவித்துக் கொண்டிருக்கிறார்கள். வங்காள ஆட்சியும், கேரள ஆட்சியும் இவர்களுக்குப் பொருத்த அனுகூலச் சூழ்நிலையை உண்டாக்கியுள்ளன.

எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பகுதி பின்தங்கி உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அப்பகுதி மக்களை வன்முறையில் ஈடுபடுத்துவது தேச விரோதிகளுக்குச் சுலபம். தெலிங்கானாவில் கம்யூனிஸ்டுகள் பல கொலைகள் புரிந்து, நிலப்பங்கீடு செய்து பயங்கர ஆட்சி நடத்தியதை மறப்பதற்கில்லை.

காங்கிரஸ் தலைவர்களின் உடனடிக் கவனத்தை அக்கட்சியின் உட்பூசல்களும் பிரச்னைகளும் கவர்ந்திருப்பது வாஸ்தவம். ஆனால் காங்கிரஸுக்குள் ஏற்படும் ஒழுக்கக் குறைவு உட்பட எல்லாவித ஒழுங்கீனங்களையும் கம்யூனிஸம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பரவி வருவதைக் கவனியாதிருப்பதற்கில்லை. இந்த ஆபத்தை உள்ளவாறு உணர்ந்து, உறுதியாகச் சிந்தித்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஒரு ஜனநாயகத்துக்குள் சிலர் அதிக சுயாதீனம் கேட்பது புரட்சிக்கும், பயமுறுத்தல்களுக்கும் அஸ்திவாரமாகி விடும். தேச நலனை விடக் கட்சி நலனையும், கட்சி நலனை விடச் சுயநலனையும் பெரிதாக நினைக்கும் பிராணபத்தான போக்கை நம் நாட்டில் ஒழித்தால்தான் ஆசிய கம்யூனிஸத்திடம் நாம் பதி போகாமல் இருக்க முடியும். அமெரிக்கா பிற நாடுகளின் விவகாரங்களிலிருந்து ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டதிலிருந்து தெற்காசியாவின் பலமற்ற ஜனநாயகங்களுக்கு ஆபத்து அதிகமாகி விட்டது.

★

ராம்கர் ராஜாவை மந்திரிசபையில் சேர்க்காமல் அவருக்குப் பதில் அவரது புதல்வருக்கு அப்பதவியை வழங்கலாம் என்கிற யோசனை வேடிக்கையானது. தென் இந்தியாவில் பழைய காலத்து வட்டாரங்களில் வழங்குகிற ஒரு கதையை இது நினைப்பூட்டுகிறது.

கிராமம் ஒன்றில் முன்சீபாக இருந்தார் ஒரு பிராமணர். அங்கு தலையாரியாக இருந்த ஹரிஜனுக்குப் பெருமாள் என்று பெயர். விஷ்ணு பகவானை அல்லவா பெருமாள் என்று சொல்வது வழக்கம்? தலையாரியை அந்தப் பெயரிட்டுக் கூப்பிடுவது முன்சீபுக்குச் சங்கடமாக இருந்தது. எனவே அவனை அழைத்துப் பெயரை மாற்றி வைத்துக் கொள்ளச் சொன்னார். பெயரை மாற்றிக் கொள்வதற்குச் சடங்கு செய்ய வேண்டும் என்றும், அதற்கு நிறையச் செலவாகும் என்றும் தலையாரி கூறினான். அந்தச் செலவு முழுவதற்கும் தேவைப்படும் பணத்தை முன்சீப்பே அவனுக்குத் தந்து, 'சீக்கிரம் பெயரை மாற்றிக் கொண்டு வந்து சேர்' என்று அனுப்பினார்.

ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்து அவர் சொன்னவாறே செய்து விட்டதாகத் தெரிவித்தான். ''உன்னுடைய புதுப் பெயர் என்ன?'' என்று கேட்டார் முன்சீப்.

''பெரிய பெருமாள்'' என்றான் தலையாரி.

இது கதை. ஏற்கனவே இருந்ததை மோசமாக்கியது புதிய மாற்றம்.

தகப்பனுக்குப் பதில் பிள்ளைக்குப் பதவி தருவது, பெருமாள் போய்ப் பெரிய பெருமாள் வந்த கதைதான்.

★

தனிப்பட்ட முறையில் பழிக்கப்பட்டுள்ள ஸ்ரீ மொரார்ஜி தேசாய் ராஜிநாமா செய்வதாகப் பயமுறுத்தியிருக்கிறார். என் யோசனையொன்றுக்குக் கவனம் தர வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை இது வலியுறுத்துகிறது. பார்லிமென்ட் அங்கத்தினர்களைக் கொண்ட மந்திரி சபையிடமே அரசியல் சாஸனப்படி இலாகாக்களைப் பிரதமர் ஒப்படைத்தாலும், நிதி, வெளி விவகாரம் ஆகியவற்றில் தேர்ந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு நிருவாகக் குழுவை நிறுவி, சர்க்காருக்கு ஆலோசனை கூறும் மகத்தான அதிகாரத்தை அதற்கு வழங்க வேண்டும் என்பதுதான் என் யோசனை.

தனிப்பட்ட முறையில் பிரதமருக்கு உள்ள கீர்த்தி என்கிற பிரமையே இன்றைய மந்திரி சபையைத் தொடர்ந்து நடத்த உதவுகிறது. உட்பூசல் ஏற்படுவது கூட இதற்கு உதவியாக இருக்கலாம். ஆனால் நீண்ட காலம் மக்கள் இந்த நிலை குறித்து அலட்சியமாக இருக்க முடியாது. துரித கதியில் சர்க்காரிடம் மக்களுக்கு மதிப்புக் குன்றத் தொடங்கும் என்பதை நினைவுகொள்ள வேண்டும்.

★

'தேசத்துக்குச் சரியான தலைமை தருவதற்குக் காங்கிரஸ் தவறி விட்டது; இத்தலைமையைத் தர எதிர்க் கட்சிகளுக்கும் போதிய சக்தி இல்லாததால் இந்திய ஜனநாயகம் நாச நிலையின் விளிம்பில் உள்ளது' என்று மக்கட் சபை நாயகர் ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி இம்மாதம் 13ந் தேதி புதுதில்லி ரோடரிக் கூட்டத்தில் கூறியிருக்கிறார். இன்றைய நிலைமைக்கு முற்றிலும் உகந்த வார்த்தைகளுக்கு அதிகமாகச் சபாநாயகர் ஒரு அட்சரம் கூடச் சொல்லவில்லை.

திரும்பவும் என் யோசனையைக் கூறுகிறேன். எல்லா நல்ல மனிதர்களும் கட்சியை மறந்து மக்களனைவரையும் கருத்தில் கொள்ளட்டும். எதிர்க் கட்சிகளை இணைக்கும் முயற்சிகள் தோற்றுவிட்டதால், ஒருதலைப் பட்சமாகச் சுதந்திரக் கட்சி ஓர் அதமபட்ச நெருக்கடித் திட்டத்தைத் தயாரிக்கட்டும்; அதை ஒப்புகிறவர்களையெல்லாம் சேர்த்துக் கொள்வதற்குக் கதவைத் திறந்து வைக்கட்டும். 'சட்டமும் ஒழுங்கும் வேண்டும்; திவாலா நிலை திரப் பொருளாதாரச் சீர்திருத்தம் வேண்டும்; கம்யூனிஸத்தின் எந்த ரூபத்தாலும் தேசம் விழுங்கப்படாமல் காக்க வேண்டும்' என்பதே இத்திட்டத்தின் சாரம். கட்சிகளின் இதரக் கொள்கைகளையெல்லாம் இப்போதைக்கு நிறுத்தி வைக்க வேண்டும். சிந்தனைத் தெளிவில் சிறந்த கட்சி அங்கத்தினர்கள் இந்தப் பொதுவான நெருக்கடித் திட்டத்தை வகுக்க வேண்டும்.



முன்னாள் முதல்வரும் இந்நாள் முதல்வரும்.

கலைஞர் அண்ணா

மு. கருணாநிதி

முதலமைச்சர், தமிழ்நாடு

கலைஞர்களைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா ஒரு முறை அழகாகச் சொன்னார்:

''ஏதேனும் ஒரு கலைத் துறையில் சிறப்பாகச் செயலாற்றிக் கொடி நாட்டியவர்களிடம் எந்தக் காரியத்தை ஒப்படைத்தாலும், அதனைத் திறம்படச் செய்து முடிப்பார்கள்; ஏனெனில் அவர்கள், தங்களைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிற அத்தனை பேர்களின் ஆசாபாசங்களையும் அறிந்து வைத்திருப்பவர்கள்'' என்றார் அவர்.

இதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமானால் அண்ணாவையேகூடச் சொல்லலாம். ஏனெனில் எந்தத் துறையில்தான் அவர் ஈடுபடவில்லை! எந்தத் துறையில்தான் அவர் வெற்றிக் கொடி நாட்டவில்லை?

மேடைப் பேச்சுக்கு அவர் தந்த மெருகினை மறக்க முடியுமா? எழுத்துலகுக்கு அவர் தந்த ஏற்றமிகு உயிரோவியங்களை மறக்க முடியுமா? நாடகக் கலையை அவர் வழிநடத்திச் சென்ற நளினத்தை மறக்க முடியுமா? முடிவில், நாடாண்ட விதத்தில் அவர் காட்டிய நயங்களைத்தான் மறக்க முடியுமா?

அவரது ஒப்பற்ற சாதனைகளுக்குக் காரணம், அவரே கூறியது போல், அந்தக் கலையுள்ளம்தான் அடிப்படை. ''என் தம்பிமார்களைவிட, ஏன், எல்லா அரசியல்வாதிகளைவிடவும் எனக்குக் கலைத் துறையில் நிறைய அநுபவம் உண்டு'' என்று அவர் கூறியிருக்கிறார்.


அவர் ஒரு கலைஞர். பேச்சுக் கலைஞரா? எழுத்துக் கலைஞரா? ஓவியக் கலைஞரா? அல்லது நடிப்புக் கலைஞரா? பிரித்துப் பதில் சொல்வது கடினம். அவர் எல்லாக் கலைஞருமாய், எல்லாருமாய் இருந்தார். 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' என்பது போல், அவரது கைவண்ணமோ, நாவண்ணமோ கருத்து வண்ணமோ படாத துறையில்லை; — பொருளில்லை. இருந்தாலும் நாடகம் — நடிப்புக் கலையில்தான் அவருக்கு நாட்டம் அதிகம்.

அரசியல் — கட்சிப் பிரச்னைகளில் மூழ்கி எழும் நேரம் போக எஞ்சிய நேரத்தை நடிப்புக் கலைஞர்களுடன் அளவளாவிக் கழித்தவர் அவர். ஒரு கருத்தை முதலில் பேச்சாகச் சொன்னவர் அவர். அடுத்துக் கட்டுரையாக எழுதியவர் அவர். அதுவும் போதாதென்று நாடகமாக வடித்துத் தந்தவர் அவர். முடிவாக, அந்த நாடகத்திலேயே நடித்துக் காட்டியவரும் அவர்தான்.

நாடகம் என்றதும் எனக்கு ''ஓர் இரவு'' நினைவுக்கு வருகிறது. நடிப்பிசைப் புலவர்

ஒரே இரவில் ''ஓர் இரவு.''





சொற்பொழிவுக் கலையில் மன்னாதி மன்னர்.

கே. ஆர். ராமசாமி கேட்டாராம்: 'புதிய நாடகம் இல்லையே அண்ணா!' என்று.

''வரம் தந்தேன் — வாங்கிக்கொள்'' என்று முனிபுங்கவர்கள் சொன்னது போல், இரவோடு இரவாக ஒரு நாடகம் — இணையற்றதோர் நாடகம் — அமரர் 'கல்கி'யிடமிருந்து 'தென்னாட்டின் பெர்னாட்ஷா' என்னும் பட்டத்தை வாங்கித் தந்த நாடகம் உருவாகி விட்டது. அதுதான் 'ஓர் இரவு'. அண்ணாவே சொன்னதுபோல், 'ஒப்பற்ற இரவு!' ஓரிரவில் நடந்து முடிகின்ற அந்தக் கதையை ஒரே இரவில் எழுதி முடித்தார். நாடகாசிரியன் என்ற முறையில் எனக்கு மலைப்பாக இருக்கிறது. இப்படியொரு சாதனையை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியுமா? இல்லை— அது அண்ணனால் மட்டுமே முடியும்!

ராஜாஜி, இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாகப் பதவியேற்றபொழுது, 'அவரால் அந்தப் பதவிக்குப் பெருமை ஏற்பட்டுவிட்டது' என்று கல்கி எழுதினார். என் அண்ணன் அரங்கத்திலேறி — அரிதாரம் பூசி நடித்ததால் நாடகத் துறைக்கே — நடிப்புக் கலைக்கே மாபெரும் மதிப்பு ஏற்பட்டு விட்டது. நடிகர்களைக் 'கூத்தாடிகள்' என்று நையாண்டி செய்தவர்கள், 'வேஷதாரிகள்' என்று ஏளனம் பேசியவர்கள் எல்லாம் வாயடங்கிப் போயினர். ''ஆய கலைகள் அறுபத்து நான்கில் நடிப்பும் ஒரு கலைதான்'' என்று உணர்த்தியவர் என் அண்ணன். பட்டம் காற்றில் பறக்கும்பொழுது அதோடு சேர்த்துக் கட்டியிருக்கும் வாலும் உயர உயரப் போகுமே! அப்படி அண்ணா அரசியல் உலகில் மேல் நிலைக்குப் போகப் போக, அவரது அந்தரங்கமான அன்புக்குப் பாத்திரமான நடிப்புக் கலையும் மேலே மேலே சென்றது. 'கூத்தாடிகள்', வேஷதாரிகள்' என்ற சொற்கள் மறைந்து, 'கலைஞர்கள்' என்ற புதிய சொல் பூப்போல மலர்ந்தது.

அண்ணாவின் இதயத்தில் தனியிடம் பெற்றவர் கலைவாணர் என். எஸ். கே. அவர்களுக்கிடையில் இருந்தது வெறும் பரிச்சயமோ— பழக்கமோ அல்ல. உறவு என்ற சொல் கூடப் போதாது. ஏதோ ஒரு வகையான உயிர்ப் பிணைப்பு. கலைவாணர் காலமாவதற்கு முன் கடைசி கடைசியாக அவர் திறந்து வைத்தது அண்ணாவின் திருவுருவப் படம். அண்ணா மறைவதற்கு முன் கடைசியாகத் திறந்து வைத்தது கலைவாணர் சிலை. எந்தக் கலைஞர்களுக்கு மத்தியில் இப்படியொரு உயிர்ப் பிணைப்பு இருந்தது?

''தமிழ் நாடக உலகுக்கு ஒரு பெர்னாட்ஷா கிடைத்து விட்டார்; ஒரு இப்ஸன் கிடைத்து விட்டார்; ஒரு மோலியர் கிடைத்து விட்டார்'' என்று கல்கி ஒரு முறை எழுதினார். 'கிடைத்து விட்டார்' என்று அவர் எழுதிய பொழுது நம் அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சி. ஆனால் இன்று அவர் மறைந்து விட்டார் என்று எண்ணும்பொழுது... ஐயகோ! எவ்வளவு பெரிய இழப்பு! கழகத்தினர் தங்கள் அண்ணனை இழந்துவிட்டனர். கலைஞர்கள், தங்களுக்கு நண்பனாய் — நல்லாசிரியனாய் — பாதுகாவலனாய் இருந்த ஓர் ஒப்பற்ற கலைஞரை இழந்து விட்டனர். 'கலை என்பது மக்களை மகிழ்விப்பதற்கு மட்டுமல்ல; அவர்களது மனங்களில் சிந்தனையைக் கிளற வேண்டும்' என்பதுதான் அண்ணாவின் கருத்து. அவர் வகுத்துத் தந்த கலைப் பாதையும் அதுதான். அந்தப் பாதையில் சென்று, கலையாலும் மக்களின் நிலை உயர்த்தப் பாடுபடுவதுதான் கலை உலகம் அவருக்குச் செலுத்தும் காணிக்கையாகும்!

கலைக்குள் அடங்கிய கலைஞர்.



சென்னை சட்டக் கல்லூரியில் அண்ணா சிலை திறப்பு விழா.



வேதமாதாவின் வித்தகப் புதல்வர்

காலம் வகுக்கவொண்ணாத வேத தருமத்தைப் போற்றும் அனைவரும் இந்த மார்ச் 21ந் தேதியை ஒரு பெருநாளாகக் கருதுவார்கள்.

வேதத்தில் ஊறி, வைதிகத்தில் நிலை நின்று, வேத சத்தியங்களைப் பரப்பி வரும் பெரியார், மதிப்புக்குரிய அக்னிஹோத்திரம் ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியார் அவர்களுக்கு அந்தச் சுபதினத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி நிகழ்கிறது.

இந்தப் பேரறிஞரின் பெரு வாழ்வை நினைவுகூர்ந்தால், அது கடந்த பல ஆண்டுகளில் வைதிகச் செல்வம் நம் நாட்டில் புத்துயிர் பெற்ற புனித சரிதமாகவே இருக்கும். அவ்வாறு புத்துயிர் ஊட்டிய மகான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீசுவரர்கள் வகுத்து வரும் தர்மப் பணிகளின் சரித்திரமாகவே இருக்கும்.

குடிப் பெருமை என்பது நம் தேசத்தில் விசேஷமானது. இந்தப் பெருமை நமது அக்னிஹோத்திரம் அவர்களின் விஷயத்திலோ அதி விசேஷமானது.

சடமர்ஷண மகரிஷியின் வழி வழியாக வந்து உதித்திருப்பவர் ஸ்ரீ அக்னிஹோத்திரம். சடமர்ஷணரின் பெயரை நினைவுகூருமுகமாகவே நம்மாழ்வாருக்கு 'சடகோபர்' என்று திருநாமம் தரப்பட்டது என்று ஒரு கருத்து உள்ளதாம். இதிலிருந்தே அந்த முனிவரின் பெருமையை உணரலாம்.

சடமர்ஷண கோத்திரத்தில் 'தாதாசாரியர்கள்' என்ற பரம்பரைக்குத் தனியான அந்தஸ்து இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் மூலபுருஷராம் நாதமுனிகளும், அம்மரபை வளர்த்தெடுத்த யாமுன முனியும் இந்த வம்சத்தில் பிறந்தவர்களே! இந்தக் குடும்பத்து மங்கை நல்லாள் ஒருத்தியின் தவப்புதல்வரே ஸ்ரீமத் ராமாநுஜாசாரியார்! விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்களுக்கு மத ஆலோசகர்களாக இருந்து ஆலயங்கள், திருக்குளங்கள் முதலிய பல திருப்பணிகளைச் செய்வித்த பஞ்சமத பஞ்ஜனர், லக்ஷ்மி குமாரர் ஆகியோர் தாதாசாரியர்களே. 'அய்யங்கார் குளம்' என்று வழங்கப்படும் நீர் நிலைகளை எடுப்பிக்க இவர்களே காரணம். ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடத்துவதில் லக்ஷ்மிகுமாரர் முக்கியமாக ஈடுபட்டிருந்ததால் இந்தக் குடிக்கு 'கோடி கன்னிகா தானம்' என்ற அடைமொழியும் ஏற்படலாயிற்று.

''சத்திரத்துச் சாப்பாட்டுக்குத் தாத்தய்யங்கார் உத்தரவா?'' என்று நம் தேசத்தில் ஒரு பொது வழக்கு உண்டல்லவா? இதில் குறிப்பிடப் பெறும் தாத்தய்யங்கார், நமது அக்னிஹோத்ரம் அவர்களின் மூதாதையே. விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஏழைகளுக்கு அன்னம் பாலிக்கும் அரும் பணிக்கு தாதாசாரியர்களே பொறுப்பு வகித்தார். அந்த சாம்ராஜ்யம் மறைந்தபின்பு இவர்களுக்கு அந்த அதிகாரம் போய் விட்டதால், பிற்காலத்தில் மேற்படி பழமொழி உண்டாகியிருக்கிறது!

ஆனால் இவர்கள் குடியில் என்றும் தடைப்படாத ஞான அன்னதானம் நடைபெற்று வருகிறது. வேத தர்மத்தைப் போதிப்பது தான் அது.

ஆதியிலிருந்து விஜயநகர ராஜ வம்சம், தஞ்சை நாயக வம்சம் ஆகியவற்றாலும், பிறகு முகமதிய மன்னர்களாலும் கூட சம்மானிக்கப்பட்ட தாதாசாரியர்களில் கும்பகோணம் அக்னிஹோத்திர பரம்பரை பெரு மதிப்புக்குரியதாக இன்றளவும் இலங்கி வருகிறது. சூரிய மண்டலத்தினுள் இருந்து உலகுக்கெல்லாம் உணவு படைப்பவனும், நம் உதரத்துக்குள் ஜாடராக்னியாக இருந்து உணவை உயிரோடு கலப்பவனுமான அக்னி சக்திக்கு அந்தணர்கள் தவறாமல் ஆஹுதி செலுத்தினால் உலகமே க்ஷேமமாக இருக்கும். இந்த அக்னிஹோத்திர அநுஷ்டானத்தை இடையறாது செய்து யக்ஞ நாராயணனைத் திருப்தி செய்வித்து, உலகுக்கு நலம் செய்கிற குடும்பம் நமது ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர்களுடையது.

ஞானம், அநுஷ்டானம், ஆசாரம், பிரசாரம் என்கிற நான்கிலும் சிறப்புப் பெற்ற கும்பகோணம் தாதாசாரிய குடும்பத்துப் பெரியவராகச் சென்ற ஆண்டுவரை வாழ்ந்தவர் தாத தேசிக தாதாசாரியர். ஐம்பதாண்டுகளுக்கு மேல் தடைப்படாத நித்திய அக்னிஹோத்திரம் செய்தும், யாகங்கள் பல நடத்தி வைத்தும், வேதப் பிரசாரம் செய்தும் புகழ்கொண்ட அப்பெரியாரது மூத்த புத்திரரே இன்று மணிவிழா காணும் ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியர்.

இளமையிலேயே லக்ஷணாந்தம் வேத அத்தியயனம் செய்தார். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய கிரந்தங்களைப் பயின்று தேர்ச்சி பெற்றார். இதற்கு அவரது முன்னோர்களே ஆசாரியர்களாக அமைந்தனர்.

இதன் பின் ஜகதாசாரியரின் அருளில் ஈடுபட்டதே ஸ்ரீ அக்னிஹோத்ரம் அவர்



களின் பெரும் பாக்கியம். கற்ற வித்தையை நடைமுறை உலக இயலோடு பொருத்தி, உலகுக்குப் பயன்படுத்துவதற்கு அவர் ஆக்கமும் ஊக்கமும் பெற்றது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடமிருந்தேயாகும். ''காமகோடி பீடம் ஆசாரியாளுடைய சேவை கிடைத்ததாலேயே பரந்த நோக்கத்தோடு தர்மப் பணியும் உலகப் பணியும் செய்ய வேண்டுமென்கிற ஆர்வம் ஏற்பட்டு, இதுவே வாழ்நாளின் லட்சியமாகவும் மாறிவிட்டது'' என்று உள்ளம் உருகிச் சொல்கிறார் ஸ்ரீ அக்னிஹோத்ரம். பழைமையான ஆசார அநுஷ்டானங்கள், சாஸ்திர ஞானம் இவற்றோடு இன்றைய உலகுக்கு அவற்றைப் பயன்படுத்தத் தேவைப்படும் நவீன முறைக் கல்வியையும், நவீன ஆராய்ச்சி முறைகளையும் 'தாம் மேற்கொண்டதற்கு ஸ்ரீ காமகோடி பெரியவாளே அடிகோலினார் என்று அவர் கூறுகிறார்.

நவ உலகமக்களின் மனத்தைப் படம் பிடித்தாற்போல் புரிந்து கொண்டு, அவர்களைப் பக்குவமாக நல்வழிப்படுத்துவதற்காக ஸ்ரீ காமகோடி பெரியவர்கள் இட்டிய திட்டங்களிலெல்லாம் முப்பதாண்டுகளாக முக்கியமான பங்கு கொண்டு அயராமல் உழைத்து வரும் ஸ்ரீ அக்னிஹோத்ரம் அவர்கள் நம் மதத்தைப் பற்றிய நவீனக் கருத்துக்களையெல்லாம் கரதலப் பாடமாக அறிந்தவர். உலக மதங்கள் அனைத்தைப்பற்றியும் அவர் கற்றறிய ஆசாரியர்களின் ஆணை தூண்டிவிட்டது. ஸ்ரீ அக்னிஹோத்திரம் அவர்கள் மகா புத்திமான். எனவே பண்டைக் கருத்துக்களையும் புதுக் கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கையில் பல அற்புத சிந்தனைகள் அவரது ஆராய்ச்சி அறிவில் பூத்துக் குலுங்கின. 'வேதத்தைக் குறித்துப் பிரசுரமாகும் எந்த நூலும் இவருக்கு அற்றுபடி' என்று சொல்லுமளவுக்கு இத்துறையில் ஆழ்ந்து ஈடுபட்டுக் கருத்துச் செறிவு நிறைந்த முடிவுகளை வெளியிடுவார் அவர். இதுநாள்வரை வேத தர்மம் பற்றி நாம் அறியாத — 'புரட்சிகரமான' என்று கூடச் சொல்வதற்குரிய — அபிப்பிராயங்களை அநாயாசமாக எடுத்துரைத்து நிலைநிறுத்துவதில் வல்லமை பெற்ற விற்பன்னர் அவர்.



ஆசாரியர்களும் அரிய சீடரும்

சுதந்திரப் போராட்டத்தின்போது, 'தேச விடுதலையே முக்கியம்; மதத்தைப் பற்றி என்ன இதுவல்ல சமயம்' என்ற கருத்து தலைவர்களிடமும் மக்களிடமும் வளரலாயிற்று. ஸ்ரீ ஆசாரியாள் இது பற்றி மிகுந்த கவலை கொண்டார்கள். தேசம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு மத உணர்வு முற்றிலும் மடிந்து போய்விட்டால், சுதந்திரத்துக்குப் பின் அதனை உயிர்ப்பிக்க முயலுவது வெள்ளம் கடந்த பின் அணை கட்டுவது போலாகுமே என்று விசாரமுற்றார்கள். எனவே பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் தூதுக் குழுக்களுடன் தேசத் தலைவர்கள் விவாதிக்கும் போதும், பிறகு அரசியல் சாஸனம் வகுக்கும்போதும் அதில் மத ரட்சணத்துக்கும் மதஸ்தாபனங்களுக்கும் கவனமே செலுத்தாத போதிலும், இந்த முக்கியமான அம்சத்தில் கவனம் திரும்பத் தாமே நன்முயற்சிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்த முயற்சிகளை மேற்கொண்டு 'பார்லிமென்டரி டெலிகேஷன்', 'கிரிப்ஸ் மிஷன்', 'காபினெட் மிஷன்', நமது அரசியல் சாஸனத்தின் நிர்ணய சபைக் கூட்டங்கள் ஆகிய முக்கிய நிகழ்ச்சிகளின்போது ஸ்ரீ அக்னிஹோத்ரம் ஆயிரமாயிரம் மைல்கள் அலைந்து திரிந்து அரும் பாடு பட்டதையெல்லாம் விளக்கப் புகுந்தால் அது ஒரு பெருங் காதையாக விரிந்து விடும். ஆனால் ஆசாரியாளின் அன்புச் சக்தியும் தவச் சக்தியும் இறுதியில் வென்று, அரசியல் சாஸனத்தில் மத சுதந்திரம் மதிக்கப்பட்டதும், மத ஸ்தாபனங்கள் மத்திய—ராஜ்ய 'கன்கரென்ட்' பட்டியலில் இடம் பெற்றதுமே நம் அக்னிஹோத்ரம் அவர்களின் அலுக்காத சேவைக்குப் பலனாக, பழமாகப் பழுத்தன எனலாம்.

இதே போல் ஹிந்து மதத்தின் பல்வேறு பிரிவினர்களை ஐக்கியப்படுத்துவதற்காக



40-ம் பக்கம் பார்க்க

ஆசாரிய சுவாமிகள் வகுத்த மடாதிபதிகள் மாநாடு, பாவை மாநாடு முதலியவற்றிலும் முக்கியமான கருவியாக இருந்திருக்கிறார் ஸ்ரீ அக்னி ஹோத்ரம். 'எனக்கு ஏதேனும் யோக்கியதை இருந்து, அது உலகுக்குப் பயனாயிற்று என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீ காமகோடி பீடம் ஆசாரியாளே. அவர்கள் கடந்த நாற்பதாண்டுகளாகத் தர்ம ரக்ஷணத்துக்குப் படும்பாடு எல்லையற்றது. அவர்கள் தர்மரக்ஷணம் செய்யாதிருந்தால் தமிழ்நாட்டின் சரித்திரமே வேறு திசையில் திரும்பியிருக்கும். மக்களுடைய க்ஷேமத்தையே எப்போதும் கருதி, தம் தபோ பலத்தையும், தெய்விக சக்தியையும் கொண்டு கருத்தைக் காரியமாக்கி வரும் ஸ்ரீமத் ஆசாரியாள் நடமாடும் தெய்வமே!' என்று மனம் நெகிழ்ந்து சொல்கிறார் ஸ்ரீ அக்னிஹோத்ரம் அவர்கள். ஆசாரியர்களது அனுக்கிரகத்துக்குப் பாத்திரமானதால் தாம் வைஷ்ணவராயினும் சைவம் முதலிய பிற மதங்களின் மீதும் தமக்குக் கௌரவ புத்தி இருப்பதாகச் சொல்கிறார்.

வேத வித்யைக்கு ஒரு விளக்கமாகத் திகழும் ஸ்ரீ அக்னிஹோத்ரம் அவர்கள் நான்கு வேதங்களையும் பாஷ்யங்களோடு கற்றிருப்பதுடன், ஸ்மிருதிகள், கல்ப சூத்திரம், மீமாம்சை இவற்றிலும் தேர்ச்சி பெற்றவர். இவற்றில் மேல் நாட்டவரின் ஆராய்ச்சி நூல்களையும் நுணுகிப் படித்திருக்கிறார். 'வேதங்கள் பழங்காலத்துக்குத் தேவைப்பட்ட பழைய நூல் மட்டுமல்ல, நம் காலத்துக்கும், எந்தக் காலத்துக்கும் தேவைப் படும் சகலவிஷயங்களையும் அள்ளி அளிப்பது வேதங்களே. வேதப் பண்பாடு ஒன்றே உலகைக் காக்க முடியும்' என்று கூறும் அவர் வேதங்களில் காணப்படும் மூவாயிரம் சிறு கதைகளைத் தொகுத்து மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார். இது புத்தக உருவில் வெளியானால் அதுவே ஸ்ரீ அக்னி ஹோத்திரம் அவர்களுக்கு மணிவிழாக் கௌரவமாக அமையும்.

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயப்படி பலருக்கு வேதம் போதித்திருக்கிறார் ஸ்ரீ அக்னி ஹோத்ரர். நார்டன், ராபர்ட் லிஸ்டர், லேனுட் போன்ற மேல் நாட்டு அறிஞர்களும் அவரிடம் சாஸ்திரம் கற்று, நமது பண்பாட்டின் பெருமையில் திளைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

அரசியலானாலும் சரி, பொருளாதாரப் பிரச்னையானாலும் சரி, வான வெளியில் ராக்கெட் பறக்க விட்டாலும் சரி, எதையுமே வேதக் கண்ணோட்டத்தோடு பார்த்து இசைத்துப் புதிய கருத்தைச் சொல்லும் இந்த மாபெரும் மறையவர் மணி விழாக் காண்கையில் வேதலக்ஷ்மியும், தர்மலக்ஷ்மியும் அவரை வாழ்த்துவர். ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளும், மற்ற மதாசாரியார்களும் மனமார ஆசிகூறுவார்கள். நாமும் நமது பணிவார்ந்த அன்பு வணக்கத்தை அவருக்கு அளித்து, 'இந்த வேத வித்தகர் வேதம் விதிப்பது போல் நூறாண்டு வாழ்க' என்று இதய பூர்வமாகப் பிரார்த்திக்கிறோம்.

மகாத்மாவின் மணிமொழி



சத்தியத்தை முற்றிலும் உணர்வதென்பது, ஒருவன் தன்னைத் தானே உணர்ந்து கொள்வதாகும்; தன் விதியை உணர்ந்து கொள்வதாகும்; அதாவது பூரணத்துவம் பெறுவதாகும். நான் சத்தியத்தைத் தேடுபவனே. பூரணத்துவம் பெறாத என் குறைபாடுகளை நான் மனநோவோடு உணர்கிறேன். இதிலேயே என் பலம் அனைத்தும் உள்ளது. ஏனெனில் ஒரு மனிதன் தன் குறைபாடுகளை அறிவது அபூர்வமாகவே உள்ளது.

கூலிக்காரன்

மீ. லி. சபரிராஜன்

காலை மணி ஒன்பது இருக்கும். ஒரு புகை வண்டி நிலையம். இரயில் புறப்படப் போகிறது. முதல் வகுப்புப் பெட்டியின் கதவு 'படா'ரென்று திறக்கிறது. இரண்டு மூன்று பெட்டிகள் ஒன்றன்பின் ஒன்றாய் உள்ளே வீசி எறியப்படுகின்றன. அதைத் தொடர்ந்து ஒரு மனித உருவம் நுழைகிறது. அது இராணுவ உடை அணிந்திருக்கிறது. ஆம், அவர் ஒரு கர்னல்; ஆங்கிலேயர். உள்ளே நுழைந்தவர், அதன் கைப்பிடியைப் பிடித்த வண்ணம் வெளியே பார்க்கிறார். ஒரு கிழவன் நின்று கொண்டிருக்கிறான். "ஜல்தி, ஓடு, வண்டி புறப்பட்டு விடும். நன்றி. மிக்க நன்றி. பஹுத் சலாம்!" என்றார் கர்னல். ஆங்கிலமும் இந்துஸ்தானியும் கலந்து பேசினார் அவர். கிழவன் அவ்விடத்தை விட்டு அகல்கிறான்.

'குப் — குப்' 'குப் — குப்' என்று புகையை விட்டுக் கொண்டு வண்டி புறப்படுகிறது.

உட்கார இடம் இல்லை. கர்னல் எட்வர்ட் ஃபிலிப், நின்றுகொண்டே அங்கிருந்தவர்களை ஒரு நோட்டம் விட்டார். முதியவர்கள், இளைஞர்கள், ஒரு குழந்தை, இரண்டு பெண்கள். ஒரு கோடியில், அவர் ஆங்கிலேயரா ? ஆம், அவரும் ஓர் ஆங்கிலேயர். பெயர் மைக்கேல் ஜார்ஜ். அவரும் ஓர் அதிகாரி; சிவில் அதிகாரி. முகம் மெழுகுப் பொம்மையைப் போலிருந்தது. அதில் எந்தவிதமான உணர்ச்சி

அண்ணலின் வாழ்விலே ...



பாவமும் இல்லை. முதலில் இராணுவ அதிகாரியை அவர் பொருட்படுத்தவேயில்லை. பின்பு, கவனித்தார். கர்னல் வேர்த்து விறுவிறுத்துக் களைத்திருந்தார். உடனே தம் இடத்தை விட்டு எழுந்து, "நீர் உட்காரும். களைத்திருக்கிறீர். மின்விசிறியும் அருகில் இருக்கிறது. வசதியாயிருக்கும்" என்றார்.

" மிக்க நன்றி " என்று கூறிவிட்டுக் கர்னல் உட்கார்ந்தார். அத்துடன் அங்கு பேச்சும் தொடங்கிற்று. கர்னல் பேசினார். "படைத் தலைவரிடமிருந்து திடீரென்று இன்று ஆணை வந்தது. ஒரு மணி நேரத்துக்குள் புறப்பட வேண்டியதாயிற்று. மனைவிக்கு உடம்பு சரியில்லை. வேலைக்காரன் ஒரு விபத்தில் அகப்பட்டுக் கொண்டான். தலையில் பலமான அடி. இரண்டு நாட்களாய் வரவில்லை. எல்லாவற்றையும் நானே செய்ய வேண்டியதாயிற்று. என்ன கஷ்டம் பாருங்கள், எப்படியோ ஒரு வகையாய்ப் புறப்பட்டேன். பாழாய்ப் போன அந்த பஸ், இரண்டு இடத்தில் பழுதடைந்து நின்று விட்டது. கடைசியில் ஒரு கல் நடக்க வேண்டியதாயிற்று. அல்ல, ஓடி வர வேண்டியதாயிற்று. இத்தனை பெட்டிகளையும் மூட்டை முடிச்சுக்களையும் இழுத்துக்கொண்டு இரைக்க இரைக்க ஓடி வந்தேன். நான் வந்து சேருவதற்கும் இரயில் புறப்படுவதற்கும் நேரம் சரியாயிருந்தது." — இதைச் சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் வாய்விட்டுச் சிரித்தார் கர்னல்.

இந்தியாவில் அவர் ஒரு கோட்டையை யாவது பிடித்ததில்லை. ஒரு சண்டையிலாவது கலந்துகொண்டதில்லை. இப்போது இரயிலைப் பிடித்தது ஒரு பெரிய கோட்டையையே பிடித்து விட்டது போலிருந்தது அவருக்கு. அவருடைய முகத்தில் திருப்தி நிலவியது.

மைக்கேல் ஜார்ஜின் முகம், சிரிப்பதா வேண்டாமா என்று யோசிப்பது போலிருந்தது. பின்பு, "உமக்கு அதிர்ஷ்டம். இங்கு கைகாட்டியில் ஏதோ பழுது ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் வண்டி இவ்வளவு நேரம் இங்கு இருந்தது. இல்லாவிட்டால் எப்போதோ புறப்பட்டுப் போயிருக்கும்" என்றார் அவர்.


"இருக்கலாம், இருக்கலாம். ஆனால் அந்த வெள்ளை வேட்டிக்காரன் எனக்கு உதவி செய்திராவிட்டால், நான் வண்டியைப் பிடித்திருக்கவே முடியாது" என்றார் கர்னல்.

"வெள்ளை வேட்டிக்காரனா? யார் அவன்? என்ன செய்



தான் ?" என்று கேட்டார் மைக்கேல் ஜார்ஜ்.

"அவன் மிக்க நல்லவன், கிழவன்; தங்கமானவன். இங்கு ஒரு கூலிக்காரன்கூடக் கிடைக்கவில்லை. எங்கே போய்த் தொலைந்தார்களோ ? இந்த வண்டியில் மூட்டை தூக்கியதற்கு ஏதாவது காசு கிடைத்திருக்கும். அதை உடனே செலவு செய்யாமலிருந்தால் நன்றாயிருக்குமா ? தேநீர் குடிக்கப் போயிருப்பார்கள். பெட்டிகளை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு, நடக்க முடியாமல் நடந்து வந்தேன். பலர் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவராவது இறங்கி வந்து உதவி செய்ய வேண்டுமே? இல்லை. இப்போதெல்லாம் இந்தியர்களுக்குத் தேசபக்தி



அதிகமாகி விட்டது. ஆங்கிலேயர்களுக்கு உதவி செய்வார்களா ? ஆனால் அந்த வெள்ளை வேட்டிக்காரன் மனிதப் பண்பு நிறைந்தவன். அவனும் ஜன்னல் வழியே தான் பார்த்துக் கொண்டிருந்தான். என்னைத் தொலைவில் பார்த்ததும் இறங்கி ஓடி வந்தான். சாமான்களை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு நடந்தான். மிக்க நல்லவன். கூலிக்காரனைப் போலவே இருந்தான். ஆனால் கூலி வேலை செய்து பிழைப்பவனல்ல. தக்க சமயத்தில் உதவி செய்ததற்காக இரண்டு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினேன். ஆனால், அதைப் பெற்றுக் கொள்ள அவன் மறுத்து விட்டான். 'சலாம்' செய்து விட்டுப் போய் விட்டான். எனக்குச் சங்கடமாய்ப் போச்சு. நம்முடைய நன்றியைக் காட்ட ஒன்றுமே செய்ய முடியவில்லையானால் சங்கடமாய்த்தானே இருக்கும் ?'' கர்னல் 'சள சள' வென்று பேசிக் கொண்டே போனார்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வண்டி ஒரு பெரிய ஜங்ஷனில் நின்றது. அங்கு பெருங் கூட்டமாயிருந்தது. ஒரே இரைச்சல். ஆரவாரம்.

''என்ன, ஏதாவது வேடிக்கையா ? கூட்டம் பெரிதாயிருக்கிறதே !'' என்று கேட்டார் கர்னல்.

மைக்கேல் ஜார்ஜ் அமைதியாக, ''காந்தி இந்த இரயிலில் வருகிறார். ஒரு வேளை இங்கு இறங்குகிறார் போலும் '' என்றார்.

கர்னல் வியப்புடன், ''ஓ, அப்படியா !'' என்றவர், ''அவரை ஒருமுறை பார்க்க வேண்டும். நான் பார்த்ததேயில்லை '' என்றார்.

''எங்களைப் போன்ற நிர்வாக அதிகாரிகளுக்கெல்லாம் அவரை நன்றாய்த் தெரியும். பார்ப்பதற்கு அப்படியொன்றும் வசீகரமானவரல்லர். எளிதில் கண்டுபிடித்து விடலாம். பல்லெல்லாம் போயிருக்கும். கீழ் வரிசைப் பல் இரண்டு மட்டும் இருக்கும்,'' என்றார் மைக்கேல் ஜார்ஜ்.

இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தார் கர்னல். திடீரென்று அவர் பரபரப்புடன், ''அதோ, அதோ! அவனேதான் !'' என்றார்.

'' யார் ?'' என்று கேட்டார் ஜார்ஜ் அமைதியாக.

''என் கூலியாள் '' என்றார் கர்னல்.

ஜார்ஜ் வேண்டாவெறுப்பாய்த் தலையை நீட்டி வெளியே பார்த்தார். மறு விநாடி அவரும் பரபரப்புடன், ''அவரா உம்முடைய பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்தார் ?'' என்று கேட்டார்.

''ஆம், ஏன் ?''


''அவர்தாம் மிஸ்டர் காந்தி !'' என்றார் ஜார்ஜ்.

கர்னல் சிலை போலானார்.

ஆதாரம் : 1954ல் 'சண்டே ஸ்டாண்டர்ட்'டில் வெளியான ஒரு கட்டுரை.



அதிக
மணம்,
அதிக
மென்மை
CINTHOL
மென்மை, அன்றலர்ந்த மலரின்
புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11 (ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து-நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும் உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
ஜி-11 கொண்ட சிந்தாலைப் போல வேறெந்தப் பவுடரும் உங்களைப் பாது காப்பதில்லை



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பத்தாம் அத்தியாயம்

அநிருத்தப் பிரம்மராயர்

இந்தக் கதையின் ஆரம்ப காலத்திலேயே நமக்கு நெருங்கிப் பழக்கமான ஆழ்வார்க்கடியான் நம்பியைக் கொஞ்ச காலமாக நாம் கவனியாது விட்டுவிட்டோம். அதற்காக நேயர்களிடமும் நம்பியிடமும் மன்னிப்புக் கோருகிறோம். முக்கியமாக, நம்பியின் மன்னிப்பை இப்போது நாம் கோரியே தீர, வேண்டும். ஏனெனில் ஆழ்வார்க்கடியான் இப்போது வெகு வெகு கோபமாயிருக்கிறான்! அவனுடைய முன் குடுமி இராமேசுவரக் கடற்கரையில் அடிக்கும் காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. அவனுடைய கைத்தடியோ தலைக்கு மேலே சுழன்று கொண்டிருக்கிறது. அவனைச் சுற்றி ஆதி சைவர்களும் வீர சைவர்களும் பலர் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்ப்பாட்டம் பலமாக இருப்பதால், ஆழ்வார்க்கடியானுடைய கதி யாதாகுமோ என்று நமக்குக் கொஞ்சம் கவலையாகவும் இருக்கிறது. எனினும் நம்பியின் நரசிம்மாவதாரத் தோற்றமும் அவனுடைய கைத்தடி சுழலும் வேகமும் அந்தக் கவலையைப் போக்குகின்றன.

வந்தியத்தேவனும் இளையபிராட்டியும் பேசியதை ஒட்டுக் கேட்ட ஆழ்வார்க்கடியான் பழையாறையிலிருந்து அன்றைய தினமே புறப்பட்டான். வாயு வேக மனோவேகமாகத் தென் திசையை நோக்கிச் சென்றான். வழியில் எங்கும் அவன் சைவ வைஷ்ணவச் சண்டையில் இறங்கவில்லை. காரியத்துக்குக் குந்தகம் வரக்கூடாதென்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வலுவில் வந்த சண்டைகளைக்கூட வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு நடந்தான். மதுரையில் சிறிது நேரம் தங்கினான். அங்கு அவன் அறிய விரும்பிய செய்தியை விசாரித்து அறிந்து கொண்டு இராமேசுவரத்துக்குப் புறப்பட்டான்.

வந்தியத்தேவன் பூங்குழலியின் படகில் சென்று இலங்கைத் தீவில் இறங்கிய அதே நாள் மாலையில் ஆழ்வார்க்கடியான் நம்பி இராமேசுவரம் வந்து சேர்ந்து விட்டான்.

அந்தப் புண்ணிய பூமியை மிதித்தவுடனே ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் அத்தனை நாளும் அடங்கிக் கிடந்த வைஷ்ணவ ஆர்வம் கரையை உடைத்துக் கொண்டு பொங்கி விட்டது. இராமேசுவரத் தீவில் எங்கெங்கும் மொய்த்துக் கொண்டிருந்த வீர சைவ பட்டர்கள் அந்த ஆர்வத்துக்குத் தூபம் போட்டுவிட்டார்கள். அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு வரும் யாத்திரீகர்களுக்கு வழி காட்டி அழைத்துச் சென்று பற்பல தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணி வைப்பதும், ஆலயத்தில் மூர்த்தி தரிசனம் செய்து வைப்பதும், அந்தந்தத் தீர்த்தம் — மூர்த்தி விசேஷங்களை எடுத்துச் சொல்லுவதுமே அவர்களுடைய அலுவல்கள். எனவே, புதிய யாத்திரீகர்களைக் கண்டதும் பட்டர்கள் பலர் சென்று சூழ்ந்து கொள்வார்கள். அவ்விதமே ஆழ்வார்க்கடியானையும் சுற்றி மொய்த்துக் கொண்டார்கள்.

''அப்பனே! வா! வா! இந்த ஸ்தலத்திலுள்ள அறுபத்து நான்கு தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து உன் தேகத்தில் தரித்திருக்கும் வைஷ்ணவ பாஷாண்ட

சின்னங்களைக் கழுவித் துடைத்துக் கொள்! இராமரின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிய ஸ்தலம் அல்லவா இது? வைஷ்ணவ பாஷாண்ட மதச் சின்னங்களை நீ அணிந்ததினால் ஏற்பட்ட பாவங்களையும் போக்கிக் கொள்ளலாம்!'' என்று ஒரு பட்டர் விந்தியாசமாகப் பேசினார்.

இன்னொருவர் குறுக்கிட்டு, ''இராமதீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், ஆஞ்சநேய தீர்த்தம், சுக்ரீவ தீர்த்தம் — இப்படி அறுபத்துநாலு தீர்த்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அந்தந்தத் தீர்த்தத்தில் தலை முழுகி அவரவர்களுடைய தோஷத்தைப் போக்கிக் கொண்டார்கள். நீ என்னுடன் முதலில் ஆஞ்சநேய



தீர்த்தத்துக்கு வா ! வைஷ்ணவ சின்ன தோஷத்துக்குச் சரியான சங்கல்பம் பண்ணி வைக்கிறேன் !'' என்றார்.

மற்றொரு பட்டர், ''அப்பனே! இவர்கள் சொல்வதைக் கேளாதே. ராமர் ராவணனைக் கொன்ற பிரும்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொள்வதற்காகச் சமுத்திர மணலைப் பிடித்து வைத்துச் சிவலிங்கமாக்கிப் பூஜித்த இடத்துக்கு உன்னை நேராக அழைத்துப் போகிறேன்'' என்றார்.

ஆழ்வார்க்கடியான் கண்ணில் தீப்பொறி பறக்க எல்லாரையும் ஒரு தடவை விழித்துப் பார்த்து, ''நிறுத்துங்கள் உங்கள் அபத்தப் பேச்சை ! முதலில் நீங்கள் சொன்ன தீர்த்தங்களினால் உங்களுடைய நாவை அலம்பி உங்கள் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள் !'' என்றான்.

''ஓஹோ! இராமன், லக்ஷ்மணன் என்றெல்லாம் சொன்னதனால் எங்களுக்குப் பாவம் வந்திருக்கும் என்று நினைக்கிறாயா? அப்படி ஒன்றுமில்லை. இந்த க்ஷேத்திரத்துக்குப் பெயரே இராமேசுவரம். இராமர் ஈசுவரனாகிய சிவபெருமானைப் பூஜை செய்து பாவத்தைப் போக்கிக் கொண்ட இடம். அத்துடன் இராமர் என்ற பெயரில் இருந்த தோஷமும் போய்விட்டது !'' என்றார் ஒரு வீர சைவ பட்டர்.

''ஓ, அஞ்ஞான சிரோமணிகளே ! ஏன் இப்படித் தலைக்குத் தலை உளறுகிறீர்கள்? இந்த ஸ்தலப் பெயரின் அர்த்தம் இன்ன தென்பதையே நீங்கள் தெரிந்து கொண்ட பாடில்லை!''

''நீதான்சொல்லேன், பார்ப்போம்!''

''பிரம்மாவினுடைய ஒரு தலையைப் பறித்ததினால் சிவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துவிட்டது. திருமாலின் பூரண அவதாரமாகிய இராம பிரானுடைய பாதம் பட்டுப் புனிதமான இந்த இடத்துக்குச் சிவன் வந்து அந்தப் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொண்டார். இராமரை ஈசுவரன் பூஜித்த இடமானபடியால் இராமேசுவரம் என்ற பெயர் ஏற்பட்டது ! தெரிந்து கொண்டீர்களா, மூடசிகாமணி பட்டர்களே!'' என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜித்தான்.

''யாரடா அவன், எங்களை மூடசிகாமணிகள் என்பது ? அடே தடியா! நீ என்ன தலையில் கொம்பு முளைத்தவனா?'' என்று ஒரு பட்டர் சீறினார்.

''இல்லை, ஐயா, பட்டரே ! என் தலையிலே கொம்பு முளைக்கவில்லை ; கையிலேதான் இந்தக் கொம்பு இருக்கிறது! என்னை யார் என்று கேட்டீர் அல்லவா ? சொல்லுகிறேன். திருநகுருகூரில் அவதரித்து வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரின் அடியார்க்கு அடியான்! மற்றவர்களை மண்டையில் நையப் புடைக்கும் கைத்தடியான் !'' என்று தடியைத் தூக்கிக் காட்டினான்.

''ஆழ்வார்க் கடியார்க் கடியானே ! நீ ஏன் உன் தலையில் முன்புறத்தில் குடுமி வைத்திருக்கிறாய் ? அதையும் மழுங்கச் சிரைத்து விட்டாயானால், உன் மண்டையின் உள்ளும் புறமும் ஒன்றாயிருக்கும்!'' என்றார் ஒரு சைவர்.

''பட்டர்களே ! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே வந்து என் முன் குடுமியை எடுத்து விடுவதாகவே எண்ணியிருந்தேன். அதற்குள் நீங்களே ஞாபகப்படுத்தினீர்கள்!....''

''அடே ! நாவிதர் தெருவுக்குச் சென்று ஒரு நாவிதனை அழைத்து வாருங்களடா ! கத்தியை நன்றாய்த் தீட்டிக் கொண்டு வரச் சொல்லுங்கள் ! இவனுடைய சிகையை ஆணி வேரோடு களைந்தெறியச் சொல்லலாம்!'' என்றார் ஒரு பட்டர்.

''இதற்கு நாவிதனைக் கூப்பிடுவானேன் ? நாமே அந்தக் கைங்கர்யம் செய்துவிடலாமே? நல்ல கூர்மையான கத்தியாகக் கொண்டு வாருங்கள்!'' என்றார் இன்னொரு சைவர்.

''கொஞ்சம் பொறுங்கள்; இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது. ஒரு காலத்தில் என் தலை முழுதும் சிகை அடர்த்தியாக இருந்தது. ஒரு சைவனுடைய மண்டையை உடைத்துவிட்டு என் சிகையிலிருந்து ஒரு ரோமத்தை வாங்கி விடுவதென்று விரதம் எடுத்துக் கொண்டேன். அதன்படி முக்காலே அரைக்கால்வாசி சிகை தீர்ந்து விட்டது. இந்த ஊரில் என் முழு விரதத்தையும் நிறைவேற்றிக் கடலில் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். எங்கே, ஒவ்வொருவராக உங்களுடைய மண்டையைக் காட்டுங்கள், பார்க்கலாம் !'' என்று ஆழ்வார்க்கடியான் கைத் தடியை ஓங்கினான்.

''அடேடே! இந்த வைஷ்ணவன் என்ன துடுக்காகப் பேசுகிறான் ?'' என்று சொன்னார் ஒருவர்.

''எங்கள் எல்லாருடைய மண்டையையும் உடைத்து விடுவாயா? உன்னால் முடியுமா?'' என்று கூறினார் இன்னொருவர்.

''முடியாமலா முக்காலே அரைக்கால் பங்கு சிகையை எடுத்துவிட்டிருக்கிறேன்?'' என்று கூறி ஆழ்வார்க்கடியான் தடியை வேகமாகச் சுழற்றத் தொடங்கினான்.

''அடியுங்கள்! பிடியுங்கள்! கட்டுங்கள் ! வெட்டுங்கள் !'' என்று

தலைக்குத் தலை கத்தினார்களே தவிர, அக்கூட்டத்தில் யாரும் ஆழ்வார்க்கடியானுக்கு அருகில் நெருங்கவில்லை.

அச்சமயம் வெகு சமீபத்தில் எழுந்த ஒரு கோஷம் அவர்கள் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது.

'' திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர சோழ பராந்தகரின் மகா மான்ய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மாதிராஜர் வருகிறார்! பராக்! பராக்!''

எல்லாரும் திகைத்துப் போய்க் கோஷம் வந்த திசையை நோக்கினார்கள். ஆழ்வார்க்கடியான் எல்லாரிலும் அதிகமாகத் திகைத்துத் தனது கைத்தடியைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு பார்த்தான்.

அவர்கள் நின்று சண்டையிட்ட இடம் இராமேசுவரக் கோயில் மதிளின் ஓரமான ஒரு முடுக்கு. அந்த முடுக்குத் திரும்பியதும் எதிரே விரிந்து பரந்த கடல். அக்கடலின் காட்சியோ கண்கொள்ளாத அற்புதக் காட்சியாயிருந்தது. பெரிய பெரிய மரக்கலங்கள், நாவாய்கள், சிறிய கப்பல்கள், படகுகள், ஓடங்கள், வள்ளங்கள், வத்தைகள், கட்டுமரங்கள் ஆகியவை நெடுகிலும் வரிசை வரிசையாகக் கண்ணுக் கெட்டிய தூரம் காணப்பட்டன. பாய் மரங்களிலிருந்து படபட்வென்று காற்றில் அடித்துக் கொண்டு பறந்த வெண்ணிறப் பாய்கள், கடலையும் வானத்தையும் தூரத்திலே இட்டுத் திட்டாகத் தோன்றிய பல தீவுகளையும் பெரும்பாலும் மறைத்துக் கொண்டிருந்தன.

மேலே சொன்னவாறு கட்டியங் கூறிக் கொண்டு காவல் வீரர்கள் முன்னும் பின்னும் தொடர, சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் பெற்ற முதன் மந்திரி அன்பில் அநிருத்தப் பிரமராஜர் ராஜ கம்பீரத்துடன் ஒரு படகில் வந்து கொண்டிருந்தார். கரையில், கோயில் மதிள் ஓரமாக நடந்து கொண்டிருந்த சச்சரவை அவர் கவனித்தார். கூட்டத்தின் நடுவில் கக்கத்தில் தடியுடன் பரம சாதுவைப் போல் நின்ற ஆழ்வார்க்கடியானைக் கையினால் சமிக்ஞை செய்து அருகில் அழைத்தார். ஆழ்வார்க்கடியான் பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு கடற்கரையோரம் சென்று நின்றான்.

''திருமலை! இது என்ன தெருக்கூத்து?'' என்றார் அநிருத்தர்.

'' குருவே! எல்லாம் கபட நாடக சூத்திரதாரியான அந்தக் கண்ணனின் திருக்கூத்துத்தான்! என் கண்களில் காண்பதை நான் நம்புவதா, இல்லையா என்றே தெரியவில்லை. நான் காண்பது கனவா? அல்லது எல்லாம் வெறும் மாயையா?....''

''திருமலை! உன்னைப் பரம வைஷ்ணவன் என்று நினைத்தேன். எப்போது பிரபஞ்சத்தை மித்யை என்று சொல்லும் மாயாவாதியானாய்?''

'' குருவே! பரம வைஷ்ணவ பரம்பரையில் அவதரித்த தாங்கள் சைவ சமயி ஆகும்போது நான் ஏன் மாயாவாதி ஆகக் கூடாது? என்னுடைய பெயரை மாற்றிக் கொண்டு ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியாரின் அடியார்க்கடியான் ஆகிவிடுகிறேன்....''

'' பொறு! பொறு! நான் சைவ சமயி ஆனதாக யார் சொன்னது?''

'' தங்கள் திருமேனியில் உள்ள சின்னங்கள் சொல்கின்றன!''

'' ஆகா! திருமலை! நீ இன்னும் முன்போலவே இருக்கிறாய்! புறச் சின்னங்களுக்கே முக்கியம் கொடுக்கிறாய்! நெற்றியில் இடுகிற சந்தனத்தைச் சாய்த்து இட்டால் என்ன? நிமிர்த்து இட்டால் என்ன?''

''குருவே! நான் ஒன்றும் அறியாதவன்; எது முக்கியம், எது அமுக்கியம் என்று தெரியாதவன். தாங்கள்தான் என்னைத் தெளிவித்து ஆட்கொள்ள வேண்டும்.''

''எல்லாம் தெளிவிக்கிறேன். நான் தங்கும் இடத்துக்கு வந்து சேர்! அதோ கடலில் ஒரு சிறிய தீவு தெரிகிறது பார்த்தாயா? அங்கேயுள்ள மண்டபத்துக்கு வா!''

'' குருவே! இதோ இந்தச் சண்டைக்காரச் சைவர்கள் என்னை வர விடவேண்டுமே?''* என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கையினால் அவர்களைச் சுட்டிக் காட்டினான்.

அதுவரை சும்மாயிருந்த வீர சைவர்கள் உடனே நெருங்கிவந்தார்கள்.

''பிரம்மாதிராஜரே! இந்த வைஷ்ணவன் எங்கள் மண்டைகளை உடைத்து விடுவானாம்! இவனைத் தக்கபடி தண்டிக்க வேண்டும்!'' என்று ஒருவர் ஆரம்பித்தார். மற்றவர்கள் தலைக்குத் தலை பேசலானார்கள்.

'' இவனுக்குத் தண்டனை நான் கொடுக்கிறேன். நீங்கள் போகலாம்!'' என்றார் அநிருத்தர்.

இதனால் அவர்கள் திருப்தி அடையவில்லை. '' நாங்களே இவனுக்குத் தண்டனை கொடுக்கக் கூடாதா? இவனுடைய முன் குடுமியைச் சிரைத்து, இவனுடைய ஊர்த்வ சின்னங்களையெல்லாம் அழித்து, இவனைக் கிணற்றில் போட்டு முழுக்காட்டி....'' என்று அடுக்கினார் ஒருவர்.

''என்ன சொன்னீர்கள்?'' என்று ஆழ்வார்க்கடியான் கண்களில் தீ எழத் திரும்பி நோக்கினான்.

அநிருத்தப் பிரம்மராஜர் அப்போது "பட்டர்மணிகளே! இவன் பெரிய முரடன். இவனைத் தண்டிக்க உங்களால் ஆகாது. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

பிறகு தம்மைத் தொடர்ந்து வந்த படகில் இருந்த அகப் பரிவார வீரர்களைப் பார்த்து, "உங்களில் எட்டுப் பேர் இறங்கி இவனை நம் இடத்துக்குக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

அவ்வளவுதான்; மறுகணம் வீரர்கள் எட்டுப் பேர் கரையில் குதித்தார்கள்; ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

படகு மேலே சென்றது.

படைவீரர்கள் புடைசூழ ஆழ்வார்க்கடியானும் போனான்.

பட்டர்களும் மற்றவர்களும் அந்த வைஷ்ணவனுடைய முரட்டுத்தனத்தைக் குறித்துப் பலவாறு பேசிக் கொண்டு கலைந்து போனார்கள்.

பதினொன்றாம் அத்தியாயம்

தெரிஞ்ச கைக்கோளப் படை

இராமேசுவரப் பெருந் தீவை யடுத்த சிறிய தீவுகளில் ஒன்றில், ஒரு பழைமையான மண்டபத்தில், அநிருத்தப் பிரம்மாதிராயர் கொலு வீற்றிருந்தார். அவருடைய அமைச்சர் வேலையை நடத்துவதற்குரிய சாதனங்கள் அவரைச் சூழ்ந்திருந்தன. கணக்கர்கள், ஓலை எழுதும் திருமந்திர நாயகர்கள், அகப்பரிவாரக் காவலர்கள் முதலியோர் அவரவர்களுடைய இடத்தில் ஆயத்தமாக இருந்தார்கள்.

அநிருத்தர் படகிலிருந்து இறங்கி வந்து அம்மண்டபத்தில் அமர்ந்து சிறிது நேரம் ஆனதும், தம்மைப் பார்க்க வந்திருந்தவர்களை அழைக்குமாறு கட்டளையிட்டார்.

ஐந்துபேர் முதலில் வந்தார்கள். அவர்களைப் பார்த்தால் செல்வச் செழிப்புள்ள வர்த்தகர்கள் என்று தோன்றியது.

ஒரு தட்டில் நவரத்தின மாலை ஒன்றை வைத்துச் சமர்ப்பித்தார்கள். அதை அநிருத்தப் பிரம்மராயர் வாங்கிக் கணக்கரிடம் கொடுத்து, "செம்பியன் மகாதேவியின் ஆலயத் திருப்பணிக்கு என்று எழுதி வைத்துக் கொள்க!" என்றார்.

பிறகு, வந்தவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"நானா தேச திசையாயிரத்து ஐந்நூற்றுவர் * சார்பில் நாங்கள் வந்திருக்கிறோம்" என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

"சந்தோஷம்; பாண்டிய நாட்டில் உங்களுடைய வாணிபம் செழிப்பாயிருக்கிறதல்லவா?"

"நாளுக்கு நாள் செழிப்படைந்து வருகிறது!"

"பாண்டிய நாட்டு மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"பாண்டிய வம்ச ஆட்சியைக் காட்டிலும் சோழ குல ஆட்சியே மேலானது என்று பேசிக் கொள்கிறார்கள். முக்கியமாக, இளவரசர் அருள்மொழி வர்மரின் வீர தயாளங்களைக் குறித்துச் சிலாகிக்கிறார்கள். இலங்கையில் நடப்பதெல்லாம் இந்தப் பக்கத்து மக்களிடையில் பரவியிருக்கிறது..."

"கீழ்க் கடல் நாடுகளுடன் உங்கள் கப்பல் வாணிபம் இப்போது எப்படியிருக்கிறது?"

"சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆளுகையில் ஒரு குறைவும் இல்லை. சென்ற ஆண்டில் அனுப்பிய எங்கள் கப்பல்கள் எல்லாம் திரும்பி வந்து விட்டன. ஒன்றுகூடச் சேதமில்லை."

"கடல் கொள்ளைக்காரர்களினால் தொல்லை ஒன்றுமில்லையே?"

"சென்ற ஆண்டில் இல்லை. மானக்கவாரத் தீவுக்கு அருகில் இருந்த கடற் கொள்ளைக்காரர்களை நம் சோழக் கப்பற் படை அழித்த பிறகு கீழைக் கடல்களில் கொள்ளை பயம் கிடையாது."

"நல்லது; நாம் கொடுத்து அனுப்பிய ஓலை சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?"


"கட்டளைப்படி செய்திருக்கிறோம். இலங்கைச் சைன்யத்துக்கு அனுப்ப ஆயிரம் மூட்டை அரிசியும், ஐந்நூறு மூட்டை சோளமும், நூறு மூட்டை துவரம்பருப்பும் இந்த இராமேசுவரத் தீவில் கொண்டு வைத்திருக்கிறோம். இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேணும்."

"உங்களுடைய கப்பல்களிலேயே ஏற்றி அனுப்ப முடியுமா?"

"கட்டளையிட்டால் செய்கிறோம். இலங்கை யுத்தம் எப்போது முடியும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்."

"ஆ! அது யாருக்குத் தெரியும்? உங்களுடைய வர்த்தக சபைக்கு ஜோதிடக்காரன் இருக்கிறான் அல்

* இந்த நீண்ட தொடர் பெயர் கொண்ட வர்த்தகக் கூட்டத்தார் சோழப் பேரரசின் கீழ், கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் நடத்தி வந்தார்கள்.


SUNLIGHT
Soap

லவா ? அவனைக் கேட்டு எனக்கும் சொல்லுங்கள் !''

''பிரம்மராஜரே ! எங்கள் ஜோதிடக்காரன் சொல்வதையெல்லாம் எங்களாலேயே நம்ப முடியவில்லை.''

''அப்படி அவன் என்ன சொல்லுகிறான் ?''

''இளவரசர் அருள்மொழிவர்மர் போகுமிடமெல்லாம் வெற்றிதான் என்று சொல்லுகிறான். அவருடைய ஆட்சியில் சோழக் கப்பல் படை கடல் கடந்த தேசங்களுக்கெல்லாம் சென்று வெற்றி கொள்ளும் என்று சொல்லுகிறான். தூர தூரத்தில் உள்ள தேசங்கள் பலவற்றில் புலிக்கொடி பறக்கும் என்று சொல்லுகிறான்.''

''அப்படியானால் உங்கள் பாடு கொண்டாட்டம்தான்.''

''ஆம் ; எங்கள் கடல் வர்த்தகம் மேலும் செழித்து ஓங்கும் என்றும் சொல்லியிருக்கிறான்.''

''மிகவும் சந்தோஷம். ஸ்ரீ ரங்கநாதருடைய அருள் இருந்தால் அப்படியே நடக்கும். இலங்கையில் யுத்தம் நடக்கும் வரையில் மாதம் ஒரு தடவை நீங்கள் இப்படியே அரிசி முதலியவை அனுப்பி வர வேண்டும். போய் வாருங்கள்.''

''அப்படியே செய்கிறோம்; போய் வருகிறோம்.''

ஐந்நூற்றுவர் சபையின் பிரதிநிதிகள் போன பிறகு, ஒரு காவலன் வந்து ''தெரிஞ்ச கைக்கோளப்படைச் சேனாதிபதிகள் காத்திருக்கிறார்கள். பார்க்க விரும்புகிறார்கள்'' என்று சொன்னான்.

''வரச் சொல்லு!'' என்றார் முதல் அமைச்சர் அநிருத்தர்.

மூன்று கம்பீர புருஷர்கள் பிரவேசித்தார்கள். அவர்களுடைய முகங்களிலும் தோற்றத்திலும் வீர லக்ஷ்மி வாசம் செய்தாள். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர் என்று பார்த்தவுடனே தெரிந்தது.

''சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளப் படையார்* தானே?'' என்று அநிருத்தர் கேட்டார்.

''ஆம், ஐயா! ஆனால் அப்படிச் சொல்லிக் கொள்ளவும் எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது.''

''அது ஏன்?''

''சக்கரவர்த்தியின் சோற்றைத் தின்றுகொண்டு ஆறு மாத காலமாக இங்கே வீணில் காலம் கழித்துக்கொண்டிருக்கிறோம்.''

''உங்கள் படையில் எத்தனை கை? எத்தனை வீரர்கள்?''

''எங்கள் சேனை மூன்று கைமா சேனை. இவர் இடங்கை சேனைத் தலைவர்;இவர் வலங்கை சேனைத் தலைவர்; நான் நடுவிற்கை படைத் தலைவன். ஒவ்வொரு கையிலும் இரண்டாயிரம் வீரர்கள். எல்லோரும் சாப்பிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறோம். வேலும் ஈட்டியும் வாளும் தோளும் சோம்பிக் கிடக்கின்றன. போர்த் தொழிலே எங்களுக்கு மறந்துவிடும் போலிருக்கிறது.''

''உங்களுடைய கோரிக்கை என்ன?''

''எங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம். இளவரசர் அருள்மொழி வர்மர் மாதண்ட நாயகராயிருக்கும் சைன்யத்திலே சேர்ந்து யுத்தம் செய்ய விரும்புகிறோம்.''

''ஆகட்டும். தஞ்சைக்குப் போனதும் சக்கரவர்த்தியின் சம்மதம் கேட்டுவிட்டு உங்களுக்கு அறிவிக்கிறேன்.''

''பிரம்மராஜரே! அதற்குள்ளே இலங்கை யுத்தம் முடிந்து விட்டால்?''

''அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம். இலங்கை யுத்தம் இப்போதைக்கு முடியும் என்பதாகத் தோன்றவில்லை.''

''ஈழத்துச் சேனாவீரர்கள் அவ்வளவு பொல்லாதவர்களா? எங்களை அங்கே அனுப்பி வையுங்கள், ஒரு கை பார்க்கிறோம்...!''

''ஒரு கை என்ன? நீங்கள் மூன்று கையும் பார்ப்பீர்கள். தெரிஞ்ச கைக்கோளரின் மூன்று கைமாசேனை யுத்த களத்தில் புகுந்து விட்டால் பகைவர்களின் பாடு என்னவென்று சொல்லவேண்டுமோ? நடுவிற்கை வீரர்கள் பகைவர் படையின் நடுவில் புகுந்து தாக்குவீர்கள். அதே சமயத்தில் இடங்கை வீரர்கள் இடப்புறத்திலும் வலங்கை வீரர்கள் வலப்புறத்திலும் சென்று இடி விழுவது போலப் பகைவர்கள் மீது விழுந்து தாக்குவீர்கள்...''

''அப்படித் தாக்கித்தான் பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்தோம்; சேரர்களை முறியடித்தோம்.''

பாண்டியர்களும் சேரர்களும் போர்க்களத்தில் எதிர்த்து நின்றார்கள். அதனால் அவர்களைத் தாக்கி முறியடித்தீர்கள். பகை வீரர்களை முதலில் கண்ணால் பார்த்தால்தானே அவர்களை நீங்கள் ஒரு கையும் பார்க்கலாம், மூன்று கையும் பார்க்கலாம்?''

''இராவணர் காலத்து அசுரர்களைப் போல் இந்தக் காலத்து இலங்கை

---

* இன்று தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுத் திண்டாடும் கைக்கோள வகுப்பார் சோழப் பேரரசின் காலத்தில் புகழ் பெற்ற வீர வகுப்பாரா யிருந்தனர். அவர்களில் பொறுக்கி எடுத்த வீரர்களைக் கொண்டு சோழ சக்கரவர்த்திகள் அகப் பரிவாரப் படையை அமைத்துக் கொள்வது வழக்கம். அப்படிப் பொறுக்கி எடுக்கப் பட்ட படைக்குத் 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயர் வழங்கியது. அந்தந்தச் சக்கரவர்த்தி அல்லது அரசரின் பெயரையும் படைப் பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொள்வதுண்டு.

வீரர்களும் மாயாவிகளாகி விட்டார்களா? மேக மண்டலத்தில் மறைந்து நின்று போரிடுகிறார்களா?''

''மாயாவிகளாக மறைந்துதான் விட்டார்கள். ஆனால் போர் செய்யவில்லை. போரிட்டால்தான் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடலாமே? இலங்கை அரசன் மகிந்தனையும் காணவில்லை; அவனுடைய சேனை வீரர்களையும் காணவில்லை. காடுகளிலே மலைகளிலே எங்கே போய் ஒளிந்து கொண்டார்களோ தெரியவில்லை. ஆகையால் ஆறு மாதமாக இலங்கையில் யுத்தமே நடைபெறவில்லை. உங்களையும் அங்கே அனுப்பி என்ன செய்கிறது?''

''மகா மந்திரி! எங்களை அனுப்பிப் பாருங்கள்! மகிந்தனும் அவனுடைய வீரர்களும் காடு மலைகளிலே ஒளிந்திருக்கட்டும்; அல்லது மேக மண்ட



லத்திலே ஒளிந்திருக்கட்டும். அவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து இளவரசரின் காலடியில் சேர்க்கிறோம். அப்படிச் சேர்க்காவிட்டால், 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயரை மாற்றிக் கொண்டு, 'வேளாளரின் அடிமைப் படை' என்ற பட்டயத்தைப் பெற்றுக் கொள்கிறோம்!''

''வேண்டாம்; வேண்டாம்! அப்படி ஒன்றும் இப்போது சபதம் செய்ய வேண்டாம்! தெரிஞ்ச கைக்கோளர் படையின் வீர பராக்கிரமம் இந்த ஜம்பூத்வீபத்தில் யாருக்குத் தெரியாது? தஞ்சாவூர் சென்றதும் சக்கரவர்த்தியைக் கேட்டுக் கொண்டு உங்களுக்குக் கட்டளை அனுப்புகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள். பாண்டிய நாட்டில் பகைவர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டி வாருங்கள்!''

''மகாமந்திரி! பாண்டிய நாட்டில் இனி அடக்குவதற்குப் பகைவர் யாரும் இல்லை. குடிமக்கள் யுத்தம் நின்றது பற்றி மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவரவர்களும் விவசாயம், வாணிபம், கைத்தொழில்களில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்துகிறார்கள். பாண்டிய மன்னர் குலமோ நாசமாகி விட்டது....''

''அவ்விதம் எண்ண வேண்டாம்! வீர பாண்டியனோடு பாண்டிய வம்சம் அற்றுவிட்டதாக நினைக்கிறீர்கள். அது தவறு. பாண்டிய சிம்மாசனத்துக்கு உரிமை கோருவோர் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுக்காகச் சதி செய்வோரும் இருக்கிறார்கள்....!''

''ஆகா! எங்கே அந்தச் சதிகாரர்? தெரியப்படுத்துங்கள்!''

''காலம் வரும்போது உங்களுக்கே தெரியும். பாண்டிய குலத்தின் பழைமையான மணிக் கிரீடமும் இந்திரன் அளித்த இரத்தின மாலையும் வைர மிழைத்த பட்டத்து உடைவாளும் இன்னும் இலங்கையில் இருந்து வருகின்றன. ரோஹண மலை நாட்டில் எங்கேயோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீட்டுக் கொண்டு வரும் வரையில் பாண்டியப் போர் முற்றுப் பெறாது.''

''ஆபரணங்களை மீட்டுக் கொண்டு வர வேண்டும்; இளவரசர் அருள்மொழிவர்மரை மதுரைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய மணி மகுடத்தையும் பட்டாக் கத்தியையும் அணிவிக்கும் நாளும் வரவேண்டும்!''

''ஆகா! இது என்ன வார்த்தை சொல்கிறீர்கள்?''

''குடிமக்களின் நாவிலும் போர் வீரர்களின் உள்ளத்திலும் இருப்பதைச் சொல்கிறோம்.''

''அதெல்லாம் பெரிய ராஜரீக விஷயங்கள். நாம் பேச வேண்டாம். உங்களுக்குச் சந்தோஷமளிக்கக் கூடிய வேறு ஒரு முக்கிய விஷயம் சொல்லப் போகிறேன்...''

''கவனமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம், மகா மந்திரி!''

''இலங்கை யுத்தத்தோடு யுத்தம் முடிந்து விடும் என்று நினைக்க வேண்டாம். இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கைப் போர் முடிந்த பிறகு நாலா திசைகளிலும் திக்விஜயம் செய்யப் புறப்படுவார். ஆயிரம் கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு கீழ்த் திசைக் கடல்களிலே செல்வார். மாநக்கவாரம், மாபப்பாளம், மாவிரு



டிங்கம், கடாரம், இலாமுரி தேசம், ஸ்ரீவிசயம், சாவகம், புட்பகம் ஆகிய நாடுகளை அந்த மகாவீரர் வெற்றி கொள்வார். தெற்கே முன்னீர்ப் பழந் தீவு பன்னீராயிரமும் கைப்பற்றுவார். மேற்கே கேரளம், குடகு மலை, கொல்லம் ஆகிய நாடுகள் அவருடைய காலடியில் வந்து பணியும். பிறகு வடதிசை நோக்கிப் புறப்படுவார். வேங்கி, கலிங்கம், இரட்டைப்பாடி, சக்கரக் கோட்டம், அங்கம், வங்கம், கோசலம் விதேகம், கூர்ஜரம், பாஞ்சாலம் என்னும் நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்வார். காவியப் புகழ் பெற்ற கரிகால்வளவனைப் போல் இமயமலைக்கும் சென்று புலிக் கொடியை நாட்டுவார். வீர சேநாதிபதிகளே! இப்படியெல்லாம் நம் தென் திசை மாதண்ட நாயகர் திட்டம் இட்டிருக்கிறார். தமிழகத்தில் வீர ரத்தமும், வயிர நெஞ்சமும் படைத்த அனைவருக்கும் வேண்டிய வேலை இருக்கும்; தத்தம் வீர பராக்கிரமங்களை நிலைநாட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகையால் நீங்களும் உங்கள் தெரிஞ்ச கைக்கோளப் படையும் பொறுமை இழக்க வேண்டாம்!''

சேனாதிபதிகள் மூவரும் ஏககாலத்தில் ''சுந்தர சோழச் சக்கரவர்த்தி வாழ்க! இளவரசர் அருள்மொழி வர்மர் வாழ்க! மகா மந்திரி அநிருத்தர் வாழ்க!'' என்று கோஷித்தார்கள்.

பிறகு அவர்களில் ஒரு படைத் தலைவன் கூறினான்: ''மகா மந்திரி! இன்னும் ஒரே ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள விரும்புகிறோம். எங்கள் படையின் பெயர் 'சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளப் படை' என்பது தாங்கள் அறிந்ததே.''

''தெரிந்த விஷயம்தான்.''

''சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் திருப்பணியில் உயிரையும் விடுவோம் என்று பகைவர்களின் இரத்தம் தோய்ந்த சிவந்த கையினால் அடித்துப் பிரமாணம் செய்து கொடுத்தவர்கள்.''

''அதுவும் நான் அறிந்ததே.''

''ஆகையால் சக்கரவர்த்தியைத் தவிர வேறு யாரையும் நாங்கள் சேர மாட்டோம்; வேறு யார் சொல்வதையும் நாங்கள் கேட்க மாட்டோம்.''

''உங்களிடம் நான் எதிர்பார்த்ததும் இதுவேதான்!''

''முன்னொரு காலத்தில் பழுவேட்டரையர்களின் மாபெரும் சேனையில் ஒரு பகுதியாக இருந்தோம். அது காரணம் பற்றி எங்கள் பேரில் யாருக்கும் யாதொரு சந்தேகமும் ஏற்படக் கூடாது....''

''ஆகா! இது என்ன வார்த்தை? யாருக்கு என்ன சந்தேகம்?''

''தஞ்சாவூரில் நடப்பது பற்றி ஏதேதோ வதந்திகள் காற்றிலே வருகின்றன.''

''காற்றிலே வருகிறது காற்றோடு போகட்டும்! நீங்கள் அதையெல்லாம் நம்பவும் வேண்டாம்; திருப்பிச் சொல்லவும் வேண்டாம்.''

''கொடும்பாளூர் வேளாளர்கள் ஏதாவது எங்களைப் பற்றிச் சந்தேகத்தைக் கிளப்பக் கூடும்...''

''கிளப்ப மாட்டார்கள்; கிளப்பினாலும் யாரும் கேட்க மாட்டார்கள்.''

''மனித காயம் அநித்தியமானது..''

''அதனால் சுத்த வீரர்கள் உயிருக்குப் பயப்பட மாட்டார்கள்.''

''திரிபுவனச் சக்கரவர்த்தியானாலும் ஒரு நாள்...''

''இறைவன் திருப் பாதங்களை அடைய வேண்டியதுதான்.''

''சக்கரவர்த்திக்கோ உடல் நிலை சரியாக இல்லை...''

''வானத்தில் வால் நட்சத்திரம் பிரகாசிக்கிறது!''

''சக்கரவர்த்திக்கு அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால், எங்கள் படை வீரர்கள் அருள்மொழி வர்மரின் அகப் பரிவாரமாக விரும்புகிறார்கள்!''

''சக்கரவர்த்தியின் ஆக்ஞையின்படி நடப்பது உங்கள் கடமை!''

''சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எங்களுக்குத் தெரிவிப்பது தங்கள் கடமை. தாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது தஞ்சைக்குப் போய்ச் சக்கரவர்த்தியைத் தரிசிக்க எங்களுக்கு அநுமதி கொடுங்கள்...!''

''வேண்டாம்; நீங்கள் தஞ்சை போவது உசிதமல்ல; வீண் குழப்பம் ஏற்படும். சக்கரவர்த்தியைக் கண்டு உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்துவதை நானே ஏற்றுக் கொள்ளுகிறேன். நீங்கள் நிம்மதியாக இருங்கள்!''

''தங்களிடம் தெரியப்படுத்தியதுமே எங்களுடைய மனத்திலிருந்த பாரம் நீங்கி விட்டது! போய் வருகிறோம்!''

தெரிஞ்ச கைக்கோளப் படைத் தலைவர்கள் மூவரும் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.


அநிருத்தப் பிரம்மராயர், ''ஆகா! பொன்னியின் செல்வரிடம் அப்படி என்னதான் ஆகர்ஷண சக்தி இருக்குமோ தெரியவில்லை! அவரை ஒரு முறை பார்த்தவர்கள் கூடப் பைத்தியமாகிவிடுகிறார்களே!'' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

பிறகு, உரத்த குரலில், ''எங்கே? அந்த முரட்டு வைஷ்ணவனை இங்கே வரச் சொல்லுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

(தொடரும்)

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும்; வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் 'ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

மகாபாரதம்

ராஜாஜி

அசுவத்தாமனுக்குக் கோபமும் சோகமும் இன்னும் அதிகரித்தன. "மனிதர்களின் புத்திக்கு அவரவர்களுடைய யோசனை அவரவர்களுக்குச் சரியாகவே தோன்றும். இந்தப் பாண்டவர்கள் துரியோதனனைக் கொன்றதும் என் தந்தையைக் கொன்றதும் பெரிய அதருமம். ஆகையால் அதற்குப் பிரதி நான் எண்ணியிருக்கிறபடி செய்வதே சரி என்று எனக்குத் தோன்றுகிறது. இதைச் செய்தால்தான் அரசன் விஷயத்திலும் பிதாவின் விஷயத்திலும் நான் கடன் தீர்த்தவனுவேன். இது என் உறுதியான முடிவு. இன்றிரவு பாண்டவர்களின் பாசறைகளில் புகுந்து கவசமின்றிப் படுத்துத் தூங்கும் திருஷ்டத்யும்னனையும் பாண்டவர்களையும் கொல்லப் போகிறேன்" என்றான்.

இதைக் கேட்ட கிருபர் மிகவும் துக்கமடைந்தார். "உலகத்தில் மிக்கப் புகழ் பெற்றிருக்கிறாய். இதுவரையில் நிஷ்களங்கமாக இருந்த உன் புகழ் வெள்ளைத் துணியில் ரத்தம் தெளித்தாற்போல் இதனால் கெட்டுப் போகும். தூங்கிக் கொண்டிருக்கிறவர்களைக் கொல்வது ஒரு நாளும் தர்மமாகாது. வேண்டாம்!" என்றார்.

"நீர் என்ன சொல்கிறீர்? இந்தப் பாண்டவர்கள் எல்லா ஆயுதங்களையும் கீழே எறிந்துவிட்டு உட்கார்ந்த என் பிதாவைத் தயையின்றிக் கொன்றார்கள். தருமம் என்கிற அணையை உடைத்து எறிந்து விட்டார்கள். இனி என்ன தருமம் மிச்சமிருக்கிறது? தேரை விட்டுத் தரையில் இறங்கி மண்ணில் புதைந்து அழுந்திய சக்கரத்தைத் தூக்கிக்கொண்டிருந்த கர்ணனை இவர்கள் அதருமமான முறையில் தாக்கிக் கொன்றார்கள். பீமன் துரியோதனனை நாபிக்குக் கீழ் அடித்துக் கொன்றான். இனி ஏது தருமம்? பாண்டவர்கள் தருமம் என்ற அணையை உடைத்துவிட்டார்கள். வரம்பு கடந்து அதருமத்தில் இறங்கிய நீசர்களைப் பற்றி ஏன் நாம் தருமத்தை ஆராய வேண்டும்? என் பிதாவைக் கொன்றவர்களான பாஞ்சாலர்களைத் தூங்கும்போது கொன்று அதனால் நான் புழுவாகவோ பட்சியாகவோ ஜன்மம் எடுத்தேனாலும் அதை நான் விரும்புகிறேன்" என்று அசுவத்தாமன் முடிவாகச் சொல்லிவிட்டுக் குதிரைகளைத் தேரில் பூட்டி, சத்ருக்கள் இருக்கும் இடம் போகப் புறப்பட்டான்.

உடனே கிருபரும் கிருதவர்மாவும், "அசுவத்தாமா! என்ன காரியம் செய்யப் போகிறாய்? நீ தனியாகப் போகலாமா? நீ சென்ற வழியில் நாங்களும் செல்வோம். எந்தப் பாபமாயினும் சரி. அதில் நாங்களும் பங்கெடுத்துக் கொள்வோம்!" என்று அவர்களும் அசுவத்தாமனுடன் சென்றார்கள்.

திருஷ்டத்யும்னனது பாசறையை அவர்கள் அடைந்தார்கள். கவசத்தைக் கழற்றிவிட்டுத் திருஷ்டத்யும்னன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். தூங்கிக் கொண்டிருந்த வீரன்



மேல் அசுவத்தாமன் குதித்துக் கோரமான முறையில் கொன்றான். அவ்வாறே எல்லாப் பாஞ்சாலர்களையும் திரௌபதியின் புத்திரர்களையும் ஒருவர் பின் ஒருவராகக் கொன்றான்.

இப்படி அதுவரையில் கேட்டிராத கொடிய செய்கையைக் கிருபரும், கிருதவர்மனும், அசுவத்தாமனும் செய்துவிட்டுப் பாசறைகளுக்குத் தீ வைத்து விட்டார்கள். நெருப்புப் பற்றிக்கொண்டதும் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்து ஒன்றும் விளங்காமல் இங்குமங்கும் ஓடினார்கள். அவ்வாறு ஓடியவர்கள் அசுவத்தாமனால் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள்.

''நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டோம். இனி நாம் சந்தோஷமாகத் துரியோதனனிடம் போகலாம். அவன் உயிருடன் இருப்பானானால் அவனுக்குத் திருப்தி உண்டாகும். இந்தச் செய்தியைச் சொல்வோம்'' என்றான் அசுவத்தாமன். அப்படியே துரியோதனன் குற்றுயிராகக் கிடந்த இடத்துக்கு மூவரும் சென்றார்கள்.

''துரியோதனா! இன்னும் உயிருடன் இருக்கிறாயா? உன் நெஞ்சம் குளிரும். நாங்கள் செய்து முடித்ததைச் சொல்கிறோம் கேள். பாஞ்சாலர்கள் அனைவரும் ஒழிந்தார்கள். பாண்டவர்களுடைய குமாரர்கள் மாண்டார்கள். இரவில் தூங்கிக் கொண்டிருக்கையில் சேனை முழுவதும் எங்களால் அழிக்கப்பட்டது. பாண்டவ பட்சத்தில் ஏழு உயிர்களே எஞ்சி நிற்கின்றன. நம்முடைய கட்சியில் கிருபரும் நானும் கிருதவர்மாவும் இருக்கிறோம்'' என்றான் அசுவத்தாமன்.

துரியோதனன், ''அசுவத்தாமரே! பிதாமகர் பீஷ்மரும், வீரன் கர்ணனும் செய்யாததை எனக்காகச் செய்தீர்கள்!'' என்று சொல்லிவிட்டுச் சந்தோஷமாக உயிர் நீத்தான்.



96. புலம்பி என்ன பயன்?

இரவில் எதிர்பாராத முறையில் தாக்கப்பட்டுச் சேனை அழிந்துபோனதைப் பார்த்து யுதிஷ்டிரன் துயரம் மேலிட்டு, "வெற்றி பெற்ற சமயத்தில் படுதோல்வி அடைந்து விட்டோம். மகா சூரனை கர்ணனுடைய தாக்குதலிலிருந்து தப்பின திரௌபதியின் புத்திரர்கள், நம்முடைய அஜாக்கிரதையினால் இப்போது பூச்சிகளைப் போல் மாண்டார்கள். பெரிய கடலைத் தாண்டிய வியாபாரக் கப்பல் முடிவில் சிறு வாய்க்காலில் கவிழ்ந்து போவது போல் நாசமடைந்தோம்" என்றான்.

மக்களை இழந்த திரௌபதி தாங்க முடியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தாள். தருமபுத்திரனிடம் வந்து, "பாபியான அசுவத்தாமனை வீழ்த்த யாரும் இல்லையா?" என்று கதறினாள்.

திரௌபதியின் சொல்லைக் கேட்டதும் பாண்டவர்கள் உடனே புறப்பட்டார்கள். இங்குமங்கும் தேடிக் கங்கை நதிக் கரையில் வியாசர் பக்கத்தில் மறைவாக இருந்த அசுவத்தாமனைக் கண்டார்கள். பாண்டவர்களையும் ஜனார்த்தனனையும் கண்டதும் அசுவத்தாமன் மெதுவாகக் கீழே கிடந்த ஒரு துரும்பை எடுத்து "இது பாண்டவ வம்சத்தை முற்றிலும் அழிப்பதாக" என்று மந்திரம் சொல்லி அஸ்திரத்தை விட்டான். அது சென்று உத்தரையின் கருப்பத்தை அடைந்தது.

பாண்டவ வம்சம் அத்துடன் அடையாளமில்லாமல் அழிந்திருக்க வேண்டும். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தால் அந்தக் கருப்பத்திலிருந்த பிண்டம் காக்கப்பட்டது. அதுவே பரீக்ஷித்து ராஜனைப் பிறந்து பாண்டவ வம்சத்துக்கு அடையாளமாக நின்றது.

ஃ ஃ ஃ

தன் தலையிலிருந்த ஜோதி மணியை எடுத்து அசுவத்தாமன், தோற்றதற்கு அடையாளமாகப் பீமனிடம் தந்து விட்டு வனம் சென்றான். பீமன் அந்த மணியைத் துரௌபதிக்குக் கொடுத்து, "கல்யாணி! இந்த மணியை உனக்காகக் கொண்டுவந்தேன். உன்னுடைய புத்திரர்களைக் கொன்றவன் ஜெயிக்கப்பட்டான். துச்சாதனன் ரத்தமும் என்னால் குடிக்கப்பட்டது. கடன்களைத் தீர்த்து விட்டேன்" என்று பீமசேனன் சொன்னான். திரௌபதி அந்த மணியை வாங்கி, யுதிஷ்டிரரிடம் கொடுத்து வணங்கி, "குற்றமற்ற அரசர் இதைத் தம்முடைய முடியில் அணியத் தகுந்தவர்" என்றாள்.

ஃ ஃ ஃ

அஸ்தினபுரத்தில் ஸ்திரீகளும் குழந்தைகளும் புலம்பும் சத்தம் எங்கும் நிறைந்தது. பல்லாயிரக் கணக்கான திக்கற்ற பெண்களைக் கூட்டிக்கொண்டு திருதராஷ்டிரன் யுத்த பூமிக்குச் சென்றான். கோரமான குல நாசம் நடைபெற்ற அந்தக் குருக்ஷேத்திரத்தில், குருடனை அரசன், நடந்து போனதை யெல்லாம் எண்ணிப் புலம்பினான். புலம்பி என்ன பயன்?

"துக்கத்தை அடைந்தவனுக்கு மற்றவர்கள் சமாதானம் சொல்லித் துக்கத்தைத் தீர்க்க முடியாது. அநேக அரசர்கள் உம்முடைய புத்திரனுக்காக உயிர் இழந்தார்கள். அவர்களுக்கும் கிரமமாகப் பிரேத காரியங்களைச் செய்வீராக" என்று திருதராஷ்டிரனைப் பார்த்துச் சஞ்சயன் சொன்னான்.

விதுரன் திருதராஷ்டிரனுடைய சோகத்தைப் போக்க முயற்சி செய்தான். "யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களைப் பற்றித் துக்கித்தல் தகாது. உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாக்களுள் அண்ணன், தம்பி, பந்துக்கள் என்ற பரஸ்பர சம்பந்தம் ஒன்றுமில்லை. உம்முடைய மக்கள் உமக்கு உண்மையில் சம்பந்தப்பட்டவர்கள் அல்லர். தேக சம்பந்தம் மரணத்தோடு முடிந்து போகிறது. கண்ணுக்குத் தெரியாத நிலையை ஜீவன்கள் அடைகிறார்கள். அதற்கு ஏன் புலம்ப வேண்டும்? யுத்தத்தில் எதிர்த்து நின்று உயிர் துறந்த வீரர்கள் இந்திரனுக்கு அதிதிகளாக இருப்பார்கள். கடந்து போனதைப் பற்றித் துக்கிப்பதினால் தருமமோ, இன்பமோ, பொருளோ ஒன்றும் உமக்குண்டாக மாட்டாது." — இவ்வாறாகவும் இன்னும் பலவாறாகவும் தத்துவங்களை எடுத்துக் காட்டினான்.

வியாசரும் திருதராஷ்டிரனை அன்போடு உபசரித்து, "அருமைப் புதல்வ! உனக்குத் தெரியாமலிருந்து நான் சொல்லி நீ தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை. பிராணிகள் அநித்தியம் என்பதை நன்றாக அறிந்திருக்கிறாய். இந்த யுத்தம் பூபாரத்தைக் குறைக்கவே நேரிட்டது. பிரபுவான விஷ்ணு இதைப் பற்றிச் சொல்லியதை நான் நேரில் கேட்டிருக்கிறேன். ஆனபடியால்தான் இந்த யுத்தத்தைத் தவிர்க்க முடியவில்லை. இனி யுதிஷ்டிரனே உனக்கு மகன். அவன்பால்

அன்பை உண்டாக்கிக் கொண்டு நீ உயிர் தரித்திருக்க வேண்டும். சோகத்தை விடு'' என்றார்.

பிறகு யுதிஷ்டிரன் வந்தான். புலம்பிக் கொண்டிருந்த ஸ்திரீகளின் கூட்டத்தைக் கடந்து அவன் திருதராஷ்டிரனை அடைந்து வணங்கி நின்றான். சோகத்தினால் பீடிக்கப்பட்ட திருதராஷ்டிரன் யுதிஷ்டிரனைக் கட்டித் தழுவிக் கொண்டான். ஆனால் அந்த ஆலிங்கனத்தில் பிரீதி இருக்கவில்லை.

பிறகு பீமசேனனையும், '' வா !'' என்று திருதராஷ்டிரன் அழைத்த போது, வாசுதேவன் முன் யோசனையுடன் பீமனை விலக்கிவிட்டு இரும்பால் செய்யப்பட்ட பிரதிமை ஒன்றைக் கண்ணில்லாத திருதராஷ்டிரனிடம் நிறுத்தினான். திருதராஷ்டிரனுடைய கோபத்தை அறிந்து கண்ணன் இவ்வாறு செய்தான். கிழவன் இரும்புமயமான அந்தப் பிரதிமையைப் பீமசேனன் என்று எண்ணி இரு கைகளாலும் தழுவிக் கொண்டான். கட்டி அணைத்துக் கொண்டிருக்கும் போது தன் மகனைக் கொன்றவன் இவன் என்று தாங்க முடியாத கோபம் திடீர் என்று மேலிட்டுத் தன்னையும் அறியாமல் பிரதிமையைப் பலமாகக் கட்டி அணைத்து நொறுக்கி விட்டான்.

உடனே, ''ஹா ! என் கோபம் ஏமாற்றி விட்டது. பீமன் இறந்தானே !'' என்று திருதராஷ்டிரன் புலம்பினான்.

அப்போது கிருஷ்ணன் குருடனான அரசனைப் பார்த்து, ''பிரபுவே! உமது கோபாவேசம் இவ்வாறு செய்யும் என்று அறிந்து, நான் அதைத் தவிர்த்தேன். நீர் நொறுக்கிப் பொடியாக்கியது பீமசேனன் அல்ல. இரும்புப் பிரதிமை! உம்முடைய கோபத்தின் வேகம் பிரதிமையின் பேரில் காட்டியதோடு தீர்ந்து போகட்டும். பீமன் உயிருடன் இருக்கிறான்'' என்றான்.

கோபாவேசம் அடங்கிப் பீமன் முதலான பாண்டவர்களைக் கிழவன் ஆசிர்வதித்தான். அவனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அனைவரும் காந்தாரியிடம் சென்றார்கள்.

97. எவன் தேற்றப் போகிறான்?


காந்தாரிக்கு வியாசர் சொன்னார்: '' அம்மணீ ! பாண்டவர்களிடத்தில் கோபம் பாராட்ட வேண்டாம். யுத்தத்துக்கு முன் நீயே சொன்னாயல்லவா? 'எங்கே தருமமோ அங்கே ஜெயம்' என்றாய். அவ்விதமே முடிந்தது. நடந்து போன விஷயத்தை எண்ணி மனத்தில் கோபம் கொள்ளலாகாது. உனக்கு இயற்கையான பொறுமையை இப்போது பயன்படுத்திக் கொள்வாயாக !'' என்றார்.

''பகவானே ! நான் பாண்டவர்களைக் கண்டு அசூயைப்படவில்லை. 'புத்திர சோகத்தினால் என் புத்தியானது நிலை தவறி இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். இந்தப் பாண்டவர்களும் எனக்கு மக்கள் ஆவார்கள். துச்சாதனனும் சகுனியும் இந்தக் குல நாசத்துக்குக் காரணம் என்பதை அறிவேன். அர்ச்சுனனும் பீமனும் குற்றமற்றவர்கள். அகங்காரத்தினால் யுத்தம் நேரிட்டது. என் மக்கள் கொல்லப்பட்டது சரியே. அந்த விஷயத்தில் நான் ஒன்றும் குறை கூறமாட்டேன். ஆனால் வாசுதேவன் பார்த்துக் கொண்டிருக்கும் போது பீமன் துரியோதனனைச் சண்டைக்கு அழைத்து யுத்தம் நடந்தது. தன்னைவிடத் துரியோதனன் மல்யுத்தத்தில் சாமர்த்தியம் மிஞ்சியவன் என்று அறிந்து அவனை நாபிக்குக் கீழே அடித்துக் கொன்று விட்டான். அது என்னால் பொறுக்க முடியவில்லை'' என்றாள்.

இதைக் கேட்ட பீமன், ''அம்மா! யுத்தத்தில் என்னைக் காத்துக் கொள்வதற்காக நான் அவ்விதம் செய்தேன். தருமமோ, அதருமமோ, அதை நீ பொறுத்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய புத்திரன் யுத்தத்தினால் ஒருவராலும் ஜெயிக்க முடியாதவன். அதனால் அநியாயமான காரியத்தைச் செய்தேன். ஆனால், அவன் யுதிஷ்டிரரைச் சூதாட்டத்துக்கு அழைத்து வஞ்சித்தான். நாங்கள் அனைவரும் பலவாறு வஞ்சிக்கப்பட்டோம். அக்கிரமமாகக் கவர்ந்து கொண்ட ராஜ்யத்தை விடமாட்டேன் என்றான். பதிவிரதையான திரௌபதியை உன்னுடைய மகன் எவ்வாறு நடத்தினான் என்பது உனக்கு முற்றிலும் தெரிந்த விஷயம். கெட்ட நடத்தையை அனுசரித்த உன்னுடைய குமாரனை அந்தச் சபையிலேயே நாங்கள் கொன்றிருந்தால் நீ தவறு என்று அப்போது சொல்லியிருக்க மாட்டாய். தருமராஜனுடைய பிரதிக்ஞையால் கட்டுப்பட்டுச் சும்மா நின்றோம். யுத்தத்தில் பகையைத் தீர்த்துக் கொண்டோம். அம்மா ! நீ எங்களை மன்னிக்க வேண்டும். விசனப்படாதே!'' என்றான். **(தொடரும்)**



போடு ஸாவனீர்!







சிலபமாகப் பணம் சம்பாதிக்க விரும்புகிறவர்களுக்கு ஒரு வழி சொல்லிக் கொடுக்கப் போகிறேன். 'ஐயோ! மோசடி விவகாரம் எல்லாம் வேண்டாம் சுவாமி!' என்று அலறுகிறவர்கள் கவனிக்கவும்: நான் சொல்லப் போவது மோசடி வழியல்ல. நேர்மையானதும், கௌரவமானதும், வெளியிலே சொல்லிக் கொள்ளும்படியானதுமான ஒரு காரியம்தான் அது. அது என்னவெனில்—

'ஸாவனீர்' போடுவது!

முன்பெல்லாம் 'ஸாவனீர் என்று சொல்லப்படும் மலர்கள் அபூர்வமாகத்தான் அச்சாகும். ஆனால் இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் 'ஸாவனீர்' போடுவது வழக்கமாகிவிட்டது. சபாக்காரர்கள் 'விநாயக சதுர்த்தி கச்சேரி சீரிஸ்' அல்லது 'வைகுண்ட ஏகாதசி நாடக விழா' முதலியவற்றைக் கொண்டாடவும், அமெச்சூர் நாடகக் குழுக்கள் பத்து, இருபத்தைந்து, ஐம்பதாவது தடவை தங்கள் நாடகம் அரங்கேறுவதைச் சிறப்பிக்கவும், 'கிளப்'களின் வருடாந்தரக் கொண்டாட்டங்களின் ஓர் அம்சமாகவும், சில பொது ஸ்தாபனங்கள் நிதி திரட்டுவதற்காகக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதை யொட்டியும், பிரமுகரின் ஐம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டும் இத்தகைய 'ஸாவனீர்'களை வெளியிடுகிறார்கள். இவர்களுக்காவது ஒரு காரணம் இருக்கிறது. ஆனால் நிறையப் பேர் காரணம் ஏதுமின்றியே இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறார்களென்றால் அதற்கு ஒரே காரணம்: இதன் மூலம் பணம் பண்ண வழி இருப்பதுதான்!

சமீபத்தில் பிரபல வியாபார நிறுவனம் ஒன்றின் விளம்பர இலாகா பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் ஒரு கற்றைக் காகிதங்களை எடுத்துக் காண்பித்தார். அத்தனையும் 'ஸாவனீரு'க்கு விளம்பரம் கோரி வந்திருந்த கடிதங்கள்!

"அத்தனை பேருக்கும் விளம்பரம் கொடுப்பீர்களா?..."

"அப்படிச் செய்தால் கட்டுப்படியாகுமா? சிலருக்கு மட்டும்தான் கொடுப்போம். ஸாவனீரைப் பார்த்து விட்டுத்தான் எங்கள் பொருள்களை யாரும் வாங்குவார்கள் என்று நாங்கள் நம்பவில்லை."

"அது சரி, சிலருக்கு மட்டும்தான் விளம்பரம் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அப்படியானால் மற்றவர்கள் விளம்பரம் சேகரிக்கக் கஷ்டப்பட வேண்டும் போலிருக்கிறதே...!"

"அதுதான் இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் 'ஸாவனீர்'க் காரர்கள் யாரும் விளம்பரங்களுக்காகக் கஷ்டப்படுவதில்லை. நாங்கள் விளம்பரம் கொடுத்து விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதையே இரண்டு இடங்களில் காட்டி அவர்களிடமிருந்தும் வாங்கி விடுவார்கள். நாங்கள் கொடுக்கா விட்டாலோ '...கம்பெனியில் ஒரு பக்கம் எடுத்துக் கொள்வதாகத்தான் சொன்னார்கள். ஆனால் அவர்களுக்குப் பட்ஜெட் தீர்ந்துபோய் விட்டதாம். இல்லையென்றால் கட்டாயம் கொடுத்திருப்பார்கள். எனவே, நீங்களாவது கொடுத்து உதவி பண்ணினீர்களானால் நல்லது' என்று பேசியே விளம்பரத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுவார்கள்!..."

"அதிருக்கட்டும்; ஸாவனீர் போடுவதாகச் சொல்கிறவர்கள் அத்தனை பேரும் ஒழுங்காக அதைக் கொண்டு வருகிறார்களா? உங்களிடம் கணக்குச் சொன்னபடி பிரதிகள் அச்சடிக்கிறார்களா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?"

"அது சிரமமான காரியம். ஆயிரம் பிரதிகள் போடுவதாகச் சிலர் சொல்வார்கள்; முந்நூறுகூட அச்சிடமாட்டார்கள். இன்னும் சில சாமர்த்தியசாலிகள் எத்தனை விளம்பரதாரர்கள் இருக்கிறார்களோ அத்தனை பிரதிகள் அச்சிடுவதும் உண்டு!"

"இது மோசடி இல்லையா?"

"ஒரு பிரதிகூட அச்சடிக்காமல் இருந்தால்தான் மோசடி. இதில் அப்படி இல்லையே? விளம்பரம் கொடுத்தவர் பணம் கொடுப்பதற்கு முன் புத்தகத்தில் தம்முடைய விளம்பரம் வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்; அவ்வளவுதானே? எத்தனை பிரதிகள் அச்சடிக்கிறார்கள் என்று இவருக்கென்ன வந்தது? சரி ஐயா! சொன்னபடியே ஒருத்தர் பிரதிகள் அச்சடிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவற்றை ஒழுங்காக விநியோகிக்காமல் பழைய பேப்பர்க்காரரிடம் போட்டு விட்டார் என்றால் அப்போது என்ன பண்ணுவதாம்?"

"போகட்டும் விடுங்கள்... இந்த வழியில் பணம் பண்ண முடியும் என்று சொன்னீர்களே..."

"அது உண்மைதான். ஏனென்றால் இந்த வேலைக்கு மனித உழைப்பு ஒன்றுதான் மூலதனம்; நன்றாக அலைந்து திரிந்து தட்டுகிற இடத்தில் தட்டி, விளம்பரங்கள் சேகரித்தால் போதும். விளம்பரங்களுக்கெனப் பணம் போட்டு 'பிளாக்'குகள் பண்ணிக் கொண்டிருக்கவேண்டியதில்லை. அந்தந்தக் கம்பெனிக்காரர்களே இதற்கென்று தயாராக வைத்திருக்கிற 'பிளாக்கு'களை எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். கட்டுரைகளைப் பிரமுகர்கள் இனாமாக எழுதித் தந்துவிடுவார்கள். சில பிரமுகர்கள் இன்னும் ஒரு படி மேலே போய், கட்டுரையின் தலைப்பில் அச்சிடவென்று தயாராக வைத்திருக்கும், தங்கள் 'பிளாக்'கையும் எடுத்துக் கொடுத்து விடுவார்கள்!"

"பேஷ்! பேஷ்!"

"அச்சாபீஸ்காரரையே பணம் போட்டுப் பேப்பர் வாங்கிக்கொள்ளச் சொன்னால் தீர்ந்தது. முதலில் மட்டும் கொஞ்சம் 'அட்வான்ஸ்' கொடுத்தால் போதும். 'ஸாவனீரைக் கொண்டு போய்க் காட்டினால்தான் பணம் பெயரும்' என்று விரட்டியே அச்சடித்து விடலாம்..."

"சாதாரணமாக 'ஸாவனீர்'க்காரர்கள் ஒரு பக்க விளம்பரத்துக்கு என்ன கட்டணம் வசூலிக்கிறார்கள்?"


"இருபத்தைந்து ரூபாயிலிருந்து நானூறு ரூபாய் வரைக்கும் அவரவருடைய சாமர்த்தியத்துக்கும், தேவைக்கும் தகுந்தபடி வசூலிக்கிறார்கள். ஒரு பக்கத்துக்கு ஆயிரம் ரூபாய் வசூல் பண்ணிய பெரும் புள்ளி ஒருவரும் இருக்கிறார்!"

"ஆக, கொஞ்சம் அலைந்தால் இதன் மூலம் நிறையச் சம்பாதிக்கலாம் என்கிறீர்கள்?"

"நிச்சயமாக!"

நண்பருடன் பேசிவிட்டு வந்ததிலிருந்து இரவிலே தூங்கும்போது 'ஸாவனீர்! ஸாவனீர்!' என்று நான் உளறுவதாக என் மனைவி சொல்கிறாள்!

-எஸ். வி. ஆ.



நேற்றும் நாளையும்.

ஸ்ரீ கே. வி. வெங்கடராம ஐயர்
(ஓய்வு பெற்ற ஸ்டேட் பாங்கி ஊழியர்)

ஸ்டேட் பாங்கின் பழைய பெயர் இம்பீரியல் பாங்க். இது தோன்றுவதற்கு முன்பு பாங்க் ஆப் மதராஸ், பாங்க் ஆப் பெங்கால், பாங்க் ஆப் பாம்பே என்று மூன்று பெரிய பாங்குகளே தேசம் முழுவதுக்குமாக இருந்தன.

சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் இவற்றை இணைத்து, ஒரு சட்டத்தின் வாயிலாக இம்பீரியல் பாங்கி ஆஃப் இந்தியா என்று ஆக்கினார்கள். (ரிசர்வ் பாங்கி இதற்குப் பன்னிரண்டு வருஷங்கள் கழித்தே தொடங்கப்பட்டது.)

நாடெங்கும் இருநூறு கிளைகள். திருச்சிக் கிளையின் கீழ் தஞ்சாவூருக்கும் கும்பகோணத்துக்குமாக ஓர் 'அவுட்-ஸ்டேஷன்' ஆபீஸ் வந்தது. ஒரு காஷியர், ஒரு கோடவுன் கீப்பர், ஒரு பியூன் கொண்ட ஊழியர் குழு மாற்றி மாற்றித் தஞ்சாவூரில் ஒரு நாள், கும்பகோணத்தில் ஒரு நாள் என்று 'முறை' வைத்து வேலை பார்த்தனர். நாளடைவில் கும்பகோணத்தில் நிலைத்த கிளையில் நான் 1922ல் குமாஸ்தாவாகச் சேர்ந்தேன்.


ஜூன் டிசம்பர் கணக்கு முடிக்க அப்போதெல்லாம் பாங்கி விடுமுறை கிடையாது. பல நாட்கள் இரவெல்லாம் கண் விழித்துக் கணக்கை முடிப்போம். ஓவர் டைம் பற்றிக் கேட்பதே இல்லை. கூட்டல் போடும் இயந்திரம்கூட அப்போது வரவில்லை.

லீவு கிடைப்பது கஷ்டம். என் கல்யாணத்துக்கே லீவு சரியாகக் கிடைக்கவில்லை.

''யாரைக் கேட்டு நீர் நிச்சயம் செய்து விட்டீர்?'' என்று கேட்டார் துரை. நாலு நாள் கல்யாணம். ஒரு நாள் லீவு வாங்கினேன். அடுத்த நாள் பாங்கி லீவு. மூன்றும் நாள், கிராமத்திலிருந்து ஆறு மைல் வந்து வேலை பார்த்தேன்: நல்லவேளையாக நாலாம் நாள் ஞாயிற்றுக்கிழமையாகப் போய் விட்டது.

அப்போதெல்லாம் செக்குகளில் ஓரணா ஸ்டாம்பு 'எம்போஸ்' செய்திருக்கும்; — அது எந்தத் தொகையானாலும் சரி. பாங்கிப் பழக்கத்தைப் பரவச் செய்வதற்காக லார் பேஸில் பினாக்கெட் கொண்டு வந்த பல சீர்திருத்தங்களில் ஒன்றாக இந்த வழக்கம் கைவிடப்பட்டது:

வெள்ளிக் காசுப் புழக்கம் அதிகம். பெல்லாரி ஜெயிலில் விசேஷமாகத் தயாரான பைகளில் ஆயிரம்



செல்வம் புரியும் சேவகம்

ரூபாய் ஆயிரம் ரூபாயாக வைத்திருப்போம். தீபாவளி சமயத்தில் லக்ஷ்மி பூஜைக்கு வியாபாரிகள் ரூபாய்க் காசாக நிறைய வாங்கிப் போவார்கள். ரூபாயை அடுக்கி வைத்து மாலை போட்டுப் பூசை செய்வார்கள். தீபாவளி முடிந்ததும் அத்தனையும் பாங்கிக்குத் திரும்பிவிடும். இப்படியே வியாபாரத்தில் பணம் புரட்ட அடகு வைக்கப்பட்டிருக்கும் நகைகள் எல்லாம் அந்தச் சமயம் மட்டும் மீட்கப்படும்; மறுபடியும் அடகு வைக்கப்பட்டுவிடும்.

சாதாரண மக்களும் வியாபாரிகளும் சேமிப்பைத் தங்கத்திலும் வெள்ளியிலும் போட்டு வைத்த காலம். சந்தையில் கடலைக் கொட்டை, பஞ்சு போன்ற விளை பொருள்களை விலைக்குப் போடுவார்கள். வந்த பணத்துக்கு அப்படியே தங்கம் வாங்கி விடுவார்கள். மூட்டையைச் சுமந்து வரும் வண்டிக்காரனும் தனது கூலியை அப்படியே வெள்ளியாக வாங்கியதைப் பார்த்திருக்கிறேன். நந்தியாலில் நெய் விற்கும்போது தராசுத் தட்டில் தனது வெள்ளிக் காப்பைப் போட்டு நிறுக்கும் நெய்க்காரியையும் பார்த்திருக்கிறேன். காப்பு சரியாக இருபத்தொரு தோலா எடையிருக்கும் !

சில ஊர்களில் ஒரு கிளார்க்கும் ஒரு காஷியரும் கொண்ட டிரஷரி பே ஆபீஸ்கள் தொடங்கப்பட்டன. இப்படித் தொடங்கிய கர்நூல் கிளையின் நிர்வாகத்தை நான் பார்த்து வந்தேன்.

ஒற்றை ஆளாகப் பாங்கியின் பொறுப்பைப் பார்க்கும் அநுபவமே தனி. ஆடுதுறையில் என் தமக்கை காலமானதற்குக்கூடப் போக முடியவில்லை.

பாங்கிப் பரீட்சை எழுத இரண்டு நாட்கள் அருகே உள்ள நந்தியாலுக்கே போக முடியவில்லை. ஆகவே, எனக்கும் காஷியருக்குமாக ஆபீஸிலேயே விசேஷமாகப் பரீட்சை நடத்தினார்கள் !

வேலை மாற்றமுண்டு. அதற்குப் பிரயாணப்படியும் உண்டு. எனக்கு 'இரண்டாம் வகுப்பு, மனைவிக்கோ மூன்றும் வகுப்பு. தாயாருக்குக் கிடையாது. ஆனால் 'சர்வெண்டு'க்கு உண்டு. குழந்தைகளுக்கோ ஒன்றும் கிடையாது !


ஸ்ரீ என். ஜி. கே. பிரசாத்

(பாங்க் ஆப் இந்தியா ஏஜண்ட்)

பத்து வருஷங்களுக்குமுன் எகனுமிக்ஸ் ஆனர்ஸ் முடித்ததும் ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதினேன். ஆனால் கிடைத்ததென்னவோ பாங்கி வேலையும், கூடவே நிர்வாகப் பதவிக்குப் பயிற்சி வாய்ப்பும்தான். புதுப் புதுக் கிளைகள் தொடங்கும் இந்த நாளில் அவற்றை நிர்வாகம் செய்யப் பயிற்சி கொடுக்கும் ஸ்டாப் டிரெயினிங் கல்லூரிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். பம்பாயில் இப்படிச் சில கல்லூரிகளைப் பாங்கிகளே தொடங்கியுள்ளன.

பாங்கி நிர்வாகிகளுக்குப் பொருளாதார நடப்புக்கள் — நாட்டின் நடப்பும் உலகப் போக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

சாதாரண மக்களின் தேவைகளுக்கெல்லாம் இன்று சேவை செய்கிறது பாங்கி. விவசாயம், ஏற்றுமதி, சிறு தொழில், எல்லாவற்றுக்கும் பல விதத்தில் உதவுகிறது. ஒருவருக்குக் கடன் கொடுப்பது என்றால் அவரது சொத்தின் பெறுமானம் முக்கியமல்ல; கடனைத் திருப்பிக் கொடுக்க அவருக்கு இருக்கும் சக்தியையே பெரிதாக



மதிக்கிறோம். உழைத்துச் சம்பாதித்துக் கடனை அடைக்க அவருக்கு இருக்கும் வாய்ப்பையும் நேர்மையையும் கவனிக்கிறோம். இது ஒரு புரட்சிகரமான மாறுதல்.

பணம் 'அட்வான்ஸ்' தருவது தவிர, ஆராய்ச்சி ரீதியிலும் யோசனையிலும்கூட உதவுகிறது இன்றைய பாங்கி. சிறு விஷயங்களிலும் உதவுகிறது. பல பொறுப்புக்களில் ஈடுபட்டுள்ள குடும்பஸ்தருக்கு அவரது வீட்டு வாடகை, இன்ஷ்யூரன்ஸ் போன்ற தவணைப் பொறுப்புக்களைக்கூட ஏற்று நடத்துகிறது. விதையும் உரமும் வாங்கச் சொற்ப கால 'சீசனல்' கடன் தருகிறது விவசாயிக்கு. பம்ப் செட் அமைக்கவும் டிராக்டர் வாங்கவும் நீண்ட காலக் கடனும் உண்டு.

இப்படியே நாட்டின் தொழில் வளம் பெருகவும் பாங்கிகளிடம் பல உதவித் திட்டங்கள் உள்ளன. தொழில் வளர்ச்சியும் பொருளாதாரச் செழிப்பும் ஒன்றை ஒன்று ஒட்டியதுதானே !

நாளுக்கு நாள் கிராமாந்தரங்களில் புதுக் கிளைகள் தோன்றியவண்ணம் இருக்கின்றன. குஜராத்திலும் மகராஷ்டிரத்திலும் கிராமக் கிளைகள் வெற்றிகரமாகச் செயல்படுகின்றன. நடமாடும் பாங்கிகளும் உள்ளன. பாங்கிப் பழக்கமே இராத எத்தனையோ குடும்பத்தினர் இப்போது கணக்கு வைத்திருப்பது சாதாரணம். புதிய சேமிப்புக் கணக்கு ஒவ்வொன்றும் தனி நபருக்கும் நாட்டுக்கும் பெரிய பலன் தரக்கூடிய எளிய தொடக்கம்தான். டீக் கடைக்காரரும், பெட்டிக் கடைக்காரரும், ஹோட்டல் சேவகரும் கணக்கு வைத்திருக்கிறார்கள். பாங்கில் பணம் போடவும் எடுக்கவும் மக்கள் நீண்டநேரம் காத்திராமலிருக்கப் புதுமையான முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. பணம் போடுவது மட்டுமின்றி நகைகளையும் தஸ்தாவேஜிகளையும் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக பாங்கில் கொண்டு வந்து வைத்துவிட்டுச் செல்வோர் ஏராளம். இவையெல்லாம் பாங்குத் தொழிலில் சமீப காலத்திய முன்னேற்றங்கள்.

பாங்கிப் பழக்கம் பெருகப் பெருகப் பணச் செலாவணியைக் கட்டுப்படுத்த முடியும். நாட்டின் கபிட்சத்துக்குச் செல்வத்தின் சேவகம் முழுமையாகக் கிடைக்கும்.

உள்நாட்டில் பொருளாதார நடப்புகளையும் உலகப்போக்கில் பொருளாதார மாறுதல்களையும் அறிய விசேஷப் பத்திரிகைகள் உள்ளன. இதற்கென்றே இரண்டு முக்கிய தினசரிகள் இந்தியாவில் வெளியாகின்றன. இவை தவிர வார, மாதப் பத்திரிகைகளும் உண்டு. பாங்கி நடவடிக்கைகள் சென்ற சில ஆண்டுகளில் விரிவாக வளர்ந்திருக்கின்றன.

இதுபோல் எந்தத் துறையும் மிகக் குறைந்த காலத்தில் அதிகம் வளரவில்லை. கிளைகளும் வேலை வாய்ப்புக்களும் பெருகியுள்ளன. கூடவே ஊழியர்களின் க்ஷேம நல வசதிகளும் உரிமைகளும் அதிகரித்துள்ளன. வளர்ச்சியடைந்து வரும் இன்றைய சூழ்நிலையில் நிறைய பேருக்கு இந்தத் துறையில் மேல் பதவிக்கு வரும் வாய்ப்பும் அதிகம். பாங்கித் தொழிலில் அதன் சரியான வளர்ச்சிக் காலத்தில் சேர்ந்தது என் அதிர்ஷ்டம்.

பேட்டி : **அம்பி ஆசிர்வாதம்**


23
007
பாலு
கதை: குமரன்
படம்: விஜயா.
ராஜாவின் மர்மக் கோட்டைக்குள் முதலில் ஜோக்கரையும் சுரேஷையும் அனுப்பிய பாலு தான் மட்டும் ஒரு நிமிடம் தாமதித்தான். பையிலிருந்த பென்சிலை எடுத்துச் சுவரில் புத்தக அலமாரி போல் தோன்றும் ரகசியக் கதவைக் குறிப்பிடும் விதமாக ஓர் அம்புக் குறி இட்டான்.
பாலு உள்ளே நுழைந்ததும் கதவு மூடிக் கொள்ள, கதவோரமாகப் பதுங்கி இருந்த இருவர் பின்புறமாகச் சுரேஷைப் பாய்ந்து...
...துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டதும் அந்தக் கையாட்கள் பாலுவை உதைத்து உருட்டித் தள்ள...
எதுக்காக அப்பா என் காலில் விழுறே? மன்னிப்புக் கேட்டும் பிரயோஜனமில்லை!
சாக வேண்டியது தான்!
தாங்க முடியாத உடல் வேதனைக்கிடையில் பாலுவுக்கு ஒரே ஆறுதல், ஆங்கிலத்தில் பேச முடிந்ததுதான். அரை குறை ஹிந்திதானே தெரியும் அவனுக்கு? தள்ளாடி எழுந்தான்...
மன்னிப்புக் கேட்பதா? தூ!
ராஜா! சாகவேண்டியது தான் என்று ராணி சொன்னாளே ஒழிய நீயா நானா என்று கூற மறந்துட்டாளே!
சிங்கக் குட்டி சீறுதோ!
பலே பாலு! ஐ லைக் யூ! ஸ்மார்ட் பாய்!
இன்னொரு பக்கத்தில் சுரேஷும் ஜோக்கரும் இருந்த நிலை கண்டு பாலுவின் ஆத்திரம் பொங்கியது.
ஸாரி சுரேஷ்!
விட்டுடா விடு! செத்தே ஆக வேண்டியதைக் கவனி!


ஹ ஹ ஹா! மேலே ஆக வேண்டியதைக் கவனிக்கப் போகிறவன் நான்! பாலு! சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நீ ஒரு விபத்தில் செத்தால் நல்லதென்று நினைச்சேன், ஆனால் உனக்கு ராஜயோகம் இருக்கு! ராஜா கையாலே சாகிற அதிர்ஷ்டம் உனக்குக் கிடைச்சிருக்கு!
சீ! கொள்ளைக் காரனுக்கு வந்த கர்வத்தைப் பார்! ராஜாவாம் ராஜா! திருட்டுப் பூனை சிம்ம ராஜா என்று மார் தட்டிக் கொள்வதா?
இடியட்! யாருடா பூனை? நான் இந்த பாரத நாட்டையே ஆளப் போகிற சிம்மம். தெரிஞ்சுக்க!
ராஜா பாலுவைத் தன்னுடன் அழைத்துப் போய்ப் பெருமிதத்துடன் ஒரு ரகசியக் கதவைத் திறந்து காட்ட....
பார்த்தாயா! அத்தனையும் சைத்தான் சிறையில் அச்சான பத்து, நூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள்! இவற்றை இந்த நாட்டில் உலவ விட, பணவீக்கம் அதிகரிக்க, பொருளாதாரம் சீர்குலைய.....
... பரிதவிக்கும் மக்கள் நாஸிகளாக இல சீனத் தலைவர்களின் தலைமையை ஏற்பார்கள். அந்த தலைவர்களின் பிரதிநிதியாக நான் இந்த நாட்டை ஆள்வேன்!
பாலுவின் திகைப்பு ஒருவாறு நீங்கியதும்....
அது சரி, கோடிக் கணக்கில் கள்ள நோட்டுக்களைக் குவிச்சு வைச்சுக்கிட்டு எதுக்குக் கொள்ளை அடிக்கறே?
நல்ல கேள்வி! சுட்டிப்பயல் நீ! கள்ள நோட்டுக்களைப் புழங்க விட நல்ல நோட்டுக்கள் தேவை!
பாலு! லட்ச ரூபாய் கள்ள நோட்டுக்களைப் புழங்க விடக் குறைந்தது பத்தாயிரமாவது ஏஜென்டுகளுக்குக் கமிஷன் தரணும். அதை அசல் நோட்டுக்களாகத் தான் கொடுக்கணும்! கொள்ளை அடிப்பது அதுக்காகத்தான்!
இந்த ரகசியத்தையெல்லாம் நீ தெரிஞ்சுகிட்டா பரவாயில்லே! ஏன்னா கையாலாகாத இந்த ஜோக்கர் உள்பட மூணு பேரும் இப்போ இந்த ராஜா கையாலே சாகப் போறீங்க!
தொடரும்.....

நடிப்பு ஒரு நாடகமல்ல!

“என்னடா, நாடகமா ஆடுகிறாய்?” என்று நாம் கேட்பது சகஜம். இந்த அடிப்படையில் பார்த்தால் ‘நடிப்பு ஒரு நாடகமல்ல’ என்பார் பாரிஸிலிருந்து வந்துள்ள ஸ்ரீ ஐஸாக். “அது ஒன்றும் இலேசாக எடுத்துக் கொண்டு போகக் கூடிய காரியமல்ல; பிறவி நடிகன் என்பதாகவும் யாரும் கிடையாது. நடிப்பு, கடினமான உழைப்பின் பலனாகக் கிடைக்கும் கலைச் செல்வம்” என்பார்.

தமிழகத்தின் தொன்மையான கலைகளான பரதநாட்டியம், சங்கீதம் இவற்றை முறையாகப் பயில, சாஸ்திரீய அடிப்படையில் அமைந்த சம்பிரதாயமான வழிமுறைகள் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. ஆனால் முத்தமிழில் ஒன்றான நாடகத்தின் நிலை வேறு. நாடகக் கலைஞர்கள் மேடை ஏறி நடிப்பதற்குப் பள்ளிகளோ பயிற்சி முறையோ இருந்ததில்லை. இன்றைக்கும்கூட நாடகத் துறை சினிமாவில் புகவும் பணம் பண்ணவும் ஒரு குறுக்குவழியாகப் பலரால் கருதப்படுகிறது. நடிப்புக் கலையை முறையானபடி பயின்று தேர்ச்சி பெற ஆர்வமுள்ளவருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் 1961ல் தமிழ்நாடு நாட்டிய சங்கம் அரசாங்கம் அளிக்கும் மான்யத்தின் உதவி கொண்டு ஒரு பள்ளியை நிறுவியது. இதில் ஆரம்ப காலத்தில், திரு எஸ். வி. சகஸ்ரநாமம் பொறுப்பேற்று மிகச் சிறந்த பணியாற்றினார்.

பிற நாடுகளிலிருந்து வரும் நாடகப் பயிற்சி வல்லுநர்களின் சேவையைத் தமிழ் நாடு நாட்டிய சங்கம் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நாடகப் பள்ளி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இவர்களில் பாரிஸிலிருந்து வந்திருக்கும் திரு ஐஸாக் ஆல்வாரெஸ் ஒருவர். பாரிஸ் நடிப்புத் துறைப் பயிற்சிப் பள்ளியின் இயக்குநரான திரு ஐஸாக் தமது பதினேந்தாவது வயதிலே இத்துறையில் ஆர்வம் கொண்டார். முப்பது வயதில்தான் நாடகத் துறையில் முழுமூச்சுடன் ஈடுபடலானார். ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் பம்பரமாய்ச் சுழன்று பயிற்சி அளித்த பிறகும் இவருக்கு அலுப்போ சலிப்போ ஏற்படுவதில்லை. பயிற்சி முடிந்ததும் மாணவ இளைஞர்களிடம் காணப்படும் களைப்பு, 38 வயதான ஆல்வாரெஸிடம் காணப்படுவதில்லை. “மீண்டும் மாலையில் சந்திப்போமா?” என்கிறார். தம்முடைய கலை அநுபவங்களை, கலையின் நுட்பங்களைத் தமக்குக் கிடைத்துள்ள குறுகிய காலத்தில் மாணவர்களுக்குக் கற்பித்துவிட வேண்டும் என்பதிலே தான் இவருக்கு எவ்வளவு ஆவல், துடிப்பு!

மேடை ஏறி நடிக்க விரும்புவோர்க்கு உடற்பயிற்சியும், மூச்சைக் கட்டுப்படுத்தும் ‘பிராணயாம’ப் பயிற்சியும் இன்றியமையாதவை என்று உணர்ந்துள்ள திரு ஆல்வாரெஸ் உடல் உறுப்புகள் அனைத்தையும் தம் விருப்பப்படி இயங்கச் செய்யும் ஆற்றலைப் பெற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார். குழந்தை தாயின் கருவிலுள்ள நிலையில் குவிந்துள்ளதுபோல் அமர்ந்து, அது படிப்படியாக வளர்ச்சியடைவது போன்று மெல்ல மெல்லக் கைகளை உயர்த்தி எழுந்து நிற்பது; அரும்பு மொட்டவிழ்ந்து மலர்வது போல் உடலின் பல்வேறு உறுப்புக்களைச் சிறிது சிறிதாக நிலைமாறச் செய்வது; அம்பெய்தல், துப்பாக்கியால் சுடுவது, குடத்தினால் நீர் ஊற்றுதல் இவ்வாறு பல்வேறு நிலைகளில் சிலைபோல மாணவ, மாணவியரை அசையாமல் நிற்கச் செய்தல்; ஸ்பிரிங் பொம்மையின் கைகளை அசைத்தால் அது வேகமாக மேலும் கீழும் இயங்கிப் பின் மெல்ல மெல்ல வேகம் குறைந்து முன்பிருந்த நிலைக்கு வருவது போல் கைகளை அசைத்தல்—இவ்வாறு விதம் விதமான பயிற்சிகள்! பயிற்சி அளிக்கும்போது மாணவர்கள் கவனக் குறைவாக இருந்தாலோ, தவறுகள் செய்

கத்தாமல் கத்துவது எப்படி என்று கற்றுணரும் மாணவரும் கற்பிக்கும் ஆசிரியரும்.





தாலோ இவருக்கு அசாத்தியக் கோபம் வந்து விடுகிறது! உண்மைக் கலைஞரின் இயல்புதானே இது?

ஆல்வாரெஸ் மௌன நாடகங்களில் தேர்ச்சி பெற்றவர். பான்டோமைம் (Pantomime) எனப்படும் இம் மௌன நாடகங்கள் சிலவற்றை அண்மையில் பார்க்கும் வாய்ப்பு சென்னை ரசிகர்களுக்குக் கிட்டியது. செக்கோஸ்லோவேகியா நாட்டிலிருந்து வந்திருந்த சில கலைஞர்களின் நிகழ்ச்சியும் பிறகு பிரெஞ்சு — ஜெர்மானிய கூட்டுத் தயாரிப்பான ஒரு 'மைம்' நிகழ்ச்சியும் சென்னையில் நடைபெற்றன. இந்நாடக நடிகர்கள் படிகள் இல்லாத போதே மாடிப் படிகளில் ஏறுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்துவார்கள். இப்படியே ரயிலில் போவது போலவும் குதிரை ஓட்டுவது போலவும் பிரமையை உண்டாக்குவதில் நிபுணர்கள். பிரெஞ்சு 'ஜெர்மானிய கூட்டுத் தயாரிப்பில் இதே மௌன நாடகங்கள் நவீன முறையில் கற்பனை அழகோடு நாகரிகமாக்கப்பட்டிருந்தன. 'ஆக்டோபஸ்' போன்ற நீர்வாழ் ஜந்துவாகவும் விண்வெளியில் ஒரு நியதிக்குட்பட்டு இயங்கும் கிரகங்களாகவும் நூதனமான இசைக்கு ஏற்ப மௌனமாக நடித்தார்கள்.

மௌன நாடகங்கள் குறித்துக் கேட்டதற்கு ஆல்வாரெஸ் கூறுகிறார்: ''நாடகமே ஒரு மொழிதான். குழந்தையின் கள்ளமற்ற சிரிப்பைப் பாருங்கள்! அதுவே ஒரு அழகான நடிப்புத்தான். நாடகம்தான்! மொழியின் உதவியின்றியே உள்ளத்தின் உணர்ச்சிகளை, கருத்துக்களை வெளியிட முடியும், திறமைமிக்க கலைஞரால். கலைஞனுக்கு உள்ளம் வேண்டும். மனிதாபிமானம் வேண்டும். நான் டெல்லியிலிருந்து வரும் வழியில் பல கிராமங்களைப் பார்த்தேன். கிராம மக்களின் கள்ளங்கபடற்ற உள்ளம் என்னைக் கவர்ந்தது. நகர மக்களிடையே பொதுவாகக் காணப்படும் போலி நாகரிகம் அவர்களிடம் இல்லை. அவர்கள் இதயமுள்ளவர்கள். ஏற்றம் இறைக்கும் காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. அதை என் மௌன நாடகத்துக்குப் பயன்படுத்த ஆசைப்படுகிறேன். கஜுராஹோ, கோனராக் சிற்பங்களையெல்லாம் பார்த்துப் பரவசமடைந்தேன்.'' (இந்த இடத்தில் திரு ஆல்வாரெஸ் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டார்.)




பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ ஆல்வாரெஸ்

ஸ்ரீ ஆல்வாரெஸ் அளிக்கும் மௌன நாடகத்தில் மாதா கோயிலோ மணியோ இல்லாமலே அவர் மணியடிப்பவனாக நடிக்கிறார். அவர் கயிற்றை இழுக்கும் லாகவம் காரணமாகக் கண்முன் மாதாகோயிலோ மணியோ இல்லாத குறை தெரியவில்லை. மணியின் நாக்கு மணியோடு மோதி ஓசை எழுப்புவதைப் பதிவு செய்யப்பட்ட 'டேப்' ஒலி பரப்புகிறது. மணியோசை இல்லாமலேயே கூட மணியடிப்பவனாக நடித்து ஏறக்குறைய அதே உணர்ச்சியைத் தோற்றுவிக்கிறார்.

இவர் உலகினைத் தம் கண்களால் மட்டுமின்றி உள்ளத்தாலும் கண்டு ரசித்துள்ள கலைஞர்.

— 'பாணன்'

தமிழ்நாடு நாட்டிய சங்கத்தின் நடிப்புப் பள்ளி மாணவர்கள் ஸ்ரீ ஆல்வாரெஸ் கூறுவதை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்.




நொடிப் பொழுதில் பளிச்சிடும் தூய்மைக்கே...
NEW SUPER FOAMING
Vim
CLEANS
நுரைவளமோங்கும் விம்
கடுமை வாய்ந்த, மலிவான தேய்ப்புச் சாதனங்களை நம்பியிருக்க முடியுமா? கண்டிப்புடன் பெற்றிடுவீர் நுரைவளமோங்கும் விம். பேசின், தொட்டி, பீங்கான் பாண்டங்கள், பாத்திரங்கள், எதுவாயினும் சரி—விம் பட்ட இடமெல்லாம் ஒளிப் பிழம்பே. துப்புரவாக்குவதில் அதிக ஆற்றல் வாய்ந்த விம், விடாப்பிடியான பிசுக்குக்கும் விடைகொடுக்கும். துப்புரவான இல்லங்களுக்கு அடையாளம் ஒப்பிலாத விம் ஒளி.
ஓங்கிய ஒளிபெறவே—வாங்குவீர் விம்.
பாங்கான இல்லங்களிலே–விம், பளிச்சிடும்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



தயாரிப்பு:
வாண்டுமாமா
34


பழங்காலப் பழக்கம்

★ முன் காலத்தில் மேலை நாட்டுக் கடற்கொள்ளைக் காரர்கள் — ஏன் சாதாரண மனிதர்கள் கூட — காதிலே துளையிட்டு வளையங்களை — காதணிகளை — அணிந்து வந்தார்கள். காதணிகள் கண் பார்வையைத் துல்லியமாக்கும் என்ற நம்பிக்கைதான் இதற்குக் காரணம்!

★ உணவுக்குப் பயன்படும் உப்பு ஒரு காலத்தில் ரொம்பவும் அரிதான பொருளாகக் கருதப்பட்டு வந்தது. உப்பை வீணாக்குவதைப் பெரிய குற்றமாகக் கருதி வந்தார்கள் மக்கள் — மேலை நாட்டவர்தான்! அவர்களிடம் இன்னொரு நம்பிக்கையும் இருந்தது. கெட்ட காரியங்களைச் செய்யும் ஆவி இடப் பக்கமும் நல்லது செய்யும் ஆவி வலப் பக்கமும் இருப்பதாக எண்ணி வந்த காலம் அது. உப்பை வீணாக்குவதோ தவறு. அதைச் செய்ய நேர்ந்தால் அதற்கான தண்டனையிலிருந்து தப்புவதற்காக அரிய பொருளான உப்பைக் கெட்ட ஆவிக்கு லஞ்சமாக வழங்கக் கொஞ்சம் உப்பை எடுத்து இடது தோள் வழியாகப் பின்னால் வீசுவதை அந்தக் காலத்தில் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

விந்தையல்லவோ?

யானைகளைப் பழக்கி அதற்கு ஆணையிடுகிறார்களே மாவுத்தர்கள். அவர்கள் கையாளும் மொழி என்ன? ஹிந்தியா? பாரசீகமா? அரபியா? இல்லவே இல்லை. அப்படியானால்...? 50,000 ஆண்டுகளுக்கு முன்பு குகைகளில் வாழ்ந்த மனிதன் பேசிய பாஷைதான் மாவுத்தர்கள் இன்று யானைகளைப் பழக்கக் கையாளும் பாஷை. வியப்பாக இருக்கலாம். ஆனால், உண்மை. குகைகளில் வாழ்ந்த ஆதி மனிதன் தங்களை அடக்கிப் பழக்க ஆக்கிய மொழிகளை யானைகள் இன்னும் நினைவில் வழி வழியாகக் கொண்டு வருகின்றன. அந்த அடிப்படையில் அவைகளுக்கு ஆணை பிறப்பித்தால்தான் அவைகள் பணிகின்றன. வேறு எந்த மொழியையும் அவை புரிந்து கொள்ளுவதில்லை. இது விந்தையினும் விந்தையல்லவோ?




இது என்ன?


பதின்மூன்று என்றதும் 'துரதிர்ஷ்ட எண்' என்று மேலை நாட்டினர் கருதும் ஒரு நம்பிக்கைதான் உங்கள் நினைவுக்கு வருகிறது இல்லையா? ஆனால் இத்தாலி தேசத்தில் பதின்மூன்றை நல்ல சகுனத்தின் அறிகுறியாக மதிக்கிறார்கள். பெண்கள் இது போன்ற தாயத்துக்களை அணிகிறார்கள். கேடுகளையும் நீக்கும் சக்தி இவ்வித ரட்சைகளுக்கு இருப்பதாக ஒரு நம்பிக்கை அவர்களுக்கு.





காலிப் பெட்டியில் முயல்


அட்டைப் பெட்டி மூடியின் ஒரு பக்கத்தின் நடுவில் சிறு துவாரம் செய்து அதில் ஒரு நூல் கயிற்றைக் கட்டுங்கள் (படம் 1) அதன் மறு முனையில் ஜெம் கிளிப்பை வளைத்துக் கொக்கி போலாக்கிக் கட்டுங்கள். இந்தக் கொக்கியைப் பொம்மை முயலின் கழுத்தில் கட்டியுள்ள ரிப்பனில் இணைத்து விடுங்கள். பொம்மை முயல் பெட்டி மூடியின் நடு மையத்தில் தொங்கும் அளவுக்குக் கயிறு இருந்தால் போதும். (படம் 2) முயல் இருக்கப் பெட்டியை மூடி அதை ஒரு சிறிய மேஜை மீது வையுங்கள். மேஜைக்குப் பின்னால் நீங்கள் நிற்கும் போது முயல் இணைத்த மூடிப் பக்கம் உங்களுக்கு மிக அருகே இருக்க வேண்டும். எல்லாம் தயாராகி விட்டதா ? 'மாஜிக்' காட்சியைக் காண உன் சகாக்களெல்லாம் கூடிவிட்டார்களா? பெட்டியை மேஜை மீது திருப்புங்கள் — அதன் எல்லாப் பக்கங்களையும் அவர்கள் பார்க்கும் படி. (படம் 3) பெட்டியை மூன் பக்கமாகத் திறந்து காட்டுங்கள். கொக்கி இணைத்த பக்கம் உங்கள் புறமிருக்க வேண்டும். (படம் 4) பெட்டி மூடியின் உட்புறத்தைப் பார்ப்பார்கள். அப்படியே அதை அவர்கள் பக்கமாகப் பெட்டியின் பக்கவாட்டில் வையுங்கள் (படம் 5) மூடியின் மேல் பாகத்தைப் பார்த்துக் கொள்ள இது. இப்போது மூடியை உங்கள் வலது கையில் — அதன் உட்புறம் பொம்மை முயல் தொங்கும் நிலையில் உங்கள் பக்கமாக எடுத்துக் கொள்ளுங்கள். (படம் 6) இனி பெட்டியை இடக் கரத்தால் கவிழ்த்து அதன் உள்ளே ஒன்றுமில்லை என்பதைக் காண்பியுங்கள். (படம் 7) அவர்கள் திருப்தியடைந்ததும் மூடியை அவர்கள் பக்கமாகவே கொண்டு போய் மூடிவிட்டு ''ஓம் ஹ்ரீம்—க்லீம்'' என்று மந்திரங்களை ஜபித்துக் கோலால் பெட்டியைச் கழற்றுங்கள் (படம் 8) மறுபடியும் மூடியைத் திறந்து பார்வையாளர் பக்கமாகச் சரித்து வையுங்கள் (படம் 9) பெட்டிக்குள் கையை விட்டு முயலின் கழுத்தோடு இணைத்துள்ள கொக்கியை லாகவமாக விடுவித்து ''ஆஹா!'' என்று கூவியபடியே அதன் காதைப் பிடித்துத் தூக்கிக் காட்டுங்கள். (படம் 10) கைத்திறன், செய்முறை வேகம் இவை கூடினால் உங்களை மந்திரவாதி என்றே சொல்லி விடுவார்கள்.

























அத்தியாயம் இருபத்துமூன்று

மகிழ்ச்சியும் அதிர்ச்சியும்

"இன்றைக்கு என்ன வந்துவிட்டது உங்களுக்கு? ஏன் இப்படி உம்முன்னு உட்கார்ந்திருக்கிறீங்க ?'' என்று செல்லக் கோபத்துடன் சிணுங்கிக் கேட்டாள் வந்தனா.

''இல்லையே ! அதெல்லாம் ஒண்ணுமில்லை '' என்று மெல்லச் சிரித்துச் சொன்ன முத்துசிவன் சோபாவில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''நல்லாயிருக்குது நடிப்பு ! கொல்லன் தெருவிலே ஊசி விக்காதிங்க !'' என்று கூறி நகைத்தாள் வந்தனா. ''நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கிறேன்; இந்த வீட்டுக்கு வரும்போதே உங்க 'மூட்' சரியாயில்லே. அப்புறம் அந்த டான்ஸ் பர்ஃபாமன்சுக்குப் போய் வருகிற வரையில்கூடக் கலகலப்பாயில்லே. இங்கே வந்தப்புறமும் எதையோ பறி கொடுத்த மாதிரி உட்கார்ந்திருக்கிறீங்க. என் மேல் எதனுச்சும் கோபமா ?''

''ஆமாம்.''

''நான் என்ன பண்ணினேன், உங்களுக்குக் கோபம் வரும்படியாக?''

''உன் மேல் கோபமாயிருக்கிறேன்னு சொல்றயே. அதுதான் எனக்குக் கோபம் !''

''ஓ,.... இப்ப நீங்க நடிக்க மட்டுமில்லே; நல்ல வசனமும் பேசக் கத்துக்கிட்டிருக்கிறீங்க!''—வந்தனா கலீரெனச் சிரித்தாள். ''என் மேல் கோபமில்லேன்னு சொல்றதிலிருந்து வேறே யார் மீதோ, எதற்காகவோ கோபமாயிருக்கிறீங்கன்னு நீங்களே ஒப்புத்துக்கிட்டீங்க, இல்லையா ? அதைத்தான் நானும் கேட்கிறேன்: உங்க ஆபீசிலே எதனுச்சும் தகராறு? இல்லே, வீட்டில் என்னமாவது...?...சொல்லுங்களேன்?'' என்றவாறு நெருங்கி வந்து அவனுடைய இடது தோளில் தன் இரு கைகளையும் துவளத் தொங்கப் போட்டு விரல்களைக் கோத்து அவற்றின் மேல் மோவாயை ஊன்றிக் கொண்டாள்.

முத்துசிவன் முகத்தை மட்டும் திருப்பி அவளை ஒருகணம் கூர்ந்து நோக்கி விட்டு மெல்லச் சிரித்துக் கொண்டே, ''எனக்கு யார் மீதும் எதற்காகவும் கோபமில்லே, வந்தனா ! உன்னைப் பற்றி — இல்லே, இல்லே; நம்மைப் பற்றி — ஒரு விஷயமாய்த் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறேன்; அவ்வளவுதான் !'' என்றான் கரகரத்த குரலில்.

சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்ட வந்தனா, ''பார்த்தீங்களா, நீங்க இப்ப 'இங்கே இல்லே'ன்னு நான் சொன்னது சரியாய்ப் போச்சு!'' என்றாள் ஆள்காட்டி விரலையும் தலையையும் ஆட்டிக் கொண்டே. பிறகு தன் மை தீட்டிய விற்புருவங்களை நெற்றி மேட்டுக்கு ஏற்றி வளைத்துக் கொண்டு அவனை ஒரு தினுசாகப் பார்த்தபடி, ''அது என்ன, நம்மைப் பற்றி இப்போது அத்தனை தீவிர சிந்தனை ?'' என்று கேட்டாள்.



கிளிஞ்சல் கோபுரம்

ஜெகசிற்பியன்

இதற்குப் பதிலேதும் சொல்லாமல் சிகரெட் புகைத்தவாறு மௌனமாயிருந்தான் முத்துசிவன். பக்கத்து அறையிலிருந்து 'டைப்' அடிக்கும் ஒலி எழுந்தது. இன்னொர் அறையில் கோகிலாம்பாள் பழைய காலத்து நாடகப் பாடல் ஒன்றை 'ஹம்மிங்' பண்ணிக் கொண்டிருப்பது இலேசாகக் கேட்டது. பகலெல்லாம் உடம்பு சரியில்லாமல் வேதனை முனகலிடும் அவள் இரவானதும் அந்த முனகலை இராக ஆலாபனையாக மாற்றிக் கொள்வாள்.

காரணம், டாக்டர் 'அட்வைஸ்' பேரில் அவளிடம் 'எல். பர்மிட்' இருந்தது!

''என்ன, நான் கேட்டதற்குப் பதில் இல்லே ?'' என்றவாறு தன் மூக்கால் அவனது கன்னத்தைக் குத்தினாள் வந்தனா.

''அது இருக்கட்டும்; இப்ப உன் அம்மா பாடறாங்களா? இல்லே, அழறாங்களா ?'' என்று கேட்டுச் சிரித்தான் முத்துசிவன்.

''உங்களுக்கு ஏன் அந்த ஆராய்ச்சி? நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க !''

''உன் கேள்விக்குப் பதில் சொல்லத்தான் அதைக் கேட்கிறேன்.''

''நல்லா இருக்குதே டயலாக்கு!''

''எப்பவும் உனக்கு நாடக நினைப்புத்தானா ?'' என்று சற்றுக் கோபமாகச் சிடுசிடுத்தான் முத்துசிவன்.

''இல்லே, இல்லே!'' என்று கொஞ்சிக் குழைந்த வந்தனா, ''எதற்கு அதைக் கேட்கிறீங்க ?'' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

''அவங்ககிட்டே நான் கொஞ்சம் பேசணும்.''

''என்ன பேசப் போறீங்க? என் கிட்டே சொல்லக் கூடாதா ?''

முத்துசிவனின் முகம் திடீரென்று கறுத்துச் சிறுத்தது. யார் மீதோ கொண்ட வஞ்சினத்தைத் தீர்த்துக் கொள்ளத் துணிந்து விட்டவன்போல் உதடுகளை இறுக்கி மடித்தான். தன்னை அவமானப்படுத்திய யாரையோ பழி வாங்க வேண்டுமென்ற சின வெறிக்குள்ளானவன் போன்று தன் சிவப்பேறிய கண்களை உருட்டிப் புரட்டினான். மறு கணம் ஒரு முரட்டுத் திமிறலுடன் திரும்பித் தன் அருகில் ஒருக்களித்து அமர்ந்திருந்த வந்தனாவின் இடையை வளைத்து இழுத்து அணைத்துக் கொண்டு அவளையே ஒரு விநாடி கூர்ந்து 'பார்த்துவிட்டு, '' நீ கேட்பது சரிதான் ! முதலில் அதை உன் கிட்டத்தான் சொல்லணும்; அப்புறமே உன் அம்மாகிட்டே தெரிவிக்கப் போறேன் !'' என்றான் அடித் தொண்டையில்.

அவனுடைய திடீர்க் கோபப் போக்கைக் கண்டு மிரட்சியடைந்து விட்ட வந்தனா அவனைத் திருதிருவெனப் பார்த்து விழித்தாள்.

''ஆமாம், வந்தனா ! நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதென்கிற முடிவுக்கு வந்திருக்கிறேன்; நீ என்ன நினைக்கிறே ?''

சடாரென்று அவன் பிடியிலிருந்து உருவிக் கொண்டு பின்னால் வழுக்கிச் சென்ற வந்தனா பிரமிப்படைந்த நிலையில் அவனை ஏறிட்டு நோக்கினாள். பிறகு சட்டென்று தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு அப்படியே வளைந்து குனிந்து தொடைகளுக்கிடையில் தலையைப் புதைத்துக் கொண்டாள். அவளின் முதுகு மட்டும் 'விலுக், விலுக்'கென்று குலுங்கியது. அதைத் தொடர்ந்து மெல்ல விம்மிச் செறுமும் ஒலியும் எழுந்தது.

முத்துசிவன் இதைக் கண்டு திகைத்து விட்டான். சற்றுமுன் அவனுள் கிளர்ந்திருந்த அவ்விசித்திர உணர்ச்சிகள் இப்போது எங்கு போய் மறைந்தன என்றே தெரியவில்லை. பரபரப்புடன் அவளை அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து பார்த்தான். வந்தனாவின் விசும்பலும் குலுங்கலும் இன்னும் ஓயவில்லை.

பாதி முதுகு அளவே ப்ளவ்ஸ் அணிந்திருந்த அவள் இப்போது ஒரேயடியாகக் குனிந்திருந்ததால் முக்கால் முதுகு வெட்டவெளியாகி விட்டிருந்தது. பொன்னிறம் பாரித்த அந்த முதுகுப் பகுதியையும், அதன் கீழே இடையைச் சுற்றி ஒற்றை வளையமாக மடிந்திருந்த இளந்தசை மடிப்பையும் வெறித்துப் பார்த்த முத்துசிவன் அத்தசை மடிப்பின் மேல் பட்டென்று ஒரு தட்டுத் தட்டி, ''என்ன இது. ஏன் இப்படி அழுறே ?'' என்றான் மெல்லச் சிரித்துக் கொண்டே.

இன்று மாலை இதே போல் அவன் கருணாவின் இடைத் தசை மடிப்பின் மேல் தட்டிய போது அவள் என்ன துடி துடித்து அதிர்ந்து மிரண்டு போனாள் ! ஆனால் வந்தனா அந்தத் 'தட்டை'ச் சட்டை பண்ணிக் கொள்ளவே இல்லை; அதை உணர்ந்த அறிகுறியாக அவள் உடலில் சிறு அசைவும் தென்படவில்லை.

இளநகை புரிந்த அவன் அவள் அருகில் மேலும் நெருங்கிச் சாய்ந்து, ''ஏன் அழறே வந்தனா ? நான் அப்படிச் சொன்னது உனக்குப் பிடிக்கவில்லேயா? எனது அந்த முடிவை நீ ஏற்க மாட்டாயா ?'' என்று தன்னை மீறிய படபடப்புடன் கேட்டுக் கொண்டே அவளது தளதளப்பான முதுகை இதமாக வருடினான்.

நாண் தளர்ந்து நிமிரும் வில்போல் திடீரென்று நிமிர்ந்த வந்தனா ஏதோ ஆவேசம் வந்த



வள் மாதிரி தாவிப் போய் அவனை அப்படியே கட்டியணைத்து முகத்தைத் தோளில் புதைத்துக் கொண்டு கலகல வெனச் சிரித்தாள். குலுங்கிச் சிரித்துக் கொண்டே அவனை மேலும் இறுக்கி அணைத்தாள்.

மூச்சுத் திணறிய முத்துசிவன் பீதி யடைந்தவனாய்ப் பின்னால் சாய்ந் தான்.

'' நான் பாக்கியசாலி ! பெரும் பாக்கியம் செய்தவள் நான்!'' என்று சிரிப்பும் அழுகையும் கலந்த குரலில் குமுறியவாறு துவண்டு நிமிர்ந்த வந்தனா தன் கன்னங்களில் வழிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டு சடாரெனப் பின்னால் சரிந்து



ஜி-11 கொண்ட சிந்தால்
இப்பொழுது
அதிக நறுமணமும்
நுரைவளமும் கொண்டுள்ளது



உங்கள் நன்மைக்காக
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது

புதிய மீடியம் (மத்திய) சைஸ் சிந்தால் உங்கள் பட்ஜெட்டுக்குப் பொருத்தமானது. இந்த சோப், எல்லா விதங்களிலும் சொகுசுமிக்கது—எனினும் மலிவானதுதான்.

அதிக நறுமணம்—ஆழ்ந்த மணம், நீடித்திருப்பது. அதிக நுரை—மென்மையும், வளமையும் கூடியது. சிந்தாலுக்கே உரிய, ஒப்பற்ற ஜி-11 உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.



CINTHOL

போய்ச் சோபாவின் மறு முனையில் வெட்கத்துடன் ஒடுங்கித் தலை குனிந்தாள்.

தான் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சிப் பரவசமடைந்து போன அவளுக்கு அதைக் கட்டுப்படுத்த இயலாமல் அழுகை வந்து விட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட முத்துசிவன், ''பொல்லாத குறும்புக்காரியாயிருக்கிறாயே! நீ அழுததைப் பார்த்து நான் என்னவெல்லாம் நினைச்சுப் பயந்துட்டேன், தெரியுமா?'' என்றான்.

நாணிக் கண் புதைத்த வந்தனா ஒரேடியாகத் தன் உடம்பை நெளித்து முகத்தை மறு பக்கம் சாய்த்துக் கொண்டாள்.

முத்துசிவன் அவளது மோவாயைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி நிமிர்த்திக் கொண்டு, ''சரி; உன்னோட சம்மதம் கிடைச்சுட்டது! இனிமேல் உன் அம்மாவிடம் சொல்லலாம் இல்லையா?'' என்றான் புன்சிரிப்புடன்.

சட்டென்று அவன் வாயை மூடிய வந்தனா, ''ஐயோ! வேணாம், வேணாம்!'' என்று கண்களை மலர்த்தி இரகசியக் குரலில் கிசுகிசுத்தாள்.

சற்றே குழப்பம் அடைந்த முத்துசிவன், ''வேண்டாமா?.... ஏன் வேண்டாம் என்கிறே?'' என்று அடித் தொண்டையில் விளித்தான்.

''இதற்குள் இந்த விஷயத்தை அவள்கிட்ட சொல்ல வேணாம்.''

''ஏன் அப்படி?''

''காரியம் கெட்டுப் போகும்!''

''உன் அம்மா சம்மதிக்கமாட்டாங்களா?''


''சம்மதிப்பாள். ஆனால் அதை நீங்க சொல்லக் கூடாது; அதுவும் இப்போ....''

''வேறே யார் சொல்றது? எப்ப சொல்றது?''

''நானே சொல்லிக்கிறேன்.''

முத்துசிவனுக்கு இந்தப் பதில் அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. அதனால் அவன் உள்ளூறக் குழப்பமடைவது முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

அதை உடனே புரிந்துகொண்ட வந்தனா சற்றுப் பரபரப்புடன் தணிந்த குரலில் கூறினாள்: ''என்ன யோசிக்கிறீங்க? நம்ம கல்யாண விஷயத்தை என் அம்மாக்கிட்ட நீங்க சொல்ல வேணாம்னு நான் சொன்னதைப் பற்றி யோசிக்கிறீங்களா? அதற்கு அப்படி ஒண்ணும் பெரிய காரணம் இல்லை.





''இன்று மாலை நம்ம ஜெயில் கைதிகளுக்கு சினிமா காட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!''

''பலே! படத்தின் பேர்?''

''அலிபாபாவும் நாற்பது திருடர்களும்!''

என் அம்மா எனக்குக் கல்யாணம் பண்ணனும்னு இன்னும் கனவில்கூட நினைக்கலே. அப்படி நினைக்காமல் இருக்கிறவங்ககிட்ட நீங்க போய் இவ் விஷயத்தைத் திடுதிப்புன்னு சொன்னால் மிரண்டு போயிட மாட்டாங்களா ?.... மிரளுகிறதுக்கு இதிலே என்ன இருக்குதுன்னு நீங்க கேட்கலாம். அதையெல்லாம் விளக்கிச் சொல்ல எனக்கு விருப்பமில்லை; கேட்டாலும் சொல்ல மாட்டேன்.''

அன்றொரு நாள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ரட்சகன் இவளைப் பற்றிச் சொன்ன விவரங்களை இப்போது நினைவுபடுத்திக் கொண்ட முத்துசிவனுக்கு அவளின் இந்தப் பேச்சு அதிக வியப்பைத் தரவில்லை. ஆகவே, ''நல்ல வேடிக்கைதான் !'' என்று கூறி மெல்லச் சிரித்த அவன், ''ஆமாம்; நீ மட்டும் உன் அம்மாகிட்டே எப்படிச்சொல்வாயாம்?'' என்று கேட்டான் கேலிக் குரலில்.

'' நான் முதலில் என் அப்பாவிடம் தான் சொல்வேன். அவர் பரம சந்தோஷத்துடன் உடனே ஒப்புக் கொள்வார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அப்புறம் அவரே அம்மாவிடம் சொல்வார். அவர்கள் ரெண்டு பேருக்கும் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பமாகும். அந்த யுத்தத்திலே அப்பா வெற்றியடைவார்.''

''அதை எப்படி அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்ல முடியும்? இம்மாதிரி யுத்தங்களில் எப்போதும் உன் அம்மாவே ஜயக்கொடி தூக்குவாங்கன்னு நான் கேள்விப்பட்டிருக்கிறேனே ?''

''அது வாஸ்தவம். ஆனால் இந்த யுத்தத்தில் வெற்றி என் அப்பாவுக்குத்தான் கிடைக்கும்! ஏன்னா, நான் அவர் பக்கம் இருக்கிறேனே!''

''ஓ, மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு எடுக்கிற முடிவா இது ?'' என்று புன்னகையுடன் தலையாட்டிக் கொண்ட முத்துசிவனுக்கு உள்ளூற ஒருவிதத் திகிலும் குழப்பமும் கிளர்ந்தெழவே செய்தன. காரணம், அவளை மணந்து கொள்வதென்ற திடீர் முடிவுக்கு அவன் வந்த போது இப்படி ஒரு சிக்கல் அதிலே தோன்றும் என்று எதிர்பார்க்காததுதான். ஆனாலும் ஒரு விஷயத்தை 'இப்படித்தான் இருக்கும்' என்று அவனாகவே ஊகித்து அறிந்து கொண்டான்:

' ரட்சகன் சொன்னதுபோல் வந்தனா என்னிடம் ஒரு பரஸ்பர சந்தோஷத்துக்காக மட்டும் உறவாடவில்லை ; உண்மையிலேயே என்னை அவள் நேசிக்கிறாள். நேசிப்பதோடு நில்லாமல் என்னை மணந்து கொள்ளவும் விரும்புகிறாள். எங்களின் முதல் சந்திப்பிலேயே இப்படி ஓர் எண்ணங் கொண்டு அவள் ஏங்கத் தலைப்பட்டிருக்கிறாள். இல்லையானால், அவளை நான் மணக்க முடிவு செய்திருப்பதாகச் சொன்னதைக் கேட்டதும் அந்தச் சந்தோஷத்தைத் தாங்கமாட்டாமல் அவ்வளவுக்கு உணர்ச்சி வயப்பட்டு அழுதிருப்பாளா ? சினிமாவிலும் நாடகத்திலும் நடித்துப் பணமும் புகழும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை அவளுக்கு முதலில் இருந்திருக்கலாம்; பிறகு அம்முயற்சியில் கண்ட தோல்விகளும் கசப்பான அநுபவங்களும் சேர்ந்து அவளின் அந்த ஆசைக் கனவைப் பங்கப்படுத்தித் திசை மாற்றி விட்டன போலும்!'

இப்படித் தனக்குச் சாதகமான ஊகங்களைத் தேடிக் கற்பித்துக் கொண்டு உள்ளம் குளிர்ந்து போன முத்துசிவன் அவளைப் பரிவும் பாசமுமாகப் பார்த்து, '' ஆகட்டும், வந்தனா ! நம்ம கல்யாணத்துக்கு உன் அம்மா, அப்பாவோட சம்மதத்தை வாங்குகிற பொறுப்பை உன்னிடமே விட்டுவிடுகிறேன். ஆனால் ஓரிரு தினங்களுக்குள்ளே அதுபற்றி நிச்சயமான முடிவு ஒன்றை எனக்கு நீ தெரிவிச்சுடணும், என்ன?'' என்றவாறு எழுந்தான்.



புதுடயரா
அல்லது டிவிஎஸ்
ரீடிரெட் செய்ததா?

சொந்தக்காரருக்கு
மட்டுமே தெரியும்!

மதிநுட்பமுள்ள கார் சொந்தக்காரர்கள் என்ற முறையில் உங்கள் டயர்கள் ரீடிரெட் செய்யப்படுவதன்மூலம் அதிக நாளைக்கு பயன்படுவதையே நீங்கள் விரும்புவீர்கள். எனினும் வெளிப்படையாக ரீடிரெட் செய்யப்பட்டதாக தோன்றும் ஒரு டயரை உபயோகிக்க நீங்கள் விரும்பமாட்டீர்கள். டிவிஎஸ் ரீடிரெட் செய்தவை புதியனபோலவே தோற்றமளிக்கின்றன, புதியன போலவே உழைக்கின்றன. அவை ரீடிரெட் செய்யப்பட்டவை என்று உங்களுக்குமட்டுமே தெரியும். மேலும் எவ்வளவோ செலவு மிச்சம்! புதிய டயர் ஒன்றின் விலைக்கு நீங்கள் மூன்று டயர்களை ரீடிரெட் செய்துகொள்ளமுடியும்!

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

பங்களூர்-கோயமுத்தூர்-சென்னை-புதுக்கோட்டை-செகந்திராபாத்-திருநெல்வேலி-விஜயவாடா

'ஊம்' என்று தலையசைத்த வந்தனா, இப்போதே அவனுக்கு மனைவியாகி விட்டவள்போல் நாணிக் கோணிக் கொண்டு ரொம்பவும் பதவிசாக முன்றானையால் முதுகை மூடிக் கொண்டாள்.

அடுத்த அறையில் 'டைப்' அடிக்கும் ஒலி இன்னமும் கேட்டுக் கொண்டு தான் இருந்தது. மற்றோர் அறையிலிருந்து கோகிலாம்பாளின் இராக ஆலாபனை ஓசையும் எழுந்தது.

வந்தனா ரெகார்டு பிளேயர் பெட்டியைத் திறந்து, 'கம் செப்டம்பரில்' வரும் ஒரு பாடல் டியூன் இசைத்தட்டை இயக்கிவிட்டு முத்துசிவனை நோக்கிக் கந்தர்வரஸ மயமான புன்னகையுடன் கண் சிமிட்டினாள்.

அன்னபூரணியம்மாளுக்கு முதலில் தன் மைந்தன் சொன்ன அந்த ஐந்து வார்த்தைகளைக் கேட்டதுமே ஆனந்தம் அளவுகடந்து போயிற்று.

''அம்மா! நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்.''

இப்படி ஒரு மங்கலச் சேதி அவன் வாயிலிருந்து எப்போது வருமோ என்று எவ்வளவு காலமாக அவள் ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்! மகிழ்ச்சிப் பரவசத்தால் அவளுக்கு நெஞ்சின் இயக்கமே ஒரு கணம் தடைப்பட்டுப் பின் ஓடியது.

அடுத்த வாக்கியமாக முத்துசிவன் சொன்னான்: ''பெண் யாருன்னு நீங்க கேட்கவில்லையேம்மா? ஒரு பெரிய ஆடிட்டரோட பெண்; பெயர் வந்தனா!''

சற்றுமுன் ஏற்பட்ட மகிழ்ச்சிப் பரவசமெல்லாம் இப்போது திகைப்பும் வியப்புமாக மாறி அவளைத் திக்குமுக்காட வைத்துவிட்டன. புத்தம் புது வெள்ளத்தில் இறங்கி நெஞ்சம் குளிரக் குளிர ஆனந்தமாக நீராடிக் கொண்டிருந்த சமயம், திடீரென அவ்வெள்ளம் வற்றி வறண்டுவிடக் காய்ந்த கட்டாந்தரையில் காலிடறி விழுந்து எழுந்தவள் போல் தட்டுத் தடுமாறித் தலை நிமிர்ந்து தன் மைந்தனைத் திருதிருவெனப் பார்த்தாள் அவள்.

அதற்கு மேல் அவன் ஏதும் சொல்லாமல் ஆபீசுக்குக் கிளம்பிப் போய் விட்டான்.

அன்னபூரணியம்மாளுக்கு அன்றைய பொழுது எப்படிப் போயிற்று என்றே தெரியவில்லை; அத்தனை ஆழ்ந்த சிந்தனை!

'என்ன இது ஆச்சரியம்! ஏன் இப்படிச் செய்தான்? எதற்காக இந்த முடிவுக்கு வந்தான்?'



''ஓ...நீங்களா!... வாங்க... வாங்க...... ஒண்ணுமில்லே...வந்து...இல்லே ... ஆமா .. இது...ஏர் கண்டிஷன் ப்ளான்ட் ரிப்பேராப் போச்சு!''

தன் பிள்ளை சீக்கிரமே கல்யாணம் பண்ணிக் கொண்டு குடியும் குடித்தனமுமாக நாலு பேர் மெச்ச வாழ வேண்டும் — இப்போது ஊரார் அவனைப் பற்றி அதிருப்தி அடைந்து பேசும் பேச்செல்லாம் அடங்கி ஓய வேண்டும் என்பதற்காக மட்டும்தான் அவள் நாள்தோறும் கடவுளிடம் உள்ளம் உருகிப் பிரார்த்தித்துக் கொண்டு வருகிறாளே தவிர, அவனுக்கு நல்ல குணசீலம் வாய்ந்த ஒரு பெண் மனைவியாகக் கிடைக்க வேண்டும் என்றோ, அத்தகைய பெண்ணொருத்தியை எங்கே எப்படித் தேடிப் பிடிப்பதென்றோ, என்னத்தையும் கவலைப்பட்டதில்லை. இவ்விஷயத்தில் அதுபோன்ற சஞ்சலம் அவளுக்குக் கடந்த சில மாதங்களாக மட்டுமல்ல, சென்ற பல ஆண்டுகளாகவே ஏற்பட்டது கிடையாது.

காரணம், தன் பிள்ளையின் முகத்தில் மீசை அரும்பினதைக் கண்ட நாள் முதலே அவனுடைய கரம் பற்றக் கொடுத்து வைத்தவள் யார் என்ற விவரம் அவளுக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அவளுக்கு மட்டுமா? அவளின் காலஞ்சென்ற கணவருக்கும் அது தெரியும். தெரிந்து கொண்டதோடு நில்லாமல் அதற்குத்

தம் பூரண சம்மதத்தையும் அவர் அப்போதே தெரிவித்து விட்டிருந்தார். ஆமாம்; 'என் மகன் முத்துசிவனுக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அவனைக் கணவனாக அடைய வேண்டியவள் கனகசபையின் செல்வ மகள் கருணா தான்' என்று அவர் பதினாறு, பதினேழு வருடங்களுக்கு முன்பே தீர்மானமாகச் சொல்லி விட்டிருந்தார். அதனால் இவ் விஷயம் இந்த இரு குடும்பத்தாரிடையில் அப்போதே முடிந்து போனதாகக் கருதப்பட்டது; இன்று வரை அவ்வாறே கருதப்பட்டும் வருகிறது.

எனவே, அன்னபூரணியம்மாள் தன் மகனின் கல்யாணம் சீக்கிரம் நடைபெற வேண்டும் என்று கவலைப்படும்போதெல்லாம் கருணாவையும் சேர்த்து நினைத்து அவளுக்காகவும் கவலைப்படுவாள். முத்துசிவனைத் தவிர வேறு எவனையும் மணக்க மாட்டேன் என்று ஒரே பிடிவாதமாக அந்தப் பெண் இத்தனை வருடகாலம் காத்துக் கொண்டிருப்பதை எண்ணும்போதெல்லாம் இவளுக்கு ஆச்சரியமாக இருக்கும்; அகமகிழ்ந்தும் போவாள். அவளை எங்காவது, எப்போதாவது பார்க்க நேர்ந்தால் ஓர் அயலாரின் பெண்ணாகவே இவளுக்குத் தோன்றாது. தன் அன்பு மகனின் மனைவி — தனது அருமை மூத்த மருமகள் — என்றே நினைப்பாள், பாவிப்பாள். அதே நினைப்புடனும் பாவனையுடனுமே அவளிடம் பேசுவாள்; அவளை நடத்துவாள். சில சமயம், தான் அவளுக்கு மாமியாராக ஆகிவிட்டதாகவே கருதிக் கொண்டு மாமியார் தோரணையில் அதிகாரமாகக் கேள்விகள் கேட்பாள்; அதைச் செய், இதைச் செய் என்று கட்டளையிடுவாள். அப்படிப் பேசக் கூடாது; இப்படிச் சிரிக்கக்கூடாது என்று புத்திமதிகள் கூறுவாள். அவளுக்குத் தானே உணவு பரிமாறுவாள்; காப்பி பலகாரம் கொடுத்து உண்ணச் செய்வாள்; ஓரிரு முறை தலை வாரிப் பின்னிப் பூவைத்தும் விட்டிருக்கிறாள். இதேபோல் அவளைத் தனக்குச் சாப்பாடு போடச் செய்தும், தலைவலிக்குத் தைலம் தேய்த்து விடச் சொல்லியும், வீட்டைப் பெருக்க வைத்தும் இருக்கிறாள். அப்புறம், 'ஐயோ! குழந்தைப் பெண்ணிடம் இவ்வளவு வேலை வாங்கி விட்டோமே!' என்று மனம் வருந்திக் கண் கலங்கியும் விடுவாள்.

இப்படி, முத்துசிவனுக்காகக் கருணா— கருணாவுக்காக முத்துசிவன் என்று எப்போதோ முடிவாகி இன்றுவரை அந்த முடிவில் எவ்வித ஐயமும் தோன்றாத — தோன்றும் என்று கனவிலும்



எதிர்பார்க்காத நிலையில் இருந்து வந்த அவளுக்கு, "அம்மா! நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்! பெண் யார் தெரியுமா? ஒரு பெரிய ஆடிட்டரின் மகள்; பெயர் வந்தனா!" என்று முத்துசிவனே சொல்லி விட்டுப் போனதை நினைக்க நினைக்க, வெறும் வியப்பும் ஏமாற்றமும் மட்டுமல்ல; அதிர்ச்சியும் பீதியுமே கூட ஏற்பட்டுப் போயின.

'என்ன இது, ஆச்சரியம்! ஏன் இப்படிச் செய்தான்? எதற்காக இந்த முடிவுக்கு வந்தான்?'

அன்றைய பொழுதெல்லாம் இதே கேள்விகளைத் தன்னைத் தானே கேட்டுக் கேட்டு விடை ஏதும் கிடைக்காமல் களைப்படைந்து விட்ட அவள் கடைசியாக, 'சரி; இவ்வளவு காலம் அந்தப் பெண் கருணாவையே மணப்பது என்ற திடமான முடிவிலிருந்து வந்த என் மகன் இப்போது திடீரென்று அம்முடிவை மாற்றிக்கொண்டதோடு வேறோர் இடத்தில் பெண்ணும் பார்த்து நிச்சயித்து விட்டான் என்றால் அதற்கு ஏதேனும் காரணம் இல்லா

மலா போகும்? கல்யாண விஷயங்களில் அவன் அநுபவம் இல்லாதவனா? யோசிக்காமல் அவசரப்பட்டு இம்மாதிரி ஒரு முடிவுக்கு வந்துவிட? ஒன்றுக்கு மூன்று கல்யாணங்களை அவன் ஒருவனே முன்னின்று நடத்தி முடித்தவனாயிற்றே! அப்படிப்பட்டவன் தன்னுடைய கல்யாண விஷயத்தை அவ்வளவு இலேசில் முடிவு செய்துவிடுவானா?' என்று எண்ணி ஒருவாறு அமைதியடைந்தாள்.

ஆனாலும் அவளுக்கு ஒரே ஒரு குறை மட்டும் உள்ளத்தை முள்ளெனக் குத்தவே செய்தது.

'ஆமாம்; கருணாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவனாக இருந்தால் அவளைப் பற்றி என்னிடம் ஏதும் சொல்லத் தேவையில்லை. அவனே காரியத்தை மேற்கொண்டு நடத்திச் செல்லலாம். அப்படிக்கின்றி வேறொரு புது இடத்தில் பெண் பார்த்து நிச்சயித்தவன் அதை முன்கூட்டியே என்னிடம் தெரிவிக்க வேண்டாமா? என்னை அழைத்துப் போய் அந்தப் பெண்ணைப் பார்க்கச் செய்து என்னுடைய ஆலோசனையையும், சம்மதத்தையும் பெற வேண்டாமா? அவனாகவே எல்லாம் பார்த்து முடிவு பண்ணிக் கொண்ட பின் சும்மா போகிற போக்கில் அவ்விஷயத்தை என் காதில் போட்டு விட்டுப் போகிறானே! என்னை ஒரு மனுஷியாக — அவனைப் பெற்ற தாயாக மதித்திருந்தால் இப்படிச் செய்வானா?'

தன் பிள்ளை மேல் என்றுமே ஒரு சிறு குற்றம் குறையும் கண்டு மனம் கசந்து அறியாத அன்னபூரணியம்மாளுக்கு இப்பொழுது இவ்வாறு நினைப்பதே ஒரு கொடிய வேதனையாக இருந்தது. தன்னையறியாமல் தான் தவறு செய்வது போலவும், தன் பிள்ளையைத் தானே குற்றவாளியாக்கித் தூற்றுவதாகவும், அவன்மேல் இல்லாத பொல்லாததாகக் கற்பித்து அவனை அவமானப்படுத்துவதாகவும் எண்ணி மிரட்சியடைந்தாள் அவள்.

'எனக்கென்ன புத்தி பேதலித்து விட்டதா? என் பிள்ளையைப் பற்றி நானே இப்படி நினைக்கலாமா? தன் தம்பி, தங்கைகளுக்கு அவன் பெண்ணும் மாப்பிள்ளையும் தேடிக் கல்யாணம் பண்ணும்போதெல்லாம் என்னைக் கேட்டுக் கொண்டா எதையும் செய்தான்? ஒவ்வொன்றும் அவனே பார்த்து நடத்தி முடித்ததுதானே? அப்படியிருக்க அவனுடைய கல்யாண காரியத்தில் மட்டும் நான் ஏன் இந்த வீண் கௌரவத்தை எதிர்பார்க்கிறேன்? அவனுக்குத் தெரியாத நல்லது கெட்டதுகளா எனக்குத் தெரிந்துவிடப் போகிறது? எந்தக் காலத்தில்தான் — எந்தக் காரியத்தில்தான் — அவனுக்கு நான் யோசனையும் புத்திமதியும் சொல்லியிருக்கிறேன்? அம்மாதிரி சொல்லவும் செய்யவும் எனக்கென்ன தெரியும்? இவ்வளவு வயசாகியும் இன்னமும் நான் சில்லறைக் காசுகளைக் கையில் வைத்துக் கொண்டே எண்ணத் தெரியாமல் தரையிலே கொட்டிப் பரப்பி விட்டு ஒவ்வொரு காசாகப் பொறுக்கிப் பார்த்துக் கணக்குக் கூட்டுகிறேனே! இத்தனை மௌடீகமாக இருக்கும் நானா ஒரு பெண்ணைப் பார்த்து, அவளின் குணம், நடத்தை, குடும்ப அந்தஸ்து, குலப் பெருமைகளை ஆராய்ந்து அறிந்து, அவள் என் மகனுக்கு ஏற்றவளா இல்லையா என்பதைத் தீர்மானித்து விடப் போகிறேன்? என்னால் இதெல்லாம் ஆகாது எனத் தெரிந்து கொண்டு, எனக்கு அந்தச் சிரமங்களைக் கொடுக்கக் கூடாது என்றுதான் என் அருமை மகன் தனது கல்யாண விஷயத்தைத் தானே பார்த்து முடிவு பண்ணி விட்டிருக்கிறான்! இதில் என்ன தவறு? இதற்காக அவனை நான் குறை கூறுவது நியாயமாகுமா?'

அன்னபூரணியம்மாளின் மனம் ஆறுதல் அடைந்தது. இதற்கு மேல் வேறு எந்தக் கவலைக்கும் இடம் தராமல் தன் மைந்தனின் கல்யாணம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்ற ஒரே பிரார்த்தனையுடன் உற்சாகத்தோடு நாட்களைக் கடத்திவந்த அவள், ஒருநாள் யாரோ ஒருவரை அசந்தர்ப்பமாகச் சந்தித்தபோது அவர் வாயிலாக வெளிப்பட்ட ஒரு தகவலைக் கேட்டுப் பெரிதும் அதிர்ச்சியடைந்து போனாள்.

ஆமாம்; தன் மகன் மணந்து கொள்ளத் தேர்ந்தெடுத்திருக்கும் பெண் ஒரு நாடக நடிகை என்பதும் அவளுடைய தாயாரும் ஒரு மாஜி நடிகையே என்பதும்தான் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய அந்தத் தகவல்! **(தொடரும்)**

அட்டைப் பட விளக்கம்

"அப்பப்பா! கருணாவின் மனத்தில்தான் எத்தனை ஆசைகள்! முத்துசிவனை மணந்து கொள்ளப் போகும் மகிழ்ச்சியில் அவள் எத்தனைபெரியகோபுரம் கட்டிவிடுகிறாள்!

ஆனால் வந்தனா! - முத்துசிவனின் வாழ்க்கையில் புகுந்து கருணா கட்டிய கோபுரத்தைக் கிளிஞ்சல் கோபுரமாக அல்லவா செய்து விடுகிறாள்!

இந்தக் காட்சியை - இரு பெண்களின் மனநிலையையும் பளிச்சென்று படம் பிடித்துக் காட்டும் நிகழ்ச்சியை - இவ்வாரத்து அட்டைப் படமாக வழங்குகிறார் ஓவியர் கல்பனா.

லோமா வைப்பற்றி

இந்த உண்மைகளை அறியுங்கள்

சுமார் 55,000 பாட்டில்கள் 1967-ம் ஆண்டில் உலகத்தில் பற்பல தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஹேர் ஆயில்களில் இது கிட்டத்தட்ட 16 சத வீதம் என்று கணக்கிடப்படுகிறது.

நீங்கள் இதற்கு முன்பு அனுபவித்திராத புத்தம் புதிய நறுமணத்துடன் அது கிடைக்கிறது.

அகில உலகத்திலும் மிக உயர்ந்த ஹேர் ஆயில் என்றும், கூந்தலை கருமையாக்கும் சிறந்த சாதனம் என்றும் பாராட்டப்படுகிறது. பெரிய, நடுத்தர, மற்றும் சிறிய பாட்டில்களில் தைலமாகவும், டியூப்புகளில் பசையாகவும் கிடைக்கிறது.

இந்தியாவின் எல்லா பாகங்களிலும் தயாரிப்பாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட நியாய விலைகளில் சுலபமாகக் கிடைக்கிறது. (தற்போது சப்ளைகளில் தட்டுப்பாடு ஒன்றும் இல்லை.)

சோல் ஏஜெண்டுகளும், ஏற்றுமதியாளர்களும் :

M. M. கம்பட்வாலா

அஹமதாபாத்-1 (இந்தியா)



திட்டமிட்ட குடும்பமே
திடமான குடும்பமாகும்
நான் செலவை சமாளிக்க முடியாமல் தவிக்கும்போது நீ எப்படி இவ்வளவு சந்தோஷமாக வாழ்கிறாய். இதன் ரகசியத்தை எனக்கும் சொல்லேன்.
என் வீட்டில் ஆட்கள் குறைவு. இரண்டு குழந்தைகள் மட்டுமே
என்ன? என்ன? இரண்டு குழந்தைகள் தானா? என் மனைவியோ வருஷத்திற்கு ஒரு குழந்தை பெறுகிறாள். இதற்கு நான் என்ன செய்வது?
நான் செய்வதையே நீயும் செய். "நிரோத்" உபயோகி
குழந்தை பிறப்பதை உன்னால் தடுக்க முடியும். நிரோத் உபயோகி.
"நிரோத்"
மூன்றின் விலை 15 பைசா • ஒன்றின் விலை 5 பைசா
சென்னை நகரில் இப்பொழுது கிடைக்கிறது



குழந்தை 'பால் குடிக்க மாட்டேன்' என்று அடம் பிடித்தால், 'பால் குடிக்காவிட்டால் உடம்பு இளைத்துவிடும்' என்று பயமுறுத்தாமல், 'பால் குடித்தால் அழகாக இருக்கலாம். எதிர்வீட்டுப் பையன் உன்னை அடித்தால் ஜோராகத் திருப்பி அடிக்கலாம்' என்று சொல்லுங்கள். பாலைக் குடித்து விடுவான்.


ஆதாரம்: '' பெமினா''

தகவல்: ''பாபு''

சாப்பாடு நேரத்தில் கணவனின் கோபத்தைக் கண்டு மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. ''உங்களுக்குத் திங்கட்கிழமை பீன்ஸ் பிடித்தது; செவ்வாய்க்கிழமை பீன்ஸ் பிடித்தது; புதன்கிழமை பீன்ஸ் பிடித்தது. இன்று வியாழக்கிழமை, ஏன் திடீரென்று பீன்ஸ் பிடிக்காமல் போயிற்று?'' என்று கேட்டாள்.

ஆதாரம்: 'காலியர்ஸ்' தகவல்: 'ரமணன்'





செயற்கை சூரியன்!

செயற்கைச் சந்திரன் அல்ல; செயற்கை சூரியன் தான்! இந்தச் செயற்கை சூரியனில் உள்ள மின் விளக்குகள் 1,23,500 வாட் சக்தி கொண்டவை.

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துக்காக பாஷ் ஸ்தாபனத்தினர் இந்தச் செயற்கை சூரியனை உருவாக்கியுள்ளனர். சூரிய ஒளியின் பிரகாசத்தைப் போல் ஒன்றரை மடங்கு அதிகப் பிரகாசமுடையது. சூரிய ஒளியில் உள்ளதைப் போலவே அதே அளவில் அல்ட்ராவயலெட் கதிர் வீச்சும் இன்ஃப்ராரெட் கதிர் வீச்சும் உடையது இந்தச் செயற்கை சூரியன். மேலே குறிப்பிட்ட விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில், மனிதனால் விண்வெளிக்கு அனுப்பப்படும் செயற்கைச் சந்திரன்கள் சூரிய ஒளியால் எந்த அளவுக்குப் பாதிக்கப்படலாம் என்பதனை ஆராய இந்தச் செயற்கை சூரியனை உருவாக்கி யிருக்கிறார்கள்! மனிதனால் தயாரிக்கப்பட்ட இந்த சூரியன் ஹாலந்தில் உள்ளது! —ஆதாரம்: ஸ்காலா

கதிரியக்கத்தீ விருந்து தப்ப ஹோமம் செய்யுங்கள்

நாம் பூஜித்து வரும் பசுவைப் பற்றி ஸ்ரீ ஜே. டால்மியா அவர்களிடம் மத்திய செய்தி மந்திரி ஒரு மகத்தான ஆச்சரியச் செய்தியைக் கூறினார். அது வருமாறு:

இந்தியக் கால்நடைகள் பற்றி ஆராயச் சில மாதங்களுக்கு முன் ருஷியாவிலிருந்து ஒரு விஞ்ஞானிகள் குழு வந்தது. அதன் தலைவருடைய பெயர் 'கிரோவிக்'கா, 'விரோவிக்'கா என்பது செய்தி மந்திரிக்கு நினைவில்லை. ஆனால் அவர் கூறிய விஷயங்கள் மட்டும் நினைவிலிருந்து நீங்கவில்லை.

அணுகுண்டு முதலியவற்றைப் பரிசோதிப்பதாலும் அணு ஆராய்ச்சிக் கூடங்களின் கழிவுப் பொருட்களாலும் கதிரியக்கம் ஏற்பட்டு மக்களின் உடலிலும் சித்தத்திலும் கோளாறுகளை உண்டாக்குவதாகக் கேள்விப்படுகிறோமல்லவா? பசும் பால் பருகுவது இந்தக் கதிரியக்கத்தைத் தடுக்கும் சிறந்த காப்பு என்று ரஷ்ய விஞ்ஞானி கூறினாராம்.

இதனினும் ஆச்சரியமான சமாசாரம்: 'பசுவின் நெய்யை நெருப்பில் வார்த்து உண்டாக்குகிற புகை சுற்றுச் சூழலில் உள்ள அணுக் கதிரியக்கத்தை மிகவும் நலிவு படுத்தி விடுகிறது. உங்கள் நாட்டில் ஹோமம் என்று சொல்கிறீர்களே அதைத்தான் குறிப்பிடுகிறேன்' என்றாராம் கிரோவிக்.

வீடுகளைச் சாணத்தால் பூசி மெழுகுவதும் கதிரியக்கத்திலிருந்து காப்புத் தரும் என்று கூறிய அந்த விஞ்ஞானி, பஞ்சகவ்யம் என்று நாம் சொல்கிற பசுவின் பால், தயிர், நெய், கோமூத்திரம், சாணம் இவற்றின் கலவை பற்றி இன்னமும் ஆராய்ச்சி செய்வதாகச் சொன்னாராம்.



ஆதாரம்: 'பாஞ்சஜன்ய'

சுதந்திர_மகா.

கண்ணாமூச்சி



முகுந்தன்

அந்தப் பெரிய ஹோட்டலின் இரண்டரையங்குலக் கனக்கதவு பணிவுடன் திறக்கப்பட்டு, ராஜவேல் வெளியே வருவதற்கும் மிக அருகில் தீனமான ஒரு குரல் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

''ஏழைக்கு இரக்கம் காட்டுங்கள், சார்...''

குரல் வந்த திக்கில் ராஜவேலின் தலை திரும்பியது. 'பிச்சைக்காரன் போலிருக்கிறது....'

ராஜவேலின் வலது கை பாண்ட் பாக்கெட்டுக்குள் நுழைந்து பர்ஸை எடுப்பதற்குள் மீண்டும் ஒரு முறை ஒலித்தது அந்தக் குரல். ''கண்ணில்லாத கபோதி சார்...! விபத்திலே கண் இரண்டையும் பறி கொடுத்துவிட்டு நிற்கிற இந்தப் பரதேசி பேரிலே கருணை காட்டுங்க...''

பர்ஸை எடுக்கப் போன கை அப்படியே நின்றது. ''என்னப்பா, சொல்கிறாய்? விபத்திலே கண்ணை இழந்தவனா நீ? என்ன விபத்து? எப்படி நேர்ந்தது?...'' என்று கேட்டான்.

''பெங்களூர் — மைசூர் சாலையிலே, மாண்டியாவிலிருந்து மூன்றாவது மைலில் பெரிய தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. 'கர்நாடகா ஆஸிட்ஸ் அண்ட் ஆல்கலீஸ்' என்று பெயர் அதற்கு. திராவகத் தொழிற்சாலை. அங்கேதான் நான் வேலை பார்த்து வந்தேன். அந்தப் பாழாய்ப் போன தொழிற்சாலைதான் என் கண்களைப் பறித்துவிட்டது.''

''அடடே, அப்படியா ?....''

''ஆமாம், சார்! ஆறு வருடங்களுக்கு முன்னாலே ஒரு நாள்.... இரவு 'ஷிப்டி'ல் நான் வேலை செய்து கொண்டிருந்த போது தான் அந்த விபத்து ஏற்பட்டது. நான் பரிசோதனைக் கூடத்தில் அமிலங்களின் கலவையைச் சரி பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அபாய அறிவிப்பு மணி ஒலித்தது. தொழிலாளர்கள் எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள்.... நெருப்பு சார் !.... 'பவர் ஸ்டேஷனி'ல் பிடித்தது. திகுதிகுவென்று தொழிற்சாலை மொத்தத்துக்கும் பரவிக் கொண்டே வந்து விட்டது. நான் நிலைமையைப் புரிந்து கொண்டு ஓட ஆரம்பிப்பதற்குள் காரியம் மிஞ்சி விட்டது. என் துரதிர்ஷ்டம் பாருங்கள், ஒரு தடிமனான ஆள்—அவனும் என் சக தொழிலாளிதான் — கண் மண் தெரியாதபடிக்கு என்னைக் கீழே தள்ளி மிதித்துக் கொண்டு வெளியே ஓடினான். அவ்வளவு தான்; நான் மயக்கமடைந்து விட்டேன். வெடித்துச் சிதறிய ஜாடிகளிலிருந்து தெறித்த திராவகம், கட்டடத்தைச் சூழ்ந்த விஷப் புகை — எல்லாமாகச் சேர்ந்து என் கண்களைப் பறித்து என்னை இந்தக் கோலத்துக்கு ஆளாக்கி விட்டன....''

''ஐயோ, பாவமே!...'' என்று அநுதாபம் தெரிவித்த ராஜவேல் ஒரு நிமிட மௌனத்துக்குப் பிறகு கேட்டான்: ''ஆமாம், நீ சொன்னது அத்தனையும் உண்மைதானா?...''

''நூற்றுக்கு நூறு உண்மை!....''

''இல்லை, கொஞ்சம் குறைவு, கார்த்திகேயா! தொழிற்சாலைக் கட்டடம் இடிந்து விழுந்தபோது உண்மையில் **அகப்பட்டுக் கொண்டவன் நான்! என்னை மிதித்துக் கொண்டு ஓடினவன் நீ!''**

பிச்சைக்காரன் தடுமாறினான். '' அட, ராஜவேலா நீ?.... நீயேதானா?.... அதெப்படி நான் இது மாதிரிப் பார்வையை இழந்து தவிக்கும்போது நீ மட்டும்..... நீ மட்டும்... பார்வையோடு....''

''கார்த்தி, நமக்கும் மேலே ஒருத்தன் இருக்கிறானே, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, அவனைக் கேட்க வேண்டிய கேள்வியப்பா இது!...'' என்றான் ராஜவேல்.

கார்த்திகேயன் அவமானமும் தன்னிரக்கமும் மேலிட, உதட்டைக் கடித்தவண்ணம் அப்பால் நகர்ந்தான்.

அவன் பத்து கஜ தூரம்கூடச் சென்றிருக்கமாட்டான். நடைபாதையிலிருந்து சாலைக்கு இறங்கிய ராஜவேல், எதிரில் வேகமாக வந்த ஒருவர் மீது மோதிக் கொள்ளும்படியாகிவிட்டது. அதன் விளைவாக, ராஜவேல் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடி தரையை முத்தமிட்டது.

எதிரில் வந்தவர் குனிந்து அதைப் பொறுக்கி ராஜவேலிடம் கொடுத்தார். அவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்தவர் மன்னிப்புக் கோரும் தோரணையில் சொன்னார் : ''மன்னியுங்கள்.... நீங்கள் பார்வையிழந்தவர் என்பது எனக்குத் தெரியாது....''



அன்பெனும் மருந்து

டாக்டர் அன்பு ததும்பும் விழிகளால் அந்தச் சிறுமியை உற்றுப் பார்த்தார். ஐந்து, ஆறு வயதிருக்கும் அவளுக்கு. ரப்பர் ஷீட் விரித்த நீளமான மேஜையின்மீது குழந்தையை உட்கார வைத்தார் அவளது தந்தை.

"குழந்தைக்குக் காலில் தாங்க முடியாத வலி. ஒரு மாதமாக வைத்தியம் செய்தும் குணமில்லே. ஒரு வாரமாக நடக்கவே முடியாமல் சிரமப்படுறாள். நீங்கள்தாம் எப்படியாவது குழந்தையின் காலை சொஸ்தப்படுத்த வேண்டும்." — அழமாட்டாக் குறையுடன் கூறினார் சிறுமியின் தகப்பனார்.

"இங்கே வலிக்கிறதா அம்மா?" — சிறுமியின் காலை இலேசாக அமுக்கியவாறு கேட்டார் டாக்டர்.

"இல்லே. இன்னும் மேலே...."

"இங்கே?"

"ஹா... ரொம்ப வலிக்கிறதே....!"

"நீ எந்த கிளாஸ் படிக்கிறே?" — பேச்சுக் கொடுத்தவாறு சிறுமியைச் சோதனை செய்தார் டாக்டர்.

"ஒண்ணாவது!"

"எப்படி இங்கே வந்தே?"

"ரிக்ஷாவிலே அப்பாவோடே வந்தேன்."

"எந்த வழியா வந்தே?"

"அங்கே பெரிசா ஒரு ரோடு இருக்கே... இரண்டு பக்கமும் நிறையக் கடையெல்லாம் இருக்கே — அப்படி வந்தேன்."

"வழியிலே என்னவெல்லாம் பார்த்தே?"

"அங்கே பெரி...சா ஒரு கடையிருக்கே.. ஹா... வலிக்கிறது சார்!"

"அந்தக் கடையிலே?"

"ஒரு பெரிய செலுலாய்ட் பொம்மை வைச்சிருக்கு. எவ்வளவு அழகா இருந்தது தெரியுமோ? கவுன் எல்லாம் போட்டு ரொம்ப ஜோரா டிரஸ் பண்ணியிருந்தது சார்....."

"பொம்மை எவ்வளவு பெரிசா இருந்ததும்மா?"

"இவ்வளவு உசரம் இருந்தது, சார்!"— சிறுமி தன் இடுப்பில் கைகளை வைத்துப் பொம்மையின் உயரத்தை விளக்கினாள். "வச்சண்டு விளையாடணும் போல் இருந்தது!" என்றாள் தொடர்ந்து.

பேச்சுக் கொடுத்தவாறே சிறுமியைப் பரிசோதித்து, சிகிச்சையையும் செய்து முடித்தார் டாக்டர்.

"இன்னும் இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் குழந்தையை அழைத்துக் கொண்டு வாருங்கள். ஒரு வாரத்தில் அவள் முன்போல் நடக்க ஆரம்பித்துவிடுவாள். இந்த மருந்தையும் தினம் இரண்டு வேளை கொடுக்க வேண்டும்" என்று விடையளித்தார்.

குறிப்பிட்டபடி இரண்டு நாட்களுக்குப் பிறகு சிறுமியை மீண்டும் அழைத்து வந்தார் அவள் தகப்பனார்.

"என்னம்மா, வலிக்கிறதா?" என்றார் டாக்டர்.

"இப்போ வலியே இல்லே, சார்!"

டாக்டர் குழந்தையின் தந்தையிடம், "இன்னும் மூன்று நான்கு நாட்களில் அவள் ஓடியாடி விளையாடுவாள். இனிமேல் அவளுக்கு மருந்து எதுவும் கொடுக்க வேண்டாம்" என்று கூறிவிட்டு உள்ளே போகத் திரும்பினார்.

"சார்....!" தயக்கத்துடன் டாக்டரை அழைத்தார் சிறுமியின் தந்தை. டாக்டர் அருகில் வந்ததும், ஒரு பத்து ரூபாய் நோட்டைப் பயபக்தியுடன் அவரிடம் நீட்டினார். டாக்டர் சிரித்தவாறு அதை வாங்கிக்கொண்டு, "கொஞ்சம் இருங்கள். மறந்தே போய் விட்டேன்!" என்று அவரிடம் கூறிவிட்டு அடுத்த அறையிலிருந்த நர்சை அழைத்து ஏதோ சமிக்ஞை காட்டினார்.

சற்றைக்கெல்லாம் ஒரு பெரிய செலுலாய்ட் பொம்மையை எடுத்துக் கொண்டு வந்தாள் நர்ஸ்.

"இதே பொம்மைதான், டாக்டர் மாமா! இதே பொம்மைதான் நான் அந்தக் கடையிலே பார்த்தேன். இதே நீல கவுன்தான் போட்டிருந்தது அன்னிக்கும்!" சிறுமி ஆர்வம் பொங்கக் கூவினாள்.


"இது உனக்குத்தாம்மா! வச்சுக்கோ!" டாக்டர் புன்சிரிப்புத் தவழக் கூறினார்.

சிறுமியின் முகம் தாமரைபோல் மலர்ந்தது.

பொம்மையின் விலை பதினைந்து ரூபாய்க்குக் குறையாது என்பது சிறுமியின் தகப்பனாருக்குத் தெரியும். பிரமித்து நின்றார் அவர்.

"சார்....!" அவரால் மேலே பேச முடியவில்லே.

"குழந்தைக்கு நான் அன்பளிப்பாகக் கொடுக்கிறேன் இதை" என்றார் டாக்டர். "அவளுக்காகத்தான் வாங்கி வந்தேன். முதல் நாள் இவள் இங்கு வந்த போது, அந்தப் பொம்மைக்காக எவ்வளவு ஏங்குகிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன். குழந்தையின் பிஞ்சு உள்ளம் மிகவும் மென்மையானது. அதில் ஏக்கம் இடம் பெறக் கூடாது!" இப்படிக் கூறிவிட்டு ஆபரேஷன் அறைக்குள் நுழைந்து விட்டார் டாக்டர்.



(அந்த டாக்டர் வேறு யாருமல்ல. சென்னையின் பிரபல டாக்டரான அமரர் எஸ். ரங்காச்சாரி அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவமே இது.)

கதை வடிவம்: ரா.பா.

எழுத்தாளர் 'கோடாலி'யின் வாழ்வில் அன்று ஒரு பெருநாள். அன்று தபாலில் வந்த ரிஜிஸ்தர் பார்சலைப் பிரித்துப் பார்த்த போது அவருக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. அவருடைய நெடுங்காலக் கனவு அன்று நனவாகி விட்டது! அவர் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு புத்தக உருவில் வெளிவந்து விட்டது !

எழுத்தாளர் 'கோடாலி'யின் இயற்பெயர் பரசுராமன். தாம் எழுத்தாளனாக வேண்டுமென்பது அவருடைய வாழ்வின் குறிக்கோள். அவர் எழுதத் தொடங்கிய போது அவருக்கு ஏற்பட்ட முதல் பிரச்னை ''என்ன புனைபெயர் வைத்துக் கொள்வது?'' என்பதுதான். எழுத்தாளன் என்ன எழுதினாலும் எழுதாவிட்டாலும் அவனுக்கு அவசியம் ஒரு புனைபெயர் இருந்தாக வேண்டுமே! இந்த விஷயத்தில் அவர் அதிருஷ்டசாலி தான். தம் இயற்பெயரிலிருந்த 'பரசு'வை தமிழ்ப்படுத்திக் 'கோடாலி' என்று வைத்துக் கொண்டார் அவர். முன்யோசனையுடன் தமக்குப் பெயர் வைத்த பெற்றோரையும் மனதார வாழ்த்தினார்.

புனைபெயர்ப் பிரச்னையைத் தீர்த்துக் கொண்ட பிறகு 'கோடாலி' கதை எழுதத் தொடங்கினார். அவர் எழுதினார், எழுதினார்,

நக்ஷத்திரேய விஜயம்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

எழுதிக் கொண்டே இருந்தார். ஆனால் பத்திரிகைக்காரர்களுக்கும் அவருடைய கதைகளுக்கும் ராசி இல்லை போலும்! அவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு 'கோடாலி'யின் கதைகளைத் திருப்பியனுப்பினார்கள். சுவரின் மேல் எறியப்பட்ட பந்து போல் அவை திரும்பத் திரும்பக் 'கோடாலி'யிடமே வந்து சேர்ந்தன. ஆயினும் சற்றும் மனம் கலங்கவில்லை அவர். அவரிடம் எழுத்துத் திறமை இருந்ததோ இல்லையோ, எழுத்தாளனுக்குக் கட்டாயம் தேவையான பொறுமை நிறைய இருந்தது. ராபர்ட் புரூசையே வெட்கித் தலைகுனியச் செய்யும் விடாமுயற்சியுடன் அவர் தம் கதைகளைக் கொண்டு பத்திரிகாசிரியர்களைத் தொடர்ந்து தாக்கி வந்தார்.

அவருடைய விடா முயற்சி வீண் போகவில்லை. அவருடைய அதிருஷ்டம், தாங்கள் பிரசுரிக்கும் கதை கட்டுரைகளுக்குச் சன்மானம் கொடுத்தறியாத சில பத்திரிகாசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் 'கோடாலி'யின் கதைகளைத் தொடர்ந்து பிரசுரிக்க முன்வந்தார்கள். 'தேங்காய் மூடிக் கதை'களாகவாவது தமது படைப்புகள் அச்சில் வந்தது பற்றிப் பரம திருப்தி 'கோடாலி'க்கு. அவை பிரசுரமான பத்திரிகை இதழ்களை அழகாகப் பைண்டு செய்து அவற்றைத் தம் வரவேற்பறையில் கண்ணாடி அலமாரியில் அலங்காரமாக வைத்துத் தம் நண்பர்களிடமெல்லாம் அவற்றைக் காட்டி மகிழ்ந்தார் அவர். அவரிடம் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வந்த நண்பர்கள் அவரைக் 'காக்காய்' பிடிப்பதற்காகக் கதைகளை மிகவும் ரசிப்பதாகப் பாவனை செய்தது மல்லாமல் ''ஆகா! இந்தக் கதைகளெல்லாம் ரொம்ப அருமை, சார்! ஏன் இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகப் போடக் கூடாது'' என்று தூபம் வேறு போட்டார்கள்.

தம் கதைகளைப் புத்தகமாகப் பிரசுரிக்க வேண்டும் என்ற ஆசை 'கோடாலி'யைப் பிடித்துக் கொண்டது. அது நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாக வளர்ந்து விசுவரூபமெடுத்து அவரைப் பைத்தியமாக்கின.

ஆனால் அக்கதைகளைப் புத்தகமாகப் பிரசுரிக்கும் துணிவு எந்தப் பிரசுரகர்த்தாவுக்கும் வரவில்லை. அத்தகைய செயல் தொழில் துறையில் 'ஹராகிரி' செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்று அவர்கள் கருதினார்கள்.



ஆனால் இவ்விஷயத்திலும் அதிருஷ்டம் 'கோடாலி'யின் பக்கத்தில் இருந்தது. புத்தகப் பதிப்புத் துறையின் நெளிவு சுளிவுகளைப் பற்றி ஒன்றுமே அறியாத ஓர் ஏமாந்த சோணகிரி தமக்கு எதிர்பாராது கிடைத்த புதுப் பணத்தைப் பதிப்புத் தொழிலில் போட எண்ணினார். அவர் அசட்டுத்தனமாகக் 'கோடாலி'யின் வலையில் வந்து விழுந்தார். புத்தகம் அச்சிடுவதற்கான வேலை தொடங்கியது.

கதைத் தொகுப்பின் இரண்டு பிரதிகள் தான் அன்றையத் தபாலில் வந்திருந்தன. நல்ல கெட்டி அட்டை போட்ட புத்தகம். அழகான 'கெட் அப்'. அட்டைக்கு வழுவழுப்பான ஆர்ட் காகிதத்தாலான மேல் உறை. அதில் ஓர் அழகான பலவண்ணச் சித்திரம். அதன் மேல் பொன்னிற எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது — ''இரண்டுங் கெட்டான் முதலிய கதைகள். எழுத்தாளர் 'கோடாலி' ''.

'கோடாலி'க்குப் பெருமை தாங்கவில்லை. புத்தகத்தைக் கண்ணால் பார்த்தும், கையால் தடவியும், அதன் புது மணத்தை நுகர்ந்தும் மகிழ்ந்தும் போனார் அவர். இன்ப போதையில் அவருடைய கண்கள் செருகிக் கொண்டு வந்தன.....

''நமஸ்காரம், சார்! நான் உள்ளே வரலாமா ?''

கோடாலி நிமிர்ந்து பார்த்தார். கண்ணியமான உடையணிந்த ஒருவர் கையில் ஒரு

தோல் பையுடன் வாயிலில் நின்று கொண்டிருந்தார்.

கோடாலி அவரை வரவேற்று நாற்காலியில் உட்கார வைத்தார். வந்தவரை அவர் அதற்குமுன் பார்த்ததில்லை.

வந்தவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார், ''உங்களுக்கு என்னைத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் சமீபத்தில்தான் இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். உங்கள் புத்தகம் ஒன்று சமீபத்தில் வெளியாகியிருக்கிறதே ! அதைப் படித்துப் பார்த்தேன். உங்கள் கதைகள் பிரமாதம், போங்கள்! கங்கிராசுலேஷன்ஸ் !'' என்று சொல்லிக் கொண்டே போனார் அவர்.

கோடாலிக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது. முன்பே கூறியது போல் அவருடைய நண்பர்களைத் தவிர வேறு எவரும் அவருடைய கதைகளைப் புகழ்ந்ததில்லை. முன் பின் தெரியாத ஒருவர் தாமே வலுவில் வந்து தம் கதைகளைப் புகழ்வது அவருக்கு ஒரு புது அநுபவம். அவரும் மனிதர்தானே ! அவருக்கு உச்சி குளிர்ந்து விட்டது !



''அடேடே ! புத்தகமே இப்போதுதானே வெளி வந்திருக்கிறது! அதற்குள் அதை வாங்கிப் படித்துவிட்டீர்களா! உங்களுடைய இலக்கிய ஆர்வத்தைக் காண எனக்கு எவ்வளவு உற்சாகமாக இருக்கிறது! உங்களைப் போன்ற ரசிகர்களின் ஆதரவுதான் என் மூச்சு.... உங்களைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஊருக்குப் புதிது என்று சொன்னீர்களே. நீங்கள்...?''

'கோடாலி' பேசி முடிக்குமுன்பு வந்தவர் தம் விசிடிங் கார்டை எடுத்து அவரிடம் கொடுத்தார். அதில் எழுதியிருந்தது — 'நக்ஷத்திரேயன், வசூல் அதிகாரி, அட்டை வரி இலாகா'.

கோடாலி திகைத்தார். ''அட்டை வரியா ? இது என்ன புதுப் பெயராயிருக்கிறதே ! நான் இந்தப் பெயரைக் கேள்விப் பட்டதேயில்லையே !''

நக்ஷத்திரேயன் பதில் சொன்னார், ''நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால், இந்த வரியே சமீபத்தில்தான் அமுலுக்கு வந்திருக்கிறது.''

''அட்டை வரி என்றால் என்ன?''

''சென்ற வருஷம் நம் சர்க்காருக்குப் புதிய வரிகள்பற்றி ஆலோசனைகூற டிம்பக்டூவிலிருந்து ஒரு நிபுணர் வந்தது பற்றி நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே! அவர் சொல்லிய ஆலோசனைப்படிதான் இந்த அட்டை வரி அமுலாக்கப்பட்டிருக்கிறது. அவர் பெயர் டாக்டர் அட்டை. ஆகவே, அவரது நினைவாக இந்த வரிக்கே அட்டை வரி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.''

'' அப்படியா ! தவிரவும் வரிக்கு, 'அட்டை' என்று பெயர் வைப்பது ரொம்பப் பொருத்தம்தான்'' என்று கோடாலி சிரித்துக் கொண்டே சொன்னார். ''அட்டை நம் உடலில் ஒட்டிக்கொண்டு நாம் அறியாமலேயே நம் இரத்தத்தை உறிஞ்சி விடுவது போல் வரியும் நாம் அறியாமலேயே நம் வரும்படியை உறிஞ்சி விடுகிறது. இல்லையா?''

''ஆமாம், நீங்கள் சொல்வது ரொம்ப சரி '' என்று சிரித்தார் நக்ஷத்திரேயன்.

''அதிலும் உங்கள் பெயரும் தொழிலுக்குப் பொருத்தமான பெயர்தான். புராணத்தில் நக்ஷத்திரேயன் யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமே!'' குலுங்கக் குலுங்கச் சிரித்தார் கோடாலி.

''நீங்கள் மிகவும் வேடிக்கையாகப் பேசுகிறீர்களே ?'' என்று அவரைப் பாராட்டி விட்டுத் தொடர்ந்து பேசினார் நக்ஷத்திரேயன். ''நான் உங்களைச் சந்திக்க வந்ததே தொழில் முறையில்தான் !''

''தொழில் முறையிலா?'' என்று திடுக்கிட்டார் கோடாலி.

''ஆமாம். உங்கள் புத்தகத்துக்கு அட்டை வரி எவ்வளவு விதிக்கிறோம் என்பதைக் கணக்குப் பார்த்து உங்களிடம் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்.''

''புத்தகத்துக்கு அட்டை வரியா? அதற்கு விற்பனை வரிதானே இருக்கலாம் ? அதுவும் புத்தகங்களை வாங்குபவர்கள்தானே கொடுக்க

வேண்டும்! ஆசிரியன் கொடுக்க வேண்டியதில்லையே !''

''விற்பனை வரி ஆசிரியன் கொடுக்க வேண்டியதில்லைதான். ஆனால் அட்டை வரி வேறு. அதை ஆசிரியரிடமிருந்துதான் வசூல் செய்கிறோம். ஆசிரியன் இல்லாவிட்டால் புத்தகம் ஏது? ஆனால் ஆசிரியன் விரும்பினால் பதிப்பாளரிடமிருந்து, பதிப்பாளர் விற்பனையாளரிடமிருந்து, விற்பனையாளர் புத்தகம் வாங்குபவரிடமிருந்து அந்தப் பணத்தை வசூலித்துக் கொள்ளத் தடையில்லை.''

''எனக்கொன்றும் விளங்கவில்லையே !''

''அதை விளக்கத்தானே இங்கு வந்திருக்கிறேன் ! எங்களுடைய வரி வசூல் முறைகளைப் பொது மக்களுக்கு நன்றாக விளக்கிய பிறகே அவர்களிடமிருந்து வரியை வசூல் செய்ய வேண்டும் என்பது எங்கள் குறிக்கோள். பொதுமக்களுக்கு விவரமொன்றும் தெரிவிக்காமல் வரிகள் வசூலிக்கப்படுவதால்தான் பொதுமக்கள் வரி செலுத்த விரும்புவதில்லை. வரிகளைப் பற்றியும், வரி வசூல் செய்பவர்களைப் பற்றியும் அவர்களிடையே தப்பபிப்பிராயம் ஏற்படுகிறது.....

''இந்த அட்டை வரி ஒரு புதிய வரி என்று சொன்னேனல்லவா ! பார்க்கப்போனால் வரிகளின் சரித்திரத்திலே இந்த வரி ஒரு புரட்சி என்று சொல்ல வேண்டும். இவ்வரியின் அடிப்படைக் கொள்கை எந்தப் பொருளின் மேலும் அட்டை வரி விதிக்க முடியும் என்பதுதான். ஒரே பொருளின் மேல் பல காரணங்களுக்காக வரி போடலாம். காரணங்கள் அதிகமாக ஆக வரியின் அளவும், அதிகமாகும். அட்டை வரிக்கும் மற்ற வரிகளுக்குமிடையேயுள்ள அடிப்படையான வித்தியாசம் என்னவென்றால் மற்ற வரிகளின் அளவைச் சட்டமும் அதன் கீழ் உண்டாக்கப்பட்ட விதிகளும் நிர்ணயித்திருக்கின்றன. அட்டை வரியின் அளவு அதை வசூலிக்கும் எங்களுடைய கற்பனைத் திறமையைப் பொறுத்திருக்கிறது. அதாவது ஒரு பொருளின் மீது அட்டை வரி போடப் புதிய காரணங்களைக் கண்டு பிடிக்க எங்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. எழுத்தாளனுக்குக் கற்பனை எப்படியோ அப்படியே எங்களுக்கு இந்தச் சுதந்திரம். நாங்கள் அதிக வரி வசூலித்தால் அதையொட்டி எங்களுக்குப் போனஸும் பதவி உயர்வும் கிடைக்கும். வரி வசூலை அதிகரிக்க இது சரியான முறை; நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

கோடாலியின் பதிலை எதிர்பாராமல் நக்ஷத்திரேயன் தொடர்ந்தார், ''உங்களுக்குப் புரியும்படி விளக்குகிறேன், கேளுங்கள் ! எந்தப் பொருளின் மீதும் அட்டை வரி போடலாம் என்றேனல்லவா ! உதாரணமாக, கைவிசிறி இருக்கிறதே. அதன் மேலும் அட்டை வரி போடலாம். எப்படித் தெரியுமா ? மின்சார விசிறி வாங்குபவர்கள் எக்ஸைஸ் வரி, விற்பனை வரி என்று பல வரிகளைக் கொடுக்கிறார்கள். பனையோலை விசிறி வாங்குபவர்கள் அந்த வரிகளைக் கொடுப்பதில்லை. இதனால் அரசாங்கத்துக்கு வரிப் பணம் நஷ்டமாகிறதல்லவா! ஆகையால் பனையோலை விசிறி வாங்குபவர்கள் அட்டை வரி கொடுக்க வேண்டும் என்று விதித்திருக்கிறோம்: அதாவது அட்டை வரி என்ட மற்ற வரிகளுக்கு மாற்று வரி என்று வைத்துக் கொள்ளலாம்.''

''புத்தகத்துக்கு அட்டை வரி எப்படி விதிப்பீர்கள் ?''

''இப்போது உங்கள் புத்தகத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். புத்தகங்களுக்கு இரண்டு விதத்தில் வரியை நிர்ணயிக்கிறோம். ஒன்று வெளித் தோற்றம், மற்றது உள்ளடக்கம். புராணங்கள், சரித்திரங்கள், சரித்திர நாவல்கள், அகராதிகள் இவை அளவில் தடிப்பாக இருக்கும். இத்தகைய புத்தகங்கள் புத்தகங்களாக மட்டுமின்றித் தலையணைகளாயும் பயன்படும். இத்தகைய புத்தகங்களை வாங்குபவர்கள் தனியே தலையணைகள் வாங்கத் தேவையில்லை. ஆகவே அவர்கள் தலையணை வாங்கினால் கொடுக்க வேண்டிய பஞ்சு வரி, துணிக்கான எக்ஸைஸ் வரி ஆகியவற்றிலிருந்து தப்பி விடுகிறார்கள். இதனால் நேரும் நஷ்டத்தை ஈடு கட்ட இப்புத்தகங்களின் மேல் அட்டை வரி விதிக்கிறோம்.... ஆனால் உங்கள் புத்தகம் அளவில் சிறியதாயிருப்பதால் இந்தக் காரணத்தால் உங்கள் புத்தகத்துக்கு வரியில்லை.''

'' ரொம்ப சந்தோஷம்..... '' என்றார் கோடாலி.

''ஆனால் உங்கள் புத்தகத்துக்கு நல்ல தடித்த அட்டை இருக்கிறதல்லவா ! அதற்காக வரி உண்டு.''

''ஏன் ?''

''தடித்த அட்டை போட்ட புத்தகங்கள் வெறும் புத்தகங்களாக மட்டும் உபயோகப்படுவதில்லை. சிறுவர்கள் அவற்றைப் பந்தடிக்கும் துடுப்புகளாக உபயோகிக்கலாம். அதனால் கிரிக்கெட் 'பாட்' வாங்குவதைத் தவிர்க்கலாம். இப்படிப்பட்ட புத்தகங்களை எலி, பூனைகளை விரட்டவும் குச்சிக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இந்தக் காரணத்தால் உங்கள் புத்தகத்துக்கு ஒரு பாயிண்ட் கொடுக்கிறேன்.

''இப்போது புத்தகத்தின் உள்ளடக்கத்துக்கு வருவோம். பாட புத்தகங்கள், தத்துவ நூல்கள், ஆராய்ச்சி நூல்கள்— இவையெல்லாம் பலருக்குத் தூக்க மருந்தாக உபயோகமாகின்றன. தூக்கமின்றிக் கஷ்டப்படுபவர்கள் பலர் இத்தகைய நூல்கள் தூக்கத்தை வருவிக்க உதவுவதை அநுபவத்தால் அறிந்திருக்கிறார்கள். இந்தப் புத்தகங்களைக் கையில் எடுத்தாலே பலருக்குத் தூக்கத்தில் கண்கள் செருக ஆரம்பித்துவிடும். சுவாரசியமில்லாமல், ஆமை வேகத்தில் நகரும் சம்பவங்களைக் கொண்ட கதைகளையும் இந்த வகையில் சேர்க்கலாம். இவற்றால் தூக்க மாத்திரைகளின் வியாபாரம் கெட்டுப் போய் அதில் கிடைக்கக் கூடிய வரியும் குறைந்து போகிறது. இந்தக் காரணத்தால் இந்தப் புத்தகங்களுக்கு அட்டை வரி விதித்து விடுகிறோம். ஆனால் உங்கள் கதைத் தொகுதி மிகவும் சுவாரசியமாயிருப்பதால் அந்த வகையில் வரி இல்லை.''

''அப்பாடா ! நல்ல வேளை!'' என்று ஆறுதலாகப் பெருமூச்சு விட்டார் கோடாலி.

''ஆனால் சுவாரசியமாக இருக்கும் காரணத்தாலேயே உங்கள் புத்தகத்துக்கு வேறு

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

SREE VISALAM CHIT FUND LTD. SVCF H.O. TIRUNELVELI

| உயர்வின் சின்னம் |

(Estd. : 6-1-1947)

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :
திருநெல்வேலி - 6 போன் : 274

மத்திய அலுவலகமும், முதலீடுகள் பெற்றுக்கொள்ளுமிடமும் :
36 - B, மவுண்ட் ரோடு (ஸ்பென்சர் & கம்பெனி எதிரில்)
சென்னை - 2 போன் : 84244

31-3-1968ல் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5 லட்சம்
மொத்த ஆஸ்திகள் 1.52 கோடி. சிட்டில் ஈடுபடுத்திய தொகை ரூ. 3.05 கோடி

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட்
29 - 10 - 66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC 1/ED (S) 66/-
பாரா 2 (i) (f)ன் ஸப்கிளாஸ் (x)ன் படி.

காரண்டி செய்த லோன் வாங்கப்படுகிறது

தவணை	வட்டி விகிதம் ரூ. 300-லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000-க்கு மேல்
ஒரு வருடம்	$8\frac{1}{2}$% P. A.	9% P. A.
இரண்டு வருடம்	9% P. A.	$9\frac{1}{2}$% P. A.

6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செக்குகள் அனுப்பப்படுகின்றன. அவைகளை எங்கள் எந்தக் கிளையிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் விபரம்

பிரதி மாதம், மாதம் மும்முறை, தினசரி உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள ஏலச் சீட்டுகள் எங்கள் 27 ஆபீஸ்களிலும் நடத்தப்படுகின்றன.

அலுவலக நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர் :
ஸ்ரீ AR. ராமசாமி,

டைரக்டர்கள் :
ஸ்ரீ M. A. M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

மத்திய அலுவலக மானேஜர்:
ஸ்ரீ K. A. ராம், பி. ஏ., பி. எல்.

கடந்த மூன்று வருடங்களில் ஆதாயமும் டிவிடெண்டும் :

வருடம்	வரி கொடுப் பதற்குமுன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்ட் விகிதம்
1965-66	61908-72	25170-72	13%
1966-67	79686-41	27686-41	16%
1967-68	89466-58	28466-58	17%

பொறுப்புகள் 31-3-1968

செலுத்தப்பட்ட முதலும் & ரிசர்வ் நிதி	ரூ. 1,40,076
பிக்சட் டிபாசிட்	ரூ. 8,42,576
ஷேர் ஹோல்டர் டிபாசிட்டுகள்	ரூ. 2,75,050
காரண்டி செய்த லோன்கள்	ரூ. 10,33,475
தற்காலிகக் கடன்	ரூ. 1,15,991
சிட்டு இதர பொறுப்பு வகைகள்	ரூ.1,33,79,414
மொத்தம்	ரூ.1,52,86,580

புதிய M. குரூப் ரூ. 25,000 மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 12, கிலேதார் தெரு, திருச்சி (போன்: 4276) யிலும், 43, விஸ்வநாதராவ் ரோடு, மாதவநகர், பெங்களூர்-1 (போன்: 75955) லும் நடைபெறும்.

ஆடிட் செய்த பாலன்ஸ் ஷீட்டுகள் வேண்டுபவருக்கு அனுப்பப்படும்.

K. A. ராம், பி. ஏ., பி. எல்.
மத்திய அலுவலக மானேஜர்

அனுமதித்த தேதி: 28-10-68

AR. ராமசாமி
மானேஜிங் டைரக்டர்

PARAMOUNT

வகையில் அட்டை வரி விதிக்க வேண்டியிருக்கிறது. உங்கள் வர்ணனைகள் கவிதை அழகும், கற்பனை நயமும், சிந்தனைச் செறிவும் உணர்ச்சிப் பெருக்கும் கொண்டு உள்ளத்தை ஈர்க்கின்றன. பொருள்களை நேரில் பார்ப்பதைவிட எவ்வளவோ மேல் உங்களுடைய வர்ணனைகளைப் படிப்பது. உதாரணமாகக் 'கல்லின் கனவு' என்ற கதையில் தாஜ்மகாலைப் பற்றிய உங்கள் வர்ணனையின் சிறப்பில் கால் பங்குகூட இல்லை, உண்மைத் தாஜ்மகாலுக்கு. உங்கள் கதையைப் படிப்பவர்களுக்கு நேரே தாஜ்மகாலையே பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அவர்கள் நிறையப் பணம் செலவழித்து ஆக்ராவுக்குப் போய்த் தாஜ்மகாலைப் பார்ப்பார்களா? இதனால் ரயில்வேக்கு எவ்வளவு வரும்படி நஷ்டம்! அதை ஓரளவு ஈடு செய்யும் வகையில் உங்கள் புத்தகத்துக்கு அட்டை வரி ஒரு பாயிண்ட்.''

''உம்'' என்றார் கோடாலி சுரத்திலாமல்.

''இதேமாதிரி உங்களுடைய இன்னொரு கதையில் காஷ்மீரின் இயற்கையழகையும், சாலிமார் பூங்காவின் வனப்பையும், காச்மீர மங்கையரின் நளினத்தையும் வாசகர்களின் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிட்டீர்கள். இதனால் காஷ்மீர் செல்லும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை குறையத்தான் செய்யும். அதற்காக அட்டை வரி இன்னொரு பாயிண்ட்.... அப்புறம் பாருங்கள், 'வானவெளியில் காதல்' என்ற கதையில் சர்க்கஸில் 'பார்' வேலை செய்யும் கதாநாயகனையும், கம்பியின் மேல் சைக்கிள் ஓட்டும் கதாநாயகியையும் கொண்டு சர்க்கஸ் உலகத்தையே கதைக்குள் கொண்டு வந்து விட்டீர்கள். இதனால் சர்க்கஸுக்குக் கூட்டம் குறைந்து தமாஷா வரி நஷ்டமாகிறது. அதற்காக ஒரு பாயிண்ட்....

'' 'திரை அழகி' என்ற தலைப்பில் ஒரு கதை இருக்கிறதே, அதில் தமிழ் சினிமாவின் அவ்வளவு சிறப்புக்களும் அப்படியே இருக்கின்றன. அந்தக் கதையைச் சினிமாவின் மறுபிறப்பு என்றே சொல்லலாம். அந்தக் கதையில் நிராயுதபாணியாக இருக்கும் கதாநாயகன் தன்னைத் தாக்க வரும் ஆயுதம் தாங்கிய பத்துத் தடியர்களையும் நன்றாக உதைத்து வீழ்த்தி விடுகிறானே, அத்தகைய நிகழ்ச்சியைச் சினிமாவில் தவிர வேறு எங்கே பார்க்க முடியும்? அது போல், காதலனும் காதலியும் பட்டப் பகலில் நகரப் பூங்காவில் ஆடிப் பாடிக் கட்டிப் பிடித்துக் கூத்தடிப்பதாக எழுதியிருக்கிறீர்களே, அதுவும் சினிமா நிகழ்ச்சிதானே! இதைப் படிப்பவர்கள் சினிமா பார்க்கத் தேவை என்ன! இந்த வகையில் உங்கள் புத்தகத்துக்கு அட்டை வரி இன்னும் ஒரு பாயிண்ட்......''

''போதும், போதும்! மிஸ்டர் நக்ஷத்திரேயன்! இன்னும் விளக்க வேண்டாம்! மொத்தம் எவ்வளவு பாயிண்ட் ஆகியிருக்கிறது. நான் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள், போதும்!''

நக்ஷத்திரேயன் தம் கையிலிருந்த பைலைப் புரட்டினார். ''உங்கள் புத்தகத்துக்கு மொத்தம் பதினைந்து பாயிண்ட். ஒரு பாயிண்டுக்கு இருபது ரூபாய் வீதம் அட்டை வரி முந்நூறு ரூபாய் ஆகிறது. அத்துடன் நான்கு பிரதிகளின் விலையான பன்னிரண்டு ரூபாயைச் சேர்த்து மொத்தம் முந்நூற்றுப் பன்னிரண்டு ரூபாயாகிறது......''

''ஐயோ! அவ்வளவு பணமா! அது சரி, புத்தகத்தின் நான்கு பிரதிகளின் விலையையும் சேர்த்துக் கொண்டீர்களே, அது எதற்காக?''

''அதுவா? அட்டை வரிச் சட்டத்தின் ஏழாவது பிரிவின் முதல் உப பிரிவுப்படி நாட்டில் உற்பத்தியாகும் அல்லது தயாரிக்கப்படும் ஒவ்வொரு பொருளின் நான்கு மாதிரிகள் அட்டைவரி அலுவலகத்துக்கு இலவசமாக அனுப்பப்பட வேண்டும். அனுப்பத் தவறுபவர்கள் மேல் அதே பிரிவின் இரண்டாவது உப பிரிவுப்படி அபராதமோ, சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். ஆனால் உங்கள் புத்தகத்தின் பிரதிகள் எங்களுக்கு அனுப்பப்படவில்லை. இருந்தாலும் இது புதுச் சட்டமாயிருப்பதால் நாங்கள் உங்கள் மேல் கடுமையான நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. புத்தகப் பிரதிகளை நாங்களே கடையில் வாங்கிக் கொண்டு விட்டோம். அந்தச் செலவை உங்களிடமிருந்து வசூல் செய்து கொள்கிறோம். அவ்வளவுதான்!''

நக்ஷத்திரேயன் தம் கைப் பையிலிருந்து ஒரு பில் புத்தகத்தை எடுத்தார். அதில் கோடாலியின் பெயர், விலாசம், அவருடைய புத்தகத்தின் பெயர், கட்ட வேண்டிய அட்டை வரித் தொகை, கட்டுவதற்கான கடைசித் தேதி எல்லாவற்றையும் குறித்துப் பில்லைக் கிழித்துக் கோடாலியிடம் கொடுத்து விட்டுப் புத்தகத்தின் அடிக்கட்டையில் அவருடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டு, ''சரி, நான் வருகிறேன்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

ஃ ஃ ஃ

''என்ன, புத்தகத்தைக் கையில் வைத்து கொண்டே தூங்கிப் போய்விட்டீர்களா? ஏதோ நக்ஷத்திரேயன், நக்ஷத்திரேயன்' என்று உளறுகிறீர்களே, நக்ஷத்திரேயனும் லோகிதாசனும் இங்கே எங்கே வந்தார்கள்? ஏதாவது சொப்பனம் கிப்பனம் கண்டீர்களா?'' என்று சொல்லிக் கொண்டே அவரை உலுப்பினாள் அவரது சகதர்மிணி.

திடுக்கிட்டு விழித்தார் கோடாலி.

அவர் மனைவியின் கேள்விக்குப் பதில் சொன்னார், ''ஆமாம், சொப்பனந்தான்! ஆனால் எவ்வளவு பயங்கரமான சொப்பனம்! அட்டை வரி..... நக்ஷத்திரேயன்!....''

''என்ன மறுபடியும் உளற ஆரம்பித்துவிட்டீர்கள்! எல்லாம் நீங்கள் எப்போதும் கதை கற்பனை என்று அலைவதால் வந்த வினைதான்! நீங்கள் கொலை செய்த கதைகளின் ஆவிகள்தான் வந்து உங்களைச் சொப்பனத்தில் பயமுறுத்துகின்றன! இதோ பாருங்கள், சொல்லிவிட்டேன், இந்தக் கதை எழுதும் அசட்டுப் பழக்கத்தை விடுங்கள்!'' என்று முடிவாகக் கூறினாள் திருமதி கோடாலி.

அதே தீர்மானத்துக்குத்தான் வந்திருந்தார் திருவாளர் கோடாலியும். கதையும் எழுதி அதற்காக வரியும் கொடுக்க அவருக்கு இஷ்டமில்லை.... வாசகர்கள் பிழைத்தார்கள்!

பெரியவர் சந்நிதியில்

உமாசந்திரன்

"சார்! நீங்க இறங்க வேண்டிய இடம் இதுதான். அதோ தெரியுது பாருங்க, அதுதான் எஸ்டேட் பங்களா. கார்ப் பாதை ரொம்ப சுத்து. குறுக்கு வழியே நடந்தால் அஞ்சே நிமிஷத்திலே போயிடலாம்."

கண்டக்டருக்கு நன்றி தெரிவித்து விட்டுக் கைப்பெட்டியுடன் பஸ்ஸை விட்டு இறங்கினார் சுந்தரேசன். அவ



ருடன் கூடவே அகிலாவும் மாலாவும் இறங்கினார்கள். கம்பளி உடைகளும் போர்வைகளும் அடங்கிய பிளாஸ்டிக் பிரயாணப் பை ஒவ்வொருவர் கையிலும் இருந்தது.

"கண்டக்டர் காட்டின குறுக்குவழி ரொம்பச் செங்குத்தாகத் தெரி கிறதே. நல்ல வேளை ஹோல்டாலை எடுத்து வராமல் தப்பினோம்" என்றாள் அகிலா.

"இப்படி இருக்கும்னு எதிர்பார்த்துத்தான் ஹோல்டால் வேண்டாமென்று சொன்னேன். இங்கே தங்கப் போவது இன்னிக்கு ஒரு நாள்தானே. இதுக்கு மேலே என்ன தேவை இருக்கப்போகிறது?" என்றார் சுந்தரேசன்.

"கார்ப்பாதை வழியாகவே நடக்கலாமே அப்பா. இந்தக் குறுக்குவழியில் கையிலே சுமையையும் தூக்கிக் கொண்டு ஏற முடியும்னு தோணலே" என்றாள் மாலா.

"மாலா சொல்றதும் சரிதான். கார்ப் பாதை சுத்தானாலும் சிரமம் இல்லாமே வேடிக்கையாக நடந்து போயிட முடியும்" என்று ஆமோதித்தாள் அகிலா.

அதிக ஏற்றமில்லாமல் வளைந்து வளைந்து சென்ற கார்ப் பாதை வழியே நடக்க ஆரம்பித்தனர் மூவரும். சில நிமிஷங்கள்தான் நடந்திருப்பார்கள். அதற்குள் எதிர்த் திசையிலிருந்து கீழிறங்கி வந்த கார் ஒன்று அவர்களருகே வந்து நின்றது. அதை ஓட்டி வந்த வாலிபன் தலையை நீட்டி எட்டிப் பார்த்தான்.

"பங்களாவுக்குத்தானே போகணும்? ஏறிக்குங்க. நான் கொண்டு போய் விட்டுடறேன்."

"நாங்க இப்படியே நடந்து போயிடறோம். உங்களுக்கு எதுக்குச் சிரமம்?" என்றார் சுந்தரேசன்.

"சிரமமா? உங்களை அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் பஸ்ஸிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும் அப்பாதான் என்னை அனுப்பி வைத்தார்."

மூவரும் காரில் அமர்ந்ததும் வாலிபன் காரைத் திருப்பிக் கொண்டு மேல் நோக்கி விரைந்தான்.

வழியில் அவனிடம் பேச்சுக் கொடுத்து அவனைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம் என்று சுந்தரேசன் நினைப்பதற்குள்ளேயே கார் பங்களாவின் போர்ட்டிகோவில் வந்து நின்றது.

நடுத்தர வயதுடைய கம்பீரமான தோற்றம் கொண்ட ஒரு கனவான் உள்ளிருந்து பரபரப்புடன் வந்து அவர்களை வரவேற்றார். மூவரும் காரில் இருந்து இறங்கியதும் அவர் அந்த வாலிபனைப் பார்த்துக் கூறினார்: "ரமணி! தாத்தாவிடம் போய்த் தகவல் சொல்லு, இவர்கள் வந்திருக்கிறார்கள் என்று..."

வாலிபனுடைய கைப்பையைப் புரிந்துகொண்டு சுந்தரேசன் சிரித்தார். "நான் பெரியவருடைய பழைய மாணவன். பெயர் சுந்தரேசன். இப்போது அர்க்காபூரில் எஞ்சினியராக இருக்கிறேன்" என்று தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

தாத்தாவுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக வாலிபன் மாடிப்படி வழியே விரைந்து சென்றான்.

எல்லோரும் ஹாலுக்குச் சென்று ஆசனங்களில் அமர்ந்ததும் சுந்தரேசனை கூறினார்: "பெரியவருக்குச்

சதாபிஷேகம் நடக்கப் போவதாக நீங்கள் பத்திரிகையில் கொடுத்திருந்த விளம்பரத்தைப் பார்த்தேன். கட்டாயம் அதில் பங்கெடுத்துக் கொண்டு பெரியவருடைய ஆசியைப் பெற வேண்டுமென்று குடும்பத்துடன் புறப்பட்டு வந்தேன்..''

''அப்பாவிடம் பக்தியும் அன்பும் கொண்ட உங்களைப் போன்றவர்களுக்கு எப்படித் தகவல் கொடுப்பதென்று புரியாமல்தான் பத்திரிகையில் விளம்பரம் செய்தேன். நீங்களும் வருவதைப் பற்றி முன்னமே எழுதியிருந்தால் ஊட்டி ரயில் நிலையத்துக்கே காரை அனுப்பி உங்களை அழைத்து வரச் சொல்லியிருப்பேன். நீங்கள் பஸ்ஸில் வரவேண்டிய அவசியமே இருந்திருக்காது.''

''பஸ்ஸில் வருவது சிரமமாயில்லை. அதுவும் ஒருவிதத்தில் இன்பமாகத்தான் இருந்தது'' என்றார் சுந்தரேசன்.

அப்போது மாடிப்படி வழியே பெரியவர் இறங்கி வருவதைப் பார்த்ததும் எல்லோரும் எழுந்திருந்து நின்றனர். பேரனுடைய தோளில் கையை வைத்துப் பிடித்துக் கொண்டு மெதுவாக இறங்கி வந்து கொண்டிருந்தார் அவர். பழுத்த பழமான அவருடைய தோற்றத்தைப் பார்த்துச் சுந்தரேசனின் நெஞ்சம் தழுதழுத்து நின்றது. அவர் அருகில் வந்ததும் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து அவருக்கு நமஸ்காரம் செய்தார். அவரைப் பின்பற்றி அகிலாவும் மாலாவும் பெரியவரை நமஸ்கரித்தனர்.

பெரியவர் வாய் நிறைய அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தவாறே தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.


''இந்தச் சதாபிஷேக ஆடம்பரமெல்லாம் எனக்கொன்றும் தேவை இல்லை என்றுதான் நான் கணேசனிடம் சொன்னேன். ஆனால் அவன் தன் போக்குப்படி பிடிவாதமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால் நீ துர்க்காபூரிலிருந்து இவ்வளவு தூரம் என்னைப் பார்க்க வந்திருப்பாயா? அதுவும் குடும்பத்துடன்'' என்று சிரித்தவாறே அவர் சோபாவில் அமர்ந்ததும் மற்ற எல்லோரும் உட்கார்ந்து கொண்டனர். ரமணி மட்டும் தாத்தாவுக்குப் பின்னே நின்று கொண்டிருந்தான்.

''கணேசா! சுந்தரேசனைச் சாதாரணமாக நினைக்காதே. நான் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய முப்பது வருடங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் என் நிழலில் தங்கிப் படித்திருக்கிறார்கள். ஆனால் அவ்வளவு பேரிலும் சுந்தரேசனைப் போல் என் மனத்தில் நிலைத்துவிட்ட மாணவன் மிகவும் அபூர்வம்'' என்று கூறிய பெரியவர் சுந்தரேசன் பக்கம் திரும்பி, ''ஆமாம், சுந்தரேசா! அந்தக் காலத்தில் முன்னுக்கு



வரவேண்டும் என்று நீ துடித்த துடிப்பையும் உன் உழைப்பையும் விடாமுயற்சியையும் நான் அடிக்கடி நினைத்துப் பார்த்துக் கொள்வதுண்டு. உன் சுய முயற்சியாலேயே இவ்வளவு நல்ல நிலைமைக்கு நீ வந்திருப்பதைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்'' என்றார்.

''எல்லாம் தங்கள் ஆசீர்வாதம்தான்'' என்றார் சுந்தரேசன் அடக்கமாக;



''தொழில் முன்னேற்றம் எப்படி இருக்குது பாருங்க!''

உள்ளேயிருந்து சமையல்காரன் எல்லோருக்கும் காப்பி எடுத்துக் கொண்டு வந்து வைத்தான். காப்பியைப் பருகியவாறே சுந்தரேசனின் குடும்ப க்ஷேமங்களைப் பற்றி விசாரித்தார் பெரியவர்.

''மாலா ஒரே பெண்தான் எங்களுக்கு. பி. எஸ்ஸி. படித்திருக்கிறாள். அதற்கு மேலும் படிக்க வேண்டும் என்ற ஆசைதான் அவளுக்கு. ஆனால் காலாகாலத்தில் அவளை மண வாழ்க்கையில் ஈடுபடுத்த வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சரியான வரன்தான் அமையவில்லை.''

''ஏன், நம்ம ரமணிக்குக்கூடப் பொருத்தமான வயசுதான். எம். பி. பி. எஸ். பாஸ் செய்திருக்கிறான். சீக்கிரமே ஊட்டியில் டாக்டராகப் பிராக்டீஸ் ஆரம்பிக்கப் போகிறான். வரன்கள் லிஸ்டில் அவனையும் சேர்த்துக் கொள்ளலாமே?'' என்றார் பெரியவர், சிரித்துக் கொண்டே.

ரமணி மாலாவை நேருக்கு நேர் பார்த்தான். அவள் முகம் சிவந்தது. தாத்தாவின் யோசனை இருவருக்குமே மகிழ்ச்சி அளித்தது என்பதற்கு அவர்கள் முகங்களில் மலர்ந்த புன்னகை சான்று கூறியது.

வாசலில் சைக்கிள் மணி ஒலித்தது. அதைத் தொடர்ந்து, ''சார், தந்தி!'' என்ற குரல் கேட்டது.

ரமணி ஓடிச் சென்று தந்தியை வாங்கி வந்து கணேசனிடம் கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்த கணேசன் அதில் அடங்கியிருந்த செய்தியைப் பெரியவருக்கு விளக்கினான்.

''ஜகந்நாதன் என்பவர் தந்தி கொடுத்திருக்கிறார். சதாபிஷேக விழாவில் அவரும் கலந்துகொள்ள வரப் போகிறாராம்.''

''ஜகந்நாதனா! எந்த ஜகந்நாதன்? வி. ஜகந்நாதனா, ஆர். ஜகந்நாதனா?'' என்று மண்டையைச் சொறிந்தவாறு யோசனையில் ஆழ்ந்தார் பெரியவர்.

''தந்தியில் எதுவும் போடவில்லை. வெறும் ஜகந்நாதன் என்ற கையெழுத்துடன்தான் தந்தி பம்பாயிலிருந்து அடிக்கப்பட்டிருக்கிறது.''

சட்டென்று நினைவுக்கு வந்தவர் போல் பெரியவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''பம்பாயிலிருந்தா? சரி, சரி. இப்போது புரிகிறது. கே. ஜகந்நாதன்தான் தந்தியைக் கொடுத்திருக்க வேண்டும்'' என்று கூறியவர் சுந்தரேசன் பக்கம் திரும்பி, ''சுந்தரேசன், கே. ஜகந்நாதனை உனக்கு நினைவிருக்கிறதில்லையா?'' என்று கேட்டார்.

''நினைவிருக்கிறது'' என்றார் சுந்தரேசன் தெம்பில்லாமல். அவர் முகம் சட்டென்று உற்சாகமிழந்து விட்டது போல் தோன்றியது.

பெரியவர் தம் போக்கில் பேசிக் கொண்டு போனார். ''அந்த நாளில் சுந்தரேசனும் ஜகந்நாதனும் எப்படி உயிருக்குயிராகப் பழகி வந்தார்கள் தெரியுமா? தனித் தனியே அவர்களைப் பார்க்கவே முடியாது. ஏன் சுந்தரேசன், அதே நட்பு அப்புறமும் நீடித்திருக்க வேண்டுமே! அடிக்கடி ஒருவரையொருவர் சந்திக்கும் வாய்ப்புகள் நேர்ந்திருக்குமில்லையா?''

''ஓ, நேராமலென்ன?'' என்றார் சுந்தரேசன் அசுவாரசியமாக.

''ரமணி! காரை எடுத்துக் கொண்டு ஊட்டி ஸ்டேஷனுக்கே போய் ஜகந்நாதனை அழைத்துக் கொண்டு வந்துவிடு'' என்றார் பெரியவர்.

பங்களாவில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றதும் சுந்தரேசன் ஒரு பெருமூச்சுடன் கூறினார்: ''ஜகந்நாதன் வருவான் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.''

''வந்தால் வரட்டுமே, நமக்கென்ன?''

''மறுபடியும் அவன் முகத்திலேயே விழிப்பதில்லை என்று சபதம் செய்து கொண்டிருந்தேன். இப்போது இவ்வளவு நெருக்கத்தில் அவனைச் சந்தித்தால் நான் எப்படி மாறுவேனோ எனக்குத் தெரியாது. ஒரு நல்ல காரியத்துக்காக வந்த இடத்தில் வீண் ரசாபாசம் நேர்ந்துவிடக் கூடாதே என்று பயப்படுகிறேன்.''

''நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்? மிஞ்சிப் போனால் நாளை ஒரு பொழுது. அவர் இருக்கும் பக்கம் திரும்பிப் பாராமலே இருந்து விடுங்களேன்.''

''ஆனால் பெரியவர் எதிரில் அப்படி இருந்துவிட முடியாதே! என்னையும் அந்தத் துரோகியையும் பற்றி அவர் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா? பள்ளி நாட்களில் வெள்ளை மனத்துடன் நான் அவனுடன் உறவாடியதைப் பற்றியே பெரியவர் இன்னும் நினைத்

துக் கொண்டிருக்கிறார்: அதெல்லாம் கானல் நீராகக் கரைந்து போய்விட்டதென்று அவருக்கு எப்படித் தெரியும்? ஜகந்நாதன் அப்படியொரு விஷப் பூச்சியாகத் தலையெடுப்பான் என்று நானே எதிர்பார்க்கவில்லையே?''

'' நீங்கள் ஏன் அதைப் பற்றியெல்லாம் நினைத்து அநாவசியமாக மனத்தைக் குழப்பிக் கொள்கிறீர்கள்? அவர் வரும் சமயத்தில் உங்களுக்கு இங்கே இருக்க விருப்பமில்லாவிட்டால் இப்போதேகூடப் பெரியவரிடம் ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு இங்கிருந்து புறப்பட்டு விடலாம்....''

''வந்த காரியத்தை முடிக்காமலே?''

''ஏன், பெரியவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தாயிற்று. நாளைக்கு இருந்தால் தானா? சதாபிஷேகக் காணிக்கையைப் பெரியவரிடம் இன்றே செலுத்தி விட்டால் வந்த காரியம் முடிந்த மாதிரிதானே!''

''அந்தத் துரோகிக்குப் பயந்து கொண்டு ஓடச் சொல்கிறாயா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. வேண்டாததை நினைத்து மனத்தைக் குழப்பிக் கொள்ளாமல் சந்தோஷமாயிருங்கள் என்றுதான் சொல்கிறேன்'' என்றாள் அகிலா.

உண்மையில் ஜகந்நாதன் வரும் சமயம் அங்கு இருந்து அவனை நேருக்கு நேர் சந்திக்கும் வேதனையைவிட அங்கிருந்து ஓடிவிடுவதே சுலபமாகத் தோன்றியது சுந்தரேசனுக்கு. ஜகந்நாதனுடைய வருகையைப் பற்றிய செய்தி அவர் மனத்தில் விளைவித்த குழப்பம் நினைத்த மாத்திரத்தில் மறைந்து விடுவதாயில்லை. அவர் எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் ஜகந்நாதனுடைய துரோகத்தைப் பற்றிய அந்தச் சிந்தனையே மீண்டும் மீண்டும் தோன்றி அவர் மனத்தை வதைத்துக் கொண்டிருந்தது. இதமான வெந்நீரில் அலுப்புத் தீர அவர் குளித்துக் கொண்டிருந்த போதும் அதே நினைவுகளில்தான் அவர் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ஜகந்நாதன் எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டு விட்டான்? சிறு வயதில் அவ்வளவு தூரம் பெருந்தன்மையே உருவாக அவன் நடந்து கொண்டதெல்லாம் வெறும் போலிதானா? சுந்தரேசன் வறுமையுடன் போராடிக் கொண்டு பள்ளியில் படித்து வந்த அந்த நாட்களில் செல்வக் குடும்பத்தில் பிறந்த ஜகந்நாதன் எப்படியெல்லாம் அவருக்கு உற்ற துணையாயிருந்து வந்தான்! அதற்குப் பின்பு இருவரும் வெவ்வேறு திசைகளில் சென்றுவிட்ட போதிலும் ஜகந்நாதன் பழைய பாசத்தைச் சிறிதும் தளர்த்திக் கொள்ளாமல் சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் சுந்தரேசனுக்கு உதவியாயிருந்து வந்தவன்தானே! அவனுடைய பக்கபலம் இல்லாவிட்டால் சுந்தரேசன் பொறியியல் படிப்பை முடித்திருக்கவே முடியாதே!

அந்த நன்றியைக் கருதித்தான் சுந்தரேசன் பொறியியல் பட்டம் பெற்று வெளிவந்ததுமே நாலா பக்கத்திலிருந்தும் அவரைத் தேடி வந்த வேலை வாய்ப்புக்களையெல்லாம்



ராஜன்பாபு எழுதியது சரியா?

....தலைமை ஆசிரியர் கூப்பிடுகிறார் என்னும் செய்தி கேட்டு நடுநடுங்கிக்கொண்டு போனேன். அங்கே போய்ச் சேர்ந்த உடன் பயம் அகன்று விட்டது. ''நீ 'டபுள் பிரமோஷன்' பெற்றிருக்கிறாய்! ஏழாவதற்குப் பதில் ஆறாவது வகுப்பு போகிறாயா?'' என்றார். எனக்கோ ஒருபுறம் மகிழ்ச்சி - மறுபுறம் வியப்பு!

—என் வரலாறு நூலில் பாபு இராஜேந்திர பிரசாத்

ராஜன் பாபு எழுதியது சரிதானா? அல்லது அச்சுப் பிழையா? 79-ம் பக்கம் பார்க்க

புறக்கணித்துவிட்டு ஜகந்நாதன் புதிதாக ஆரம்பித்திருக்கும் தொழில் நிறுவனத்தில் எஞ்சினியராகச் சேர்ந்தார். தலைக்கு மேல் கடன் வாங்கித்தான் ஜகந்நாதன் அந்தத் தொழில் நிறுவனத்தை ஆரம்பித்திருந்தான் என்பது அங்கு சேர்ந்த பிறகுதான் அவருக்குத் தெரிந்தது. அவனுடைய குடும்பச் சொத்தெல்லாம் அதற்குள் கரைந்து விட்டிருந்தது. பல இன்னல்களுக்கிடையேதான் அவன் அந்தத் தொழில் நிறுவனத்தை ஆரம்பித்திருந்தான். அதை யறிந்துதான் சுந்தரேசன் ஊதியம் சொற்பமாயிருப்பதையும் பொருட்படுத்தாமல் அவனுடைய தொழிலை முன்னுக்குக் கொண்டு வருவதற்குத் தமது திறமை முழுவதையும் அர்ப்பணித்து அவனுடைய நன்றிக் கடனைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்தார். தன் தொழிலின் வளர்ச்சிக்கு ஜகந்நாதன் ஒவ்வொரு படியிலும் பொய்யான நடவடிக்கையையே கையாண்டு வருகிறான் என்ற கசப்பான உண்மை சுந்தரேசனுக்கு வேதனையளித்தது. இருந்தாலும் அந்தத் துறையில் அத்தகைய தீங்குகளெல்லாம் தவிர்க்க முடியாததாயிருக்கலாம் என்று நினைத்து மனத்தைத் தேற்றிக் கொண்டிருந்தார். ஆனால் தன்னுடைய மோசடியில் ஜகந்நாதன் அவரையும் உடந்தையாக்க நினைப்பான் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அது மட்டுமல்ல; அந்த

மோசடி அம்பலமானபோது அதன் பழியைச் சுந்தரேசன் மேலேயே சுமத்தத் துணிந்து விட்டானே !

வைட்டமின் பிஸ்கட்டுகள் என்ற ஆடம்பரமான பெயரில் பிஸ்கட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலையைத்தான் ஜகந்நாதன் நடத்தி வந்தான். அவை செலவாவதற்கு உள்ளூர் ஜனங்களை அவன் நம்பியிருக்கவில்லை. உற்பத்தியில் பெரும் பகுதி ராணுவத் தேவைகளுக்கே பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. அதற்காகப் பெரிய புள்ளி ஒருவரைப் பிடித்து வைத்து அவருடைய சிபாரிசின்பேரில் கணிசமான ஆர்டர்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான் ஜகந்நாதன். தேவைக்கும் தயாரிப்புக்கும் போட்டி இருந்து கொண்டே இருக்கும் அளவுக்குத் தொழில் மிகவும் சுறுசுறுப்பாகத்தான் நடந்து கொண்டிருந்தது.



'' புதுப்படம் ரிலீஸாகிற அன்றே ஓசிப் பாஸ் கேட்கிறீர்களே! இரண்டு நாள் போகட்டும்.''

'' இரண்டு நாள் இந்தப் படம் ஓடும்னும் என்ன நிச்சயம்?''

அந்தத் தொழிற்சாலையில் யந்திரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் எஞ்சினியராகத்தான் சுந்தரேசன் பணியாற்றி வந்தார். ஒரு நாள் ஜகந்நாதன் முகமலர்ச்சியுடன் அவரிடம் வந்தான். ''சுந்தரேசன்! உன்னுடைய ஒத்துழைப்பால் என்னுடைய தொழிற்சாலை மிகவும் நன்றாக நடந்து வருகிறது. நீ சாதாரண எஞ்சினியராக இருந்தால் போதாது. உன்னையே உற்பத்திக்குப் பொறுப்பதிகாரியாக்கத் தீர்மானித்திருக்கிறேன். இப்போதிருந்தல்ல, நீ வேலையில் சேர்ந்த நாளிலிருந்தே. இன்றிலிருந்து உனக்குச் சம்பள உயர்வு மட்டும் கொடுக்கப் போவதில்லை. லாபத்திலும் உனக்குப் பங்கு இருக்கும்படியான வகையில் உன்னை இந்தக் கம்பெனியின் பாகஸ்தராகவும் ஆக்கிக் கொண்டு அதற்கான பத்திரங்களைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன்....''

ஜகந்நாதனின் இந்த வார்த்தைகள் சுந்தரேசனின் மனத்தை நெகிழச் செய்து விட்டன. நண்பரென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று மனம் பூரித்தார்.

அவ்வளவும் நயவஞ்சக நடிப்பு என்பது விரைவிலேயே வெளியாகி விட்டது. கலப்படம் செய்த மாவைக் கொண்டுதான் அந்தத் தொழிற்சாலையில் பிஸ்கட்டுகள் தயாராகி வந்தன என்றும் அவற்றை உபயோகித்து வந்த ராணுவ முகாம்களில் பலவிதமான வயிற்றுக் கோளாறுகள் நேர்வதற்கு அவை காரணமாயிருந்தன என்றும் குற்றச்சாட்டுகள் உருவாகி அதற்கான விசாரணை ஆரம்பமான போது ஜகந்நாதன் ''எனக்கு ஒன்றுமே தெரியாது. உற்பத்திக்குப் பொறுப்பதிகாரி சுந்தரேசன்தான்'' என்று ஒரேயடியாகச் சாதித்து விட்டான்.

நண்பனின் அந்த நம்பிக்கைத் துரோகம் சுந்தரேசனை ஒரேயடியாக நாசமாக்கிவிடவில்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் நண்பனுக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஆனால் நீதி தன் வேலையை நேர்மையாகச் செய்தது. மேலும் நுணுக்கமான விசாரணை நடந்தபோது சுந்தரேசன் குற்றமற்றவர் என்பது நிரூபணமாகி விட்டது. அந்த முடிவு அவரிடம் கூறப்பட்டதும் சுந்தரேசன் ஒரு நிமிஷம் கூட அங்கு தங்கியிருக்கவில்லை. மறுபடியும் ஜகந்நாதனுடைய முகத்திலேயே விழிப்பதில்லை என்ற உறுதியுடன் அங்கிருந்து சென்று விட்டார்.

பதினைந்து வருடங்கள் சென்றுவிட்டன. இப்போது மீண்டும் புனித நினைவுகள் நிறைந்த விழாவில் பக்தியுடன் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று வந்திருந்த இந்தச் சூழ்நிலையில்...

ஸ்நானத்தை முடித்துக் கொண்டு மாற்றுடை அணிந்து அவர் வெளியே வந்தபோது, ''ஸார், ஊட்டி ஸ்டேஷனிலிருந்து உங்கள் சிநேகிதரை அழைத்து வந்துவிட்டேன். தாத்தா உங்களைக் கூப்பிடுகிறார்'' என்று கூறியவாறு ரமணி உள்ளே வந்தான்.

''இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்'' என்று ரமணியை அனுப்பிவிட்டுச் சுந்தரேசன் அகிலாவின் பக்கம் திரும்பினார்.

'அகிலா! இப்போது என்ன செய்வது? அந்தத் துரோகியை இப்போது நேருக்கு நேர் பார்த்தால்...''

''பொறுமையாக இருங்கள். உங்கள் மனத்தில் ஆயிரம் இருந்தாலும் பெரியவர் எதிரே எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது. உங்கள் இருவரையும் பற்றிப் பெரியவர் செய்து கொண்டிருக்கும் கற்பனை சிதறிவிடக் கூடாது'' என்றாள் அகிலா.

சுந்தரேசன் பெருமூச்செறிந்தார்.

''நீ சொல்வது சரிதான். உண்மையை அறிந்தால் அந்த அதிர்ச்சியைப் பெரியவரால் தாங்கிக் கொள்ள முடியாது.''

''நாங்களும் வரவேண்டுமா?''

''அவசியமில்லை. நான்மட்டும் தலையைக் காட்டிவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று கூறி ஹாலுக்கு விரைந்தார் சுந்தரேசன்.

ஹாலில் பெரியவர், கணேசன், ஜகந்நாதன் மூவரும் உட்கார்ந்திருந்தனர். ரமணியை அங்கே காணவில்லை. சுந்தரேசன் மாடியிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்ததும் ஜகந்நாதன் முகமலர்ச்சியுடன் எழுந்து நின்றார். பதினைந்து ஆண்டுகள் கழிந்தும் அந்த முகத்திலிருந்த மலர்ச்சி சிறிதும் மாறவில்லை என்பதை வியப்புடன் கவனித்தவாறே சுந்தரேசன் அவரை நெருங்கினார்.

உவகை பொங்க ஓடி வந்து சுந்தரேசனைக் கட்டித் தழுவிக் கொண்டார் ஜகந்நாதன்.

ரூ. 10,000 சேமித்த ஒரு விவசாயி ஒவ்வொரு ஆண்டும் ரூ. 600 நஷ்டமடைந்து வந்த செய்தி உங்களுக்குத் தெரியுமா?

அவருடைய பணத்தை பாங்கில் போட்டு வைத்தால், அது பத்திரமாக இருப்பதுடன் வட்டியோடு வளரவும் செய்யும் என்பதை அவருக்குப் புரிய வைப்பதற்குள் பாங்க் அதிகாரிக்கும் அவருடைய விளம்பர அலுவலர்களுக்கும் மிகவும் சிரமமாகப் போய் விட்டது.

பிறகு தான் அவர் அதிகாரியை தமது வயலுக்கு அழைத்துச்சென்றார். அங்கே மண்ணைத் தோண்டி, நோட்டுகளாகப் புதைத்து வைத்திருந்த 10,000 ரூபாயை எடுத்து, ஸ்டேட் பாங்கிலே ஒரு சேமிப்புக் கணக்கைத் தொடங்கினார்—பி.டி.ஐ.

ஸ்டேட் பாங்கில் போட்டுவைத்திருந்தால் இந்த ரூ. 10,000-ன் மீது கிடைத்திருக்கும் வட்டியான ரூ. 600/- அவருக்கு இப்போது நஷ்டம். ஏன், இந்த ரூபாய் பத்தாயிரத்தையும் கூட அவர் இழந்திருக்கக்கூடும். ஏனெனில் கரையான்களும் மற்ற பூச்சிகளும் ரூபாய் நோட்டுகளைக் கொண்டு ஒரு விருந்தே நடத்தியிருக்கலாமே! இந்த விவசாயிக்குக் கிடைத்த அதிருஷ்டம் உங்களுக்கு இல்லாதிருக்கலாம் எனவே உங்கள் பணத்தை ஸ்டேட் பாங்கிலே போட்டு வையுங்கள்!

நாடெங்கும் 2,300-க்கு மேலான ஆபீசுகளை உடைய ஸ்டேட் பாங்கும், அதன் சப்ஸிடியரிகளும் உங்கள் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே சேவை செய்யக் காத்திருக்கின்றன.

ஸ்டேட் பாங்கின் வெளி அதிகாரிகள் தடமற்ற கிராமங்களுக்கும் சென்று கிராமவாசிகளுக்கு யோசனைகள் கூறி, சேவை செய்து வருகிறார்கள். ஸ்டேட் பாங்கின் மூலம் சேமித்து நலம் பெறுங்கள்.

நீதி: உங்கள் பணத்தை ஒளித்து வைக்காதீர்கள் ஸ்டேட் பாங்கில் போட்டு அதை வளரச் செய்யுங்கள். இது உங்களுக்கும் உதவி, நாட்டுக்கும் நல்லுதவி.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

''ஆஹா, இவ்வளவு பெரிய சந்தோஷம் இங்கே எனக்காகக் காத்திருக்கப் போகிறது என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை'' என்று கூறினார், சுந்தரேசனின் முதுகை உரிமையுடன் தட்டியவாறு.

அந்தக் காட்சியைப் பார்த்துப் பெரியவரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி நின்றது. கண்களைத் துடைத்தவாறு எழுந்து அவர்களருகே வந்தார். இருவரையும் ஒருங்கே அணைத்துக் கொண்டு 'உங்களுடைய நட்பு எப்போதும் இப்படியே இளமை குன்றாமல் இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தினார்.

உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு எல்லோருடனும் உட்கார்ந்து சிறிது நேரம் ஒப்புக்குப் பேசிக் கொண்டிருந்த பிறகு சுந்தரேசன் மேலே தமது அறைக்குத் திரும்பி வந்தபோது மாலா மகிழ்ச்சி ததும்ப அவரை எதிர் கொண்டாள்.

''அப்பா! சற்று முன் ரமணி என்னைத் தோட்டத்தில் சந்தித்தார். என்னை அவருக்குப் பிடித்திருக்கிறதாம். நான் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாகக் கிடைத்தால் அதைப் பெரிய பாக்கியமாகக் கருதுவாராம்.''

சுந்தரேசன் அவளை வியப்புடன் பார்த்தார்: ''ரமணியின் கருத்துப் புரிந்து விட்டது! உன் கருத்து?''

''அதைப் பற்றி அவளிடம் கேட்க வேண்டுமா என்ன?'' என்றாள் அகிலா மிகுந்த குதூகலத்துடன்.

''சொல்லுங்கள், அப்பா! உங்களுக்குச் சம்மதம்தானே?''

மாலாவின் தலையை அன்புடன் வருடினார் சுந்தரேசன். ''நான் சொல்ல என்ன இருக்கிறது மாலா? பெரியவரின் ஆசிதான் எப்படியெப்படியோ வேலை செய்கிறது!'' என்று தழுதழுக்கக் கூறினார்.

அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு படுக்கைக்குச் செல்ல ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது கதவு தட்டும் சத்தம் கேட்டது. சுந்தரேசன் கதவைத் திறந்ததும் உள்ளே வந்த ஜகந்நாதனைப் பார்த்து ஸ்தம்பித்து நின்றார்.

உரிமையுடன் அவரை அணைத்தவாறு ஜகந்நாதன் ஒரு சோபாவில் அவரை உட்கார்த்தித் தானும் அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். சுந்தரேசனுடைய இரு கைகளையும் தம் கைகளில் எடுத்துக் கொண்டு அவர் கூறினார்:

''சுந்தரேசன்! நான் உனக்கு மறக்க முடியாத துரோகம் செய்து விட்டேன் என்பது உண்மைதான். இன்னும் அந்த வேதனை உன் மனத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். பெரியவருக்காகத்தான் என்மேலிருந்த கோபத்தையெல்லாம் நீ கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாயென்று எனக்குத் தெரியும்.''

ஜகந்நாதனுடைய பிடியிலிருந்த தம் கைகளை விடுவித்துப் பின்னுக்கு இழுத்துக் கொண்ட சுந்தரேசன் கடுமையான குரலில் பேசினார். ''புனிதமான நினைவுகளுக்காகப் பெரியவர் சந்நிதிக்கு வந்தேன். துரோகம் நிறைந்த உன்னுடைய பாப நினைவுகள் இங்கேயும் என்னைத் தொடருமென்று நான் எதிர்பார்க்கவில்லை.''

''சுந்தரேசா! நான் உனக்குச் செய்த துரோகத்துக்குச் சரியான தண்டனை அனுபவித்துவிட்டேன். நீ என்னை வெறுத்து ஒதுக்கிய நாளிலிருந்தே நான் அனுபவித்த துன்பத் தீயில் என் பாப மூட்டைகளெல்லாம் கருகிச் சாம்பலாகி விட்டன. நான் பழைய ஜகந்நாதனில்லை சுந்தரேசா. புது மனிதனாகி விட்டேன்!''

சுந்தரேசன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

ஜகந்நாதன் உணர்ச்சி மிகுதியில் பேசிக் கொண்டிருந்தார்.

''நீ என்னை வெறுத்து ஒதுக்கினாலும் உன் மனத்தின் ஒரு மூலையில் என்னைப் பற்றிய அன்பு ஒட்டிக் கொண்டிருந்தது என்று எனக்குத் தெரியும். இல்லாவிட்டால் துன்பத் தீயில் கருகிப் போயிருக்க வேண்டிய நான் மீண்டும் தலைதூக்கித் தழைத்திருக்க முடியுமா? நேர்மையிலும் நல்வாழ்வு காண முடியும் என்பதை எனக்கு உணர்த்தியவனே நீதானே?''

சுந்தரேசன் அசையவில்லை. அவர் பார்வை எங்கோ சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஜகந்நாதன் ஒரு பெருமூச்சுடன் கூறினார்: ''என்னுடைய கதையை எல்லாம் இப்போது எதற்காகக் கூறிக் கொண்டிருக்க வேண்டும்? ஒன்று மட்டும் உன்னை நான் கேட்டுக் கொள்வேன். புனித நினைவுகளுக்காகப் பெரியவர் சந்நிதிக்கு வந்திருப்பதாய்க் கூறினாய். அந்த நினைவுகளில் மற்ற மாசெல்லாம் மறைந்துவிட வேண்டாமா? யோசித்துப் பார். பெரியவர் சந்நிதியிலிருந்து மனத்தில் மாசுடன் திரும்பினால் பெரியவருடைய ஆசிக்கே அர்த்தமில்லாமல் போய் விடும்...''

கண்களைத் துடைத்துக் கொண்டு ஜகந்நாதன் எழுந்து சென்ற பின்பும் சுந்தரேசன் அசைவற்று உட்கார்ந்திருந்தார். அகிலா அவர் அருகில் வந்து பரிவுடன் அவர் தோளில் கைவைத்ததும்தான் அவருக்கு உணர்வு வந்தது. அவரால் எதுவுமே பேச முடியவில்லை. பொங்கிப் பொங்கி அழுதார்.

மறுநாள் சதாபிஷேக வைபவத்தில் ஆசியின் வடிவமாக அமர்ந்திருந்தார் பெரியவர். ஜகந்நாதனும் சுந்தரேசனும், மாலாவும் ரமணியும், இணை இணையாக வந்து அவர் பாதங்களில் வணங்கியபோது எல்லாம் புரிந்து கொண்ட புன்னகையில் அவருடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள் விகசித்தன.

விடை: ராஜன்பாபு எழுதியதில் தவறே இல்லை. வகுப்பு முறையைத் தலைகீழாகக் கணக்கிடும் வழக்கம் முன்பு பீகாரில் இருந்து வந்தது.

— கி. பீமாராவ்.

வட்ட மேஜை

கடந்த இரண்டு வாரங்களாக மதுரை நகரில் கடும் தண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது. குடிநீருக்காகப் பெண்களும் குழந்தைகளும் நகரசபைக் குழாய்களில் மணிக் கணக்காகத் தவம் செய்கிறார்கள். குழாய்களில் தண்ணீர் வரவில்லை. 'கண்ணீர்' போன்ற ஒருசில துளிகளே வருகின்றன. இந்தத் துளிகளைப் பெறுவதற்குச் சில சமயங்களில் மக்களிடையே பெரும் போரே நிகழ்கிறது. அந்த வருந்தத்தக்க நிலைக்குக் காரணம் வறட்சியல்ல. கோச்சடை நீர் ஏற்ற நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் அடிக்கடி பழுதாகிவிடுவதே காரணம். மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றும் பணியில் செயல்படுகின்ற இந்த முக்கியத்துவம் வாய்ந்த இயந்திரங்களை அடிக்கடி பழுதடைய விடாமல் நகரசபை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக மிக அவசியம். நகரசபை அதிகாரிகளின் கவனக் குறைவு மக்களின் கஷ்டத்துக்கு அதுவும் குறிப்பாகத் தண்ணீர்ப் பஞ்சத்துக்குக் காரணமாக இருப்பதை அவசியம் தவிர்க்க வேண்டும்.

மதுரை, எஸ். கருணாநிதி
7–3–69 காரியதரிசி,
மதுரை நகர் நல சங்கம்

திரு பீ. வி. சபரிராஜன் அளித்த 'தெய்விகச் சட்டம்' என்ற கட்டுரையில் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பதில் காந்திஜி கண்டிப்பாக இருந்தார் என்பதை வலியுறுத்துகிறார். ஆனால் இன்று நம் நாட்டில் பல ராஜ்யங்களில் லாட்டரிச் சீட்டு ஆரம்பித்துள்ளார்கள். இவ்வகையில் வரும் பணம் உழைத்து அடையக் கூடியதா? இப்படித்தான் காந்திஜியின் கொள்கைகளைப் பின்பற்றுவதா?

சென்னை
6–3–69 எஸ். நளினி

மின்சாரக் கல்லுரலை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் மாயூரம் ரயிலடியைச் சேர்ந்த ஏ. ஆர். வி. அண்டு சன்ஸ் என்கின்ற ஹோட்டல் உரிமையாளர்களே. இவர்கள் கண்டுபிடித்து. ஐந்து வருடங்கள் பேடண்ட் உரிமை செய்திருந்தார்கள்.

மாயூரம்
6–3–69 வி. எஸ். ஆர்.

'பம்பாயில் பத்து நாள்' என்ற கட்டுரையைப் படித்தேன். எனக்கு உடனே ஞாபகம் வந்தது மிஸ் மேயோவின் 'மதர் இந்தியா'. அடுத்தபடி 'டிரெயின் இன்ஸ்பெக்டிரஸ்' **(Drain Inspectoress)** என்ற தலைப்பில் மகாத்மா விடுத்த பதில்.

'பம்பாயில் நாற்பது வருடம்' என்ற தலைப்பில் நான் எழுதுவது :

இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்து மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலிருந்து வந்த பல ஜாதி ஜனங்கள் வசிக்கும் பம்பாயின் அமைதி வியக்கத்தக்கது. பெரிய நகரங்களில் உள்ளதை விட பம்பாயில் மோசடி பித்தலாட்டம், களவு முதலியவை மிகவும் குறைவு என்று கண்டிப்பாகச் சொல்லலாம்.

பம்பாய் – 51
8–3–69 மணி

சென்ற 9–3–69 இதழில் வெளிவந்த திரு கி. ராஜேந்திரன் அவர்களின் 'பம்பாயில் பத்து நாள்' என்ற பயணக் கட்டுரை சிறு கதை போன்று சுவையாக இருந்தது. பம்பாயின் தொழில் முன்னேற்றம் — நாகரிகக் கலப்படம் — பல மொழி பரிமாற்றம் — வீட்டு வசதி — விஞ்ஞான வளம் — எல்லாவற்றையும் அலைந்துச் செல்லும் பாணி சிறப்பாயிருந்தது. பயணக் கட்டுரையிலும்தான் எத்தனை சொல் நயம், பொருள் நயம்.

காசம்
8–3–69 கோவி. பரஞ்ஜோதி

பம்பாயில் பத்து நாட்கள் படித்தேன்! கட்டுரை மிக நன்றாக இருக்கிறது. தாங்கள் பதினைந்து நாட்கள் தங்கி இருந்திருக்கலாம். இன்னும் கொஞ்சம் நீண்ட கட்டுரை கிடைத்திருக்குமல்லவா ?

வாரியார் சுவாமிகளைப் பற்றி 'கல்கி' என்ன எழுதுகிறது என்று லட்சோப லட்சம் மக்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். அந்தக் கொடிய சம்பவம் பற்றிய சுருக்கமான வன்மை வாய்ந்த கட்டுரையில் கல்கி எல்லோரது நன்மதிப்பையும் பெற்றுவிட்டது.

தஞ்சை – 1
8–3–69 உ. கி. உமாபதி

கல்கி 9–3–69 இதழில் வட்டமேஜைப் பகுதியில் நெய்வேலி அன்பர் ஒருவர் 1967 பொதுத் தேர்தலில் "டேப் ரிகார்டர்" பயன்படுத்தியது பற்றிக் கூறியிருந்தார்.

ஒரு சிறிய திருத்தம். 1952ல் துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய வழக்கறிஞர் திரு பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 1957 பொதுத் தேர்தலில் திருச்சி பாராளுமன்ற வேட்பாளராக நின்றபொழுது தொகுதி வாக்காளர் பெருமக்களுக்குத் தமது வேண்டுகோள் சொற்பொழிவினை டேப் ரிகார்டரில் பதிவு செய்து கிராமந்தோறும் ஒலி பரப்பினார் என்பதைக் கூறி 1957 பொதுத் தேர்தலிலேயே டேப் ரிகார்டர் பயன்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகாதேவி
8–3–69. சரோஜினி மணாளன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4902
Registered as a Newspaper in Ceylon